# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு
விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 | கதிர் 121 | பங்குனி 13ஆம் நாள் | செவ்வாய்க்கிழமை 27 மார்ச் 2018 | வள்ளுவர் ஆண்டு 2049


## பிரதி மேயராக ஈசன் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி மேயராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் துரைராசா ஈசன் நேற்றுப் போட்டியின்றித்தெரிவு 24

## கட்டுப்படாத உறுப்பினர்கள்!

யாழ்ப்பாணம், மார்ச் 27
உள்ளூராட்சி மன்றங்களில் இரகசிய வாக்கெடுப்புக் கோரப்பட்டா 24

## தடுக்கி விழ முற்பட்ட சிறில்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் தேர்வுக்காக வாக்களிக்கச் சென்ற தமிழ்த் தேசியக் 24

# யாழ். மாநகர சபை கூட்டமைப்பு வசம்

## இ.ஆர்னோல்ட் மேயராகத் தெரிவு



யாழ்ப்பாணம், மார்ச் 27
பரபரப்பாக எதிர்பார்க்கப்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆட்சியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் கைப்பற்றியது. புதிய மேயராக இமானுவேல் ஆர்னோல்ட் தெரிவு செய்யப்பட்டார்.
சர்ச்சைக்குரிய புதிய தேர்தல் 25



## சாவகச்சேரி நகரில் கூட்டமைப்பு ஆட்சி

சாவகச்சேரி, மார்ச் 27
சாவகச்சேரி நகரசபையின் தவிசாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான திருமதி சிவமங்கை இராமநாதனும் பிரதித் தவிசாளராக அதே கட்சியைச் சேர்ந்த அருணாசலம் 25

## சாவகச்சேரி நகரசபையின் முதலாவது பெண் தவிசாளர்

சாவகச்சேரி, மார்ச் 27
சாவகச்சேரி நகர சபையின் 53 வருட வரலாற்றில் முதற்தடவையாக பெண் ஒருவர் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மேலும் 3 பெண்கள் உறுப்பினர்களாகப் பதவியேற்றுள்ளனர். 24

## உத்தரவை மீறிய முன்னாள் மேயர்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ். மாநகர சபை மேயரைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் இரண்டாம் 24

## அனைவரோடும் ஆலோசித்தே யாழ். நகர் அபிவிருத்திகள்

### புதிய மேயர் ஆர்னோல்ட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாண மாநகரத்தின் அபிவிருத்தியில் நல்லூர் மற்றும், நல்லூர் இராசதானி உட்பட வரலாற்றுப் பொக்கிசங்கள் பாதுகாக்கப்படும். சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசனை நடத்திய பின்னரே அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படும். 24

## யார் அந்தக் கறுப்பாடு?

யாழ்ப்பாணம், மார்ச் 17
யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் தெரிவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார் 24

## சாவ. நகரின் வளர்ச்சிக்காக ஒன்றுபட்டுச் செயற்படுவோம்

### புதிய தவிசாளர் சிவமங்கை தெரிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 27
சாவகச்சேரி நகரசபையின் தவிசாளராக ஐந்து கட்சிகளின் உறுப்பினர்கள் ஒன்றிணைந்து தேர்ந்தெடுத்துள்ளமை மகிழ்ச்சி. சாவகச்சேரி நகரசபையைப் பொறுத்தவரையில் ஆறு கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பதவியேற்றுள்ளனர். 24

## தேசியத்துக்கு எதிரானோர் ஒன்றிணைவது ஆபத்தானது

### தமிழ் மக்கள் முன்னணி அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27
ஒற்றையாட்சியை ஏற்று தமிழர் தேசத்தைக் கூறுபோடத் துடிக்கும் சிங்கள பேரினவாதக் கட்சிகளுடனும் ஒட்டுக் குழுக்களுடனும் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைப்பது, தமிழ் மக்களின் எதிர்காலத்தை அபாய நிலைநோக் 25

## அதிர்ஷ்டம் இல்லாத மணிவண்ணன்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாண மாநகர சபையின் மேயர் தேர்வில் போட்டியிட்ட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளர் அதிர்ஷ்டம் இல்லாததால் குலுக்கல் முறையில் 24

## பருத்தித்துறை ஆட்சியை கைப்பற்ற முயற்சிப்போம்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27
பருத்தித்துறை நகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூடிய ஆசனங்களைப் பெற்றிருந்தாலும், அங்கும் ஆட்சி அமைப்பதற்கான முனைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது. கூட்டமைப்பின் சார்பில் தவிசாளர் பதவிக்கு பெயர் பிரேரிக்கப்படும் 25

## ஈ.பி.டி.பி. ஆதரவுடன் கூட்டமைப்பு சாவகச்சேரியில் ஆட்சியமைத்தது

யாழ்ப்பாணம், மார்ச் 27
சாவகச்சேரி நகரசபையின் தவிசாளராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான திருமதி சிவமங்கை இராமநாதனும் பிரதித் தவிசாளராக அதே கட்சியைச் சேர்ந்த அரு 25

## மீளப் போட்டியிடக் கோரிய மணிக்கு அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 27
யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் போட்டியில் வாக்கெடுப்பில் தோற்கடிக்கப் 24

## வடக்கில் அனைத்து சபைகளையும் வெல்லக் கூட்டமைப்பு முயற்சிக்கும்

### சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

சாவகச்சேரி, மார்ச் 27
தேர்தலின்போது கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் நிர்வாகத்தை நடத்தவேண்டுமென நாம் விரும்பிய போதும் ஏனையவர்கள் அதை ஏற்கவில்லை. அதனால் வடமாகா 25

## விஜயகாந்தின் ஆசைக்கு தடைபோட்ட அதிகாரிகள்

யாழ்ப்பாணம் மார்ச் 27
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தால் சிறைத் 24

## வல்வெட்டித்துறை தொடர்பில் உறுதியான முடிவேதுமில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 27
வல்வெட்டித்துறை நகர சபைத் தவிசாளர் தெரிவுக்கான அமர்வு இன்று நடைபெறவுள்ள நிலையில், அங்கு ஆட்சி அமைப்பது யார் என்பது தொடர்பில் நேற்று முன்னிரவு வரையில் உறுதியான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சி 25

## கேரதீவில் கோர விபத்து குடும்பத்தலைவர் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணம், கேரதீவுப் பகுதியில் நேற்று இரவு நடந்த விபத் 25

## வீதியோரத்தில் வீசப்பட்ட தென்னோலை எமனானது

### குடும்பப் பெண் உயிரிழப்பு

சாவகச்சேரி, மார்ச் 27
சரசாலை, கனகன்புளியடிச் 25


## சாத்தியமற்றவற்றுக்காக சண்டை பிடிக்கக் கூடாது

### விலகிய காரணம் கூறுகிறார் ரெமீடியஸ்

24




# பரபரப்பை ஏற்படுத்திய யாழ். மேயர் தெரிவு நேற்று அமைதியாக முடிந்தது



உள்ளூராட்சித் தேர்தலை விட பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான மேயர் தெரிவு நேற்றுடன் ஒருவாறு முடிவுக்கு வந்தது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குரிய மேயர், பிரதி மேயரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு நேற்று இடம்பெற்றது. காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. மாநகர சபை உறுப்பினர்கள் நேர காலத்துடன் சபை வளாகத்துக்குள் பிரவேசித்தனர். எல்லாக் கட்சிகளிலும் ஆண்கள், வேட்டி சட்டையுடனும், பெண்கள் சேலையுடனும் காணப்பட்டனர். ஆனால் விதிவிலக்காக ஈ.பி.டி.பி. உறுப்பினர் ரெமிடியஸ் மாத்திரம் கோட், சூட்டுடன் வந்தார். நீதிமன்றுக்குச் செல்லும் நினைப்பில் அவர் அப்படி வந்திருக்கலாம் என்று மாநகர சபையின் அலுவலர்கள் பேசிக் கொண்டனர். சபை அமர்வு நடைபெறும் வளாகத்தைச் சுற்றி, மாநகர சபை ஊழியர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர்.

சபை அமர்வு நடைபெறும் மண்டப வாசலில் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். இனந்தெரியாதோர் நுழையாமல் தடுப்பதற்கான ஏற்பாடு போலும் என்று உறுப்பினர்கள் பேசிக் கொண்டனர்.

**ஆசன ஒழுங்கு குழப்பம்**

மண்டபம் புதிதாகக் காட்சியளித்தது. புதிய கதிரை, புதிய மேசை, என்று எல்லாமே புதிதாகப் பளிச்சென்று இருந்தது. மேசையில், உறுப்பினர்களின் பெயர்கள் வைக்கப்பட்டிருந்தன. அந்த பெயர் வரிசைகளைப் பார்த்து உறுப்பினர்கள் குழம்பினர். கட்சி ஒழுங்கில் உறுப்பினர்களுக்கான ஆசனங்கள் ஒதுக்கப்படவில்லை என்பதே அவர்களின் குழப்பத்துக்குக் காரணம்.

ஆசனங்களின் ஒழுங்கு, உள்ளூராட்சி உபவிதிகளுக்கு அமையவே போடப்பட்டிருந்தன. முன்னைய காலங்களில் மேயராக இருந்தவர்களுக்கு முன்னுரிமை, பிரதி மேயர்களுக்கு அடுத்த முன்னுரிமை, முன்பு உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கு, அவர்கள் இருந்த காலத்தின் அடிப்படையில் அடுத்த முன்னுரிமை என்று வழங்கப்பட்டு, புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு அதன் பின்னர் ஆசனங்கள் போடப்பட்டிருந்தன.

**ஒருவர் 'மிஸ்ஸிங்'**

45 உறுப்பினர்களில் 44 உறுப்பினர்கள் வந்தனர். ஒருவர் மாத்திரம் வரவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட விஜயகாந்தே 'மிஸ்ஸிங்'. அவர் 'கம்பி எண்ணிக்' கொண்டிருப்பதால் வரவில்லை என்று சக உறுப்பினர்கள் பேசிக் கொண்டனர்.

இந்த அமர்வைப் பார்வையிடுவதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராசா, எம்.ஏசுமந்திரன், மாகாண சபை உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ஜெயசேகரம், பரஞ்சோதி ஆகியோரும், ஈ.பி.டி.பி. சார்பில் டக்ளஸ் தேவானந்தாவின் சகோதரர் தயானந்தாவும் வந்திருந்தனர். முன்னணி சார்பில் அந்தக் கட்சியின் 'பெரிய தலைகள்' வரவில்லை. விருந்தினர்களுக்குத் தனியாக அறை ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகில் ஊடகங்களுக்குத் தனியான அறை ஒதுக்கப்பட்டிருந்தது.

பொதுவாகக் குறித்த நேரத்துக்கு எதையும் ஆரம்பித்து எம்மவர்களுக்குப் பழக்கம் இல்லை. நேற்றைய அமர்வு அச்சொட்டாக 9 மணிக்கு தொடங்கியது. வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் முன்னே வர, மாநகர சபை ஆணையாளர் ஜெயசீலன், பிரதி ஆணையாளர் உள்ளிட்டோர் பின்னால் அணிவகுத்து வந்தனர். அவர்கள் சபை மண்டபத்துக்குள் பிரவேசித்ததும், உறுப்பினர்கள் எழுந்து மரியாதை செலுத்தினர்.

பற்றிக், சபையின் பிரதான ஆசனத்தில் அமர்ந்தார். ஜெயசீலன் ஆணையாளருக்குரிய தனது ஆசனத்தில் அமர்ந்தார். வழமையான வரவேற்புடன் அமர்வு தொடங்கியது.

**காத்திருக்க முடியாது**

வராத ஒரே ஒரு உறுப்பினருக்காக சபை அமர்வை ஒரு மணி நேரம் ஒத்திவைக்க வேண்டும் என்று ரெமிடியஸ் சபையில் கோரினார். சபைக்கு வராத விஜயகாந் அவரது கட்சியைச் சேர்ந்தவரே. ஆனால் ஆணையாளரோ வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அதை மறுத்து விட்டார். சபையை நடத்துவதற்கு 23 உறுப்பினர்கள் இருந்தால் போதுமானது. கோரம் உள்ளது. மேலும், அமர்வு 9 மணிக்கு ஆரம்பமாகும் என்று முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால், காத்திருக்க முடியாது என்று கறாராகக் கூறி அடுத்த விடயத்துக்குள் நகர்ந்தார்.

பிரதான கட்டத்துக்குள் அமர்வு சென்றது. மேயருக்கான பெயரை முன்மொழியுமாறு கோரப்பட்டது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் ஆர்னோல்ட்டின் பெயரை சொலமன் சிறில் முன்மொழிந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் மணிவண்ணனின் பெயரை, வரதராஜன் பார்திபன் முன்மொழிந்தார். ஈ.பி.டி.பி.யின் சார்பில் முன்னாள் மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ரெமிடியஸின் பெயரை முன்மொழிந்தார்.

**வாக்கெடுப்பை எப்படி நடத்துவது ?**

மும்முனைப் போட்டிக்கான களம் திறக்கப்பட்டது. ஆணையாளர் பற்றிக், வாக்கெடுப்பை எப்படி நடத்துவது என்பது தொடர்பில் கேட்டார். பகிரங்க வாக்கெடுப்புக்கான குரலும், இரகசிய வாக்கெடுப்புக்கான குரலும் ஒலித்தது. அதனால் எப்படி வாக்கெடுப்பு நடத்துவது என்பது தொடர்பில் வாக்கெடுப்பு நடத்த தீர்மானிக்கப்பட்டது. அந்த வாக்கெடுப்பு பகிரங்க வாக்கெடுப்பாக நடந்தது.

உறுப்பினர்கள் ஒவ்வொருவரதும் பெயர் அழைக்கப்பட்டது. அவர்கள் பகிரங்க வாக்கெடுப்பா, இரகசிய வாக்கெடுப்பா என்பதற்கு வாக்களித்தனர். சபாமண்டபத்தில் ஆணையாளருக்கு பக்கத்தில் உள்ள 'போர்ட்டில்' பதிவு செய்யப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பி., சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து இரகசிய வாக்கெடுப்புக் கோரினர். 25 வாக்கு இவர்களுக்கு கிடைக்கப் பெற்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து பகிரங்க வாக்கெடுப்புக் கோரினர். இவர்களுக்கு 19 வாக்கு கிடைக்கப் பெற்றது. கூட்டமைப்பு மண்கவ்வ, இரகசிய வாக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது.

வாக்குப்பெட்டி, வாக்குப் பதிவு செய்வதற்கான இடம், வாக்குச் சீட்டு என்பன 5 நிமிடத்துக்குள் தயாராகின. வேகமாக அதிகாரிகள் செயற்பட்டனர்.

**வாக்குப் பதிவு**

ஆணையாளருக்கு அருகில் வாக்கைப் பதிவு செய்வதற்கான இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அவருக்கு முன்னால் வாக்குப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் பெயர் கூறி அழைக்கப்பட்டனர். அவர்கள் எழுந்து சென்று தமது வாக்குகளைப் பதிவு செய்து விட்டு, வாக்குப் பெட்டிக்குள் சீட்டைப் போட்டனர்.

சபை மண்டபத்துக்குள் மூலைக்கு மூலை 'சிசிரிவி' கமராக்கள் பொருத்தப்பட்டிருந்தன. இவர்கள் இரகசியமாக வாக்குப் போடுவதை அந்த சிசிரிவி கமராக்கள் கண்காணிக்காதோ என்று ஊடக நண்பன் ஒருவன் கேட்டான். அவன் கேட்டுக் கொண்டிருக்கையிலேயே, தமிழ் அரசுக் கட்சியின் மாநகர சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட புதுமுகமான தர்சானந்த், தனது வாக்கைப் பதிவு செய்து விட்டு சபையிலிருந்த எல்லோருக்கும் காட்டி வாக்குப் பெட்டிக்குள் போட்டார். இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டால், தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர்கள் தாம் யாருக்கு வாக்களிக்கின்றோம் என்பதை சக உறுப்பினர்களுக்கு காண்பித்துவிட்டே போடவேண்டும் என்று கட்சி அறிவுறுத்தியிருந்தது. அவர் மாத்திரம் அதனைச் செவ்வனே செய்தார். (ரொம்ப கட்சி விசுவாசம்போல). ஈ.பி.டி.பியினர் தர்சானந்தின் செயற்பாட்டுக்கு எதிராகக் கொஞ்சம் குரலை உசத்தி எழுப்பினர். ஆனாலும் எதுவும் எடுபடவில்லை.

**தடக்கிய சிறில்**

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயருக்கு கூட்டமைப்பு சார்பில் பிரேரிக்கப்படுவார் என்று அரசல்புரசலாக கதையடிபட்ட சிறில், வாக்களிக்கச் செல்லும்போது சபாமண்டபத்தில் தடக்கி விழப்பார்த்தார். இந்தச் சம்பவம் எல்லோரது புருவங்களையும் கொஞ்சம் உயர்த்தியது.

ஒருவாறு வாக்கெடுப்பு முடிந்தது. போட்டியிட்ட மூன்று வேட்பாளர்கள் அல்லது அவர்கள் சார்பில் ஒவ்வொருவரை வாக்கு எண்ணும் இடத்துக்கு வருமாறு ஆணையாளர் பற்றிக் அழைத்தார். ஆணையாளருக்கு முன்னால் உள்ள மேசையில் வைத்து வாக்கு எண்ணப்பட்டது. போட்டியிட்ட மூவரினதும் பெயர்கள் மூன்று காட்போட் பெட்டிகளில் ஒட்டப்பட்டன. தமிழ் அரசுக் கட்சி சார்பில் ஆர்னோல்ட்டும், முன்னணி சார்பில் பார்த்திபனும், ஈ.பி.டி.பி. சார்பில் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவும் வாக்கு எண்ணுவதைக் கண்காணிக்க நின்றனர். வாக்குப்பெட்டி உடைக்கப்பட்டது. ஆணையாளர் ஒவ்வொரு வாக்காக காட்டிக் காட்டி உரிய பெட்டிகளில் போட்டார். உறுப்பினர்களின் இதயத் துடிப்பின் வேகம் எகிறிச் சென்றது.

**அதிஷ்டமில்லா மணி**

இறுதியில் ஆனோல்ட் 18 வாக்குகளையும், ரெமிடியஸும், மணிவண்ணனும் தலா 13 வாக்குகளையும் பெற்றனர். தமிழ் அரசுக் கட்சிக்காரர்கள், மேசைகளில் தட்டியும், கைதட்டியும் ஆரவாரம் செய்தனர்.

இரண்டு பேர் சமனாக வாக்குப் பெற்றால் திருவுளச் சீட்டின் மூலம் (குலுக்கல்) தெரிவு செய்வது என்பதுதான் சட்டம் என்று ஆணையாளர் பற்றிக் அறிவித்தார். யாருடைய பெயர் எடுபடுகின்றதோ அவர் மேயர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார் என்றும் அறிவுறுத்தல் வழங்கினார்.

ரெமிடியஸின் பெயரும், ஆர்னோல்ட்டின் பெயரும் துண்டில் எழுதப்பட்டது. குலுக்கி எடுக்க முற்படும்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர், வாக்குப் பெட்டியை போட்டு நன்றாகக் குலுக்கி எடுங்கோ என்றார். ஆணையாளரும், அவ்வாறே செய்தார்.

போட்டியிட்ட இரண்டு பேரில் ஒருவர் எடுக்கலாம். இல்லாவிடின், மாநகர சபை உறுப்பினர் ஒருவர் சீட்டு எடுக்கலாம் என்று ஆணையாளர் அறிவித்தார். சபையில் கொஞ்ச செக்கன்கள் அமைதி நிலவியது. முன்னணி, ஈ.பி.டி.பி. உறுப்பினர்களின் இதயத்துடிப்பு ஆர்முடுகிச் சென்றது. ரெமிடியஸ் தானே எடுப்பதாகத் தெரிவித்து எழுந்தார். சீட்டை எடுத்து ஆணையாளர் கையில் கொடுத்தார். அதில் மணிவண்ணனின் பெயர் இருந்தது.

**களம் அறியா உறுப்பினர்**

ஆணையாளர் அந்தப் பெயரை அறிவித்ததும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் ஒருவர், மேசையில் தட்டி, கைதட்டி ஆரவாரித்தார். மணிவண்ணனின் பெயர் அறிவித்ததும் அவர் வெளியேற்றப்பட்டார் என்பதை மறந்து வெற்றி பெற்று விட்டார் என்று நினைத்து கரகோசம் எழுப்பியிருக்கிறார். சில செக்கன்களிலேயே நிலமை என்ன என்பதை உணர்ந்து அவர் பம்மிவிட்டார்.

இப்போது உறவினர்களாக இருந்த ஆர்னோல்ட்டுக்கும், ரெமிடியஸுக்கும் போட்டி. ஆணையாளர் பற்றிக் அதனை அறிவித்தார். ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள், தாம் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செயற்பட முடியாது. கட்சியுடன் பேச வேண்டும். ஒரு மணித்தியாலம் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். ஆணையாளர் பற்றிக், அவைக்குள் வந்த பின்னர் கட்சியுடன் பேசுவதற்கு அனுமதி வழங்கமுடியாது என்று திடமாக மறுத்துவிட்டார். ஆனால் உறுப்பினர்கள் மீண்டும் மீண்டும், குழந்தைப் பிள்ளைகள் போல அடம்பிடித்துக் கேட்டனர். சபையில் பெரும்பான்மையினர் என்ன முடிவு எடுக்கின்றனரோ அதன்படி செயற்படத் தயார் என்று ஆணையாளர் அறிவித்தார். அதற்கும் வாக்கெடுப்பு நடந்தது. உறுப்பினர்களின் ஆசனங்களில் அமர்ந்தவாறே கைகளை உயர்த்தி வாக்களித்தனர். கட்சியுடன் பேசுவதற்கு அனுமதிக்கவேண்டும் என்பதே பெரும்பான்மை உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருந்தது.

**'பாத்ரூம்' சென்ற உறுப்பினர்கள்**

நாங்கள் வாக்குச் சீட்டு தயாரிக்க 10 நிமிடம் தேவை. அந்த 10 நிமிடநேரத்துக்குள் கதையுங்கள். சபை மண்டபத்தை விட்டு வெளியேற முடியாது என்ற நிபந்தனையுடன் ஆணையாளர் அனுமதி வழங்கினார்.

திக்குத் திக்காக இருந்த ஒவ்வொரு கட்சியின் உறுப்பினர்களும் ஒன்றாகினர். கூடிக் கூடிக் கதைத்தனர். எல்லோரது அலைபேசிகளும் துரிதமாக வேலை செய்தன. சபை மண்டபத்துக்குள் இருந்து அலைபேசியில் பேசினர். சபை மண்டபத்தை விட்டு வெளியில் போக முடியாது என்று ஆணையாளர் கட்டளையிட்டாலும், சிறுபிள்ளைகள் 'பாத்ரூம்' போகின்றேன் என்று சொல்லி வெளியில் 'எஸ்கேப்' ஆகுவதைப்போன்று மாநகர சபை உறுப்பினர்கள் சிலரும் வெளியில் சென்றனர்.

பத்து நிமிடத்தில் சபை அமர்வு தொடங்கியது. வாக்குச் சீட்டு, வாக்குப்பெட்டி எல்லாம் தயார். திடீரென்று எழும்பிய ரெமிடியஸ் தான் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இந்தத் திடீர் அறிவிப்பால், சபைக்குள் மெல்லிய சலனம் எழுந்தது.

**ஆர்னோல்ட்டை விடாத மணி**

ரெமிடியஸுடன் முட்டி மோதி தோற்றுப்போன மணிவண்ணன், அவர் விலகுவதாக இருந்தால் முன்னரே விலகியிருக்க வேண்டும். இப்போது அவர் விலகுவதாக அறிவித்துள்ளதால், எனக்கும் ஆர்னோல்ட்டுக்கும் இடையில் போட்டி நடத்துங்கள் என்று கேட்டார்.

அப்படிச் செய்ய முடியாது. சட்டரீதியாக நீங்கள் தோற்கடிக்கப்பட்டுள்ளீர்கள் என்று ஆணையாளர் சட்டத்தரணி மணிக்கு சட்டத்தை எடுத்துச் சொன்னார். இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு சட்டத்தரணியான ரெமிடியஸ், ஆர்னோல்ட்டுக்கும் அவருக்கும் நீங்கள் போட்டி வைக்கலாம்தானே என்று மணிக்கு பக்கப்பாட்டுப்பாடினார். ஆணையாளர் அதை எல்லாம் நிராகரித்துவிட்டார்.

மேயராக ஆர்னோல்ட் அறிவிக்கப்பட்டதும், கூட்டமைப்பு உறுப்பினர்கள் மீண்டும் மேசையில் பலமாகத் தட்டி ஆரவாரம் செய்தனர். ஆர்னோல்ட் எல்லாப் பக்கமும் கைகூப்பி வணக்கம் வைத்தார். அவருக்கு முன் ஆசனத்திலிருந்து ரெமிடியஸ் எழுந்து கைகொடுத்தார்.

**போட்டியின்றி பிரதி மேயர் தெரிவு**

ஆர்னோல்ட், ஆணையாளரால் வெளியில் அழைத்துச் செல்லப்பட்டார். மேயர் ஆடையுடன், சபைக்கு திரும்பி வந்தார். ஆணையார் இதுவரை இருந்து நடத்திய ஆசனம் அகற்றப்பட்டு மரத்தால் செய்யப்பட்ட மேயர் கதிரை திரையை விலக்கி முன்னுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனோல்ட் அமர்ந்தார். சபை அமர்வு ஆரம்பமாகியது.

பிரதி மேயர் தெரிவு ஆரம்பமானது. பெயர்களை முன்மொழியுமாறு கோர, தமிழ் அரசுக் கட்சி சார்பில் பிரதி மேயரின் பெயர் அறிவிக்கப்பட்டது. வேறு எவரும் பிரேரிக்கப்படாதால் கூட்டமைப்பின் சார்பில் பிரதி மேயராக முன்மொழியப்பட்ட ஈசன் போட்டியின்றி தெரிவானார்.

இதன் பின்னர் அடுத்த சபை அமர்வு சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக அறிவிக்கப்படும் என்று மேயர் ஆனோல்ட் அறிவித்தார். சபை ஒத்திவைக்கப்பட்டது. எல்லோரும் வெளியேறினர்.

(ந-5.8)

# வாழ்வாதார நீருக்காக உடையார்கட்டில் போராட்டம்

## இரண்டாவது நாளாகவும் விவசாயிகள் முன்னெடுப்பு

முல்லைத்தீவு, மார்ச் 27
புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுக் குளத்தில் இராணுவம் நீர் எடுப்பதைத் தடுக்கக் கோரி நேற்றும் அந்தப் பகுதி விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.
புதுக்குடியிருப்புப்பிரதேசசெயலகம் முன்பாக நேற்றுக் காலை கூடிய விவசாயிகள் பதாகைகளைஏந்தியவாறு ஆர்ப்பாட்டம் செய்தனர்.
பிரதேசஅபிருத்திக்குழுக்கூட்டத் தீர்மானத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும். நீர் இறைக்கும்இயந்திரங் >> 23



### போர் அழிவுச் சின்னத்தை அகற்றும் பணி ஆரம்பம்

கிளிநொச்சி, மார்ச் 27
கிளிநொச்சி நகரில் போர் அழிவுச் சின்னமாகக் காட்சிப் படுத்தப்படுத்தப்பட்டிருந்த நீர்த்தாங்கியை அகற்றும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன. இந்தநீர்த்தாங்கிஇறுதிப்போரின்போதுஉடைந்துவீழ்ந்திருந்தது. போர் முடிந்த பின்னர் அது போர் அழிவுச் சின்னமாகக் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. (ற-35)

# அளம்பில் துயிலும் இல்லத்தை ராணுவத்துக்கு வழங்க வேண்டாம்

## முல்லை. மாவட்டச் செயலரிடம் மனுக் கையளிப்பு



முல்லைத்தீவு.மார்ச்.27
அளம்பில் மாவீரர் துயிலும் இல்லக் காணியை இராணுவத்துக்கு வழங்க வேண்டாம் எனக் கோரி அந்தப் பகுதி மக்கள் கையெழுத்திட்டு மாவட்டச் செயலரிடம் நேற்று மனு ஒன்றைக் கையளித்தனர்.
மாவீரர் துயிலும் இல்லக் காணியில் ஒரு ஏக்கர் காணி ஒருவரால் வாங்கப்பட்டு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவம் அந்தக் காணியில் பயிற்செய்கை மேற்கொள்வதுடன், கிரிக்கெட்டும் விளையாடுகின்றது. அவற்றை நிறுத்த வேண்டும் என்று மனுவில் கோரப்பட்டுள்ளது. மனுவில் 600க்கும் மேற்பட்டவர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து >> 23



### கடற்கரையை ஆக்கிரமித்து தனிநபர் ஒருவர் அட்டகாசம்

#### முல்லைத்தீவு, தியோகு நகர் மீனவர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, மார்ச் 27
முல்லைத்தீவு, சிலாவத்தை, தெற்கு தியோகு நகர் கடற்கரையை ஆக்கிரமித்துள்ள தனிநபர் ஒருவர் அங்கு தொழில் >> 23

### சுதாகரனின் விடுதலைக்காக மைத்திரிக்குக் கருணை மனு

அரசியல்கைதிஆனந்தசுதாகரனைவிடுதலை செய்ய வேண்டும் என்று கோரி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கான கருணை மனு நேற்று கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டது. ஆனந்தசுதாகரனின் பிள்ளைக்ள்இந்தமனுவைக்கையளித்தனர். (விரிவு பக்.11)

### தெகிவளை– கல்கிசையைக் கைப்பற்றி தங்காலையில் ஏமாந்தது மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 27
ஐக்கிய தேசியக் கட்சி அதிக ஆசனங்களைக்கைப்பற்றியதெகிவளை-கல்கிசை மாநகரசபையின் முதல்வர் பதவியை சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி கைப்பற்றியுள்ள அதே வேளை, மகிந்தராஜபக்சவின்சொந்த இடமான தங்காலை நகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சி முதல்வர் பதவியைப் பிடித்துள்ளது.
தெகிவளை கல்கிசை மாநகர சபையின் முதல்வர் பதவிக்காக நேற்றுக் காலை நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், சிறிலங்கா பொதுமக்கள் >> 23

### அகழப்பட்ட மண்ணில் எலும்பு எச்சங்கள் மீட்பு

#### மனித எலும்புகளா என்ற கோணத்தில் விசாரணை >> 23

#### கனகராயன் குளத்தில்

### பொலிஸ் பிடித்துள்ள காணியை விடுவிக்க வேண்டுமென முடிவு

#### வவு. ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்

வவுனியா, மார்ச் 27
வவுனியா, கனகராயன்குளம்கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான காணியில் இருந்து பொலிஸார் வெளியேற வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று இணைத் தலைவர்களான வடக்கு >> 23

### காணிகளை மீட்பதற்கு ஆன்மிகப் போராட்டம்

*5 நாள்கள் கேப்பாபிலவில்*

முல்லைத்தீவு, மார்ச் 27
வடக்குமாகாணத்தில்படையினர்வசமுள்ள மக்களின் காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பில் வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துகேப்பாபிலவில்ஆன்மிகப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. >> 23

### கண்டாவளைப் பிரதேச செயலர் மாரடைப்பால் நேற்று உயிரிழப்பு

>> 23

### கொட்டகலைப் பிரதேச சபைக்கு தலைவர், உபதலைவர் தெரிவு

நுவரெலியா, மார்ச் 27
கொட்டகலை பிரதேச சபைக்கு தெரிவான உறுப்பினர்களின் தலைவர், உபதலைவர் தெரிவு கொட்டகலை பிரதேச சபையில் நேற்று நடைபெற்றது.
மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஹேரத் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக ராஜமணி பிரசாத்தும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக கல்யாணகுமாரும் தலைவருக்காக போட்டியிட்டனர்.
9 வாக்குகளை பெற்ற ராஜமணி பிரசாத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.
அத்தோடு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக போட்டியிட்ட முத்துராமலிங்கம் ஜெயகாந்த் உப தலைவராக தெரிவு செய்யப்பட்டார். (ற.ரி4)

### முகநூலில் இனவாதக் கருத்து மாணவனுக்குப் பிணை மறுப்பு

கொழும்பு, மார்ச்.27
முகப்புத்தகம் ஊடாக வன்முறைகளை ஏற்படுத்தும் விதமான பதிவுகளை மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கொழும்பு பாடசாலை மாணவனுக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுத்துள்ளது.
சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மாணவனை 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.
வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் ஷானிமா விஜேபண்டார முன்னிலையில் நடைபெற்றது. இதன்போது, சந்தேகநபரான மாணவன் முன்னிலைப் படுத்தப்பட்டு இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.
இம் மாணவன் சிங்களவர் ஒருவரின் பெயரில் முகப்புத்தகத்தில் இனங்களுக்கிடையில் வன்முறைகளை ஏற்படுத்தும் விதமான பதிவுகளை மேற்கொண்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி2)



### துருக்கி தூதுவர் ஹக்கீம் சந்திப்பு

கொழும்பு, மார்ச்.27
துருக்கி நாட்டின் இலங்கைக்கான தூதுவர் துண்கா சுஹதார் நேற்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.
இருதரப்பு உறவுகளை மையப்படுத்தி நடைபெற்ற இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
அண்மையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளபட்ட இனவாத வன்செயல் குறித்து அவர் தனது கவலையை வெளியிட்டதுடன், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (OIC) இந்த விடயத்தில் கூடிய கவனம் செலுத்திவருவதாகவும் துருக்கி தூதுவர் தெரிவித்தார்.
இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கையில் துருக்கி முதலீடு மேற்கொள்வதற்கு ஆர்வம் செலுத்தி வருவதை அமைச்சர் எடுத்துக் கூறினார். (ற.ரி2,31)

## நவீன ஓவியங்கள் ஒரு பார்வையில்



யாழ்ப்பாணம் மார்ச். 27
யாழ்.நூலக வாசகர் வட்டத்தினால் நடத்தப்படும் நவீன ஓவியங்கள் ஒரு பார்வையில் என்ற தொனிப் பொருளிலான மாதாந்த உரை நிகழ்வு நுலக குவிமாட கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.
நவீன ஓவியங்கள் ஒரு பார்வை என்ற தலைப்பை தெரிவுசெய்தமை தொடர்பில் வாசக வட்ட செயலாளர் சித்திராதரனை கேட்டபோது நவீன ஓவியங்கள் குறித்து விழிப்புணர்வு அடைய வேண்டும் என்ற நோக்கில் இதனை தெரிவு செய்தோம் இவ்வாறு ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு தலைப்பில் உரையாற்றப்படுகிறது.
விவசாயம், நிலம்,கடல் வளம் போன்ற தொனிப்பொருளில் கூட கடந்த மாதங்களில் உரையாற்றியதாகவும் அவர் தெரிவித்தார். இந்த நிகழ்வுக்கு வாசக வட்ட உறுப்பினர்கள் ,மாணவர்கள்,பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (111)

## தடுக்கி வீழ்ந்தவர் சாவு

மலசலகூடத்துக்குச் சென்ற நபர் தடுக்கி வீழ்ந்த நிலையில் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மணியந்தோட்டம் பகுதியில் இடம்பெற்றது. இதில் நான்கு பிள்ளைகளின் தந்தையான ஜெயராசசிங்கம் றெக்சாம்சன் (வயது 46) என்பவரே உயிரிழந்தார். சம்பம் தொடர்பிலான இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் இறப்பு விசாரணை அதிகாரி பிரேமகுமார் மேற்கொண்டார். (21)

## சிறுவர் சந்தை

யாழ்ப்பாணம். மார்ச் 27
நவாலி அட்டகிரி சைவ வித்தியா சாலையின் சிறுவர் சந்தை இன்று காலை இடம்பெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் தி.கிருஸ்ணதாஸ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மானிப்பாய் இந்துக் கல்லூரியின் மூத்த ஆசிரியர் ஞ.திருக்கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். அவருடன் இலங்கை வங்கிக் கிளையின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (21.63)

## யோகர் சுவாமி குருபூசை தினம்

யோகர் சுவாமியின் குருபூசையும், வீதியுலா நிகழ்வும் இன்று காலை 7 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவில் தேரடி வீதியில் ஆரம்பமாகவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது: வழிபாடு இடம்பெற்று செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்துக்குச் சென்று அங்கிருந்து கொழும்புத்துறை யோகர் சுவாமி சமாதி ஆச்சிரமத்துக்குச் சென்று அங்கு அபிசேக பூசை இடம்பெறவுள்ளது. (21)

*** *** ***

யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் 54 ஆவது குருபூசைதின நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு நல்லூர் சிறி துர்க்கா தேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. தெல்லிப்பழை சிறி துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் சிறப்புச் செற்பொழிவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மூத்த விரிவுரையாளர் திரு. சயனொளிபவன் முகுந்தன் நிகழ்த்தவுள்ளார். அத்துடன் நற்சிந்தனைப்பாடல்கள் , பேச்சு என்பனவும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (21)

# பெண்களினுடைய அலங்காரங்களில் கலாசார ரீதியான மாற்றம் வேண்டும்

*யாழ்ப்பாணம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பிராந்திய இணைப்பாளர் தனலட்சுமி*

யாழ்ப்பாணம், மார்ச்.26
இன்றைய மாணவர்கள் நவீன தொழில்நுட்பங்களின் அதீத பாவனையால் நெறிபிறழ்வுக்கு தள்ளப்படுகின்றனர். அவற்றைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர் பெற்றோர்களுக்கு இருக்கி றது. இன்றைய சமூகத்தில் கலாசாரம் சீர்கெட்டுப் போயுள்ளது. முக்கியமாக பெண்கள் அலங்காரங்களிலே சில மாற்றங்கள் செய்து கொள்ள வேண்டும். தலை விரித்து செல்வதை நான் மிகவும் வன்மையாக கண்டிக்கிறேன். அது ஒரு அமங்கலமான செயல். எமது கலாசாரத்துக்கேற்ற பாடநெறிகள் கொண்டு வரப்பட வேண்டும், அலங்காரம் பற்றிய பாட அலகுகள் நீக்கப்படவேண்டும். கலாசாரத்தை நல்ல முறையில் வழிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்ப்பாணம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பிராந்திய இணைப்பாளர் தனலட்சுமி வில்வநாதன்.
யாழ்ப்பாண மாவட்ட சர்வமதப் பேரவையின் மகளிர் தின நிகழ்வு நல்லை ஆதீனத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆண்களும் பெண்களும் சமவலுவுடையவர்கள்தான். ஆண்களுக்கு சற்று உடல்வலு அதிகம் இருக்கலாம். ஆனால் அவர்களது உடல்வலுவோடு ஒப்பிடுகையில் பெண்களின் மனவலிமை அதிகம். இந்த மனவலிமை ஆண்களோடு எங்களை சமமாக்குகிறது. பெண்கள் எதற்கும் சலித்தவர்களல்ல.
இன்றைய சமூகத்தில் படித்த அல்லது படிக்காத தாயோ தேவையில்லை நல்ல முறையில் வளர்த்தெடுப்பதற்கு பக்குவமான தாயே தேவை என்றார்.
'எங்களுடைய நாட்டின் அடிப்படைச் சட்டமாக காணப்படுகின்ற அரசமைப்பானது, பால் அடிப்படையிலான பாரபட்சத்தை முற்றிலுமாக தடை செய்தது. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படை சித்தாந்தத்தை போதிக்கின்ற அதே நேரம் பால் அடிப்படையில் எந்தவித பாரபட்சமும் காட்டப்படலாகாது என்ற அடிப்படை சமத்துவ கோட்பாட்டை, வலியுறுத்தி நிற்கின்றது. கோட்பாட்டு ரீதியான சமத்துவம், சமூகம் ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்ற ஒரு நிலைமை அடைகின்றபோதுதான் பெண்களினுடைய சமத்துவம், உரிமைகள் என் பது நடைமுறை சாத்தியமாகும்?
சமூகம் பெண்கள் பற்றி கொண்டிருக்கிற மனப்பாங்கு தற்போது ஓரளவு மாற்றம் கண்டிருக்கிறது. ஆனாலும் பெண்கள் தொடர்பான பிரச்சினைகள் இன்னமும் சமூகத்தில் காணப்படுகின்றன. போருக்குப் பின்னர் பெண் தலைமைத்துவ குடும்பங்களினுடைய எண்ணிக்கை எமது நாட்டிலே அதிகரித்துள்ளது. ஒரு பெண் தன்னை அதற்காக தயார்ப்படுத்தி கொள்ளாத நிலையிலே சில விடயங்களை சுமத்துவதும் ஒரு விதமான வன்முறை. சமத்துவத்துக்கு எதிரானது. சமத்துவத்துக்கு அப்பால் பெண்களை சிறப்பாக பாதுகாப்பதற்கான சில சட்டங்கள் கூட எமது நாட்டிலே காணப்படுகின்றன.
பாலியல் சுரண்டல்களை தண்டனைக்குரிய குற்றங்களாக கொள்கின்ற சட்டங்களும் உள்ளன. இத்தகைய சட்டங்கள் இருக்கத்தக்கதாக பெண்களுக்கெதிரான வன்புணர்வு எவ்வாறு எம்து நாட்டில் நடைபெறுகிறது. இந்த சட்டங்களால் சமூகத்தை முற்றிலுமாக திருத்த முடியும் என்றால், அல்லது பெண்களுக்கெதிரான பிரச்சினைகளிலிருந்து பெண்களை பாதுகாப்பதற்கு சட்டங்கள் மாத்திரம் போதுமாக இருக்கும் என்றால் இந்த சட்டங்கள் இருக்கத்தக்கனவாக எந்த வித குற்றங்களும் எம் சமூகத்திலே நிகழ்ந்திருக்க முடியாது. ஆகவே சட்டங்கள் சமூகத்தை முற்றிலும் நெறிப்படுத்தும் வழிப்படுத்தும் என்ற சிந்தனை மிகத்தவறானது. எந்தவொரு சட்டமும் எந்தவொரு மனிதனையோ நல்லவனாக்கும் வேலையை ஒரு போதும் செய்யாது.
குடும்ப வன்முறை தடுப்பு அல்லது தவிர்ப்புசட்டம்2005ஆம்ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனால் குடும்ப வன்முறைகள் குறையவில்லை. பெண்களுக்கெதிரான வன்முறைகளற்ற சமூகம் என்ற சமூகம் ஒரு போதும் உருவாக வாய்ப்பில்லை. அப்படியொரு சமூகம் எந்த நாட்டிலுமில்லை. ஆனால் இயன்றவரை குறைவடைய அல்லது வீழ்ச்சிய டைய செய்ய முடியும். அவ்வாறான சமூக கட்டமைப்பை உருவாக்க வேண்டியது ஒவ்வொருவரினதும் பொறுப்பு' என்று சட்டத்தரணியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை விரிவுரையாளருமான கோசலை மதன் தெரிவித்தார்.



பேரவையின் தலைவர் மௌலவி சுபியான் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தின ராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறை தலைவர் ஜெயலட்சுமி இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பிராந்திய இணைப்பாளர் தனலட்சுமி வில்வநாதன் மற்றும் சட்டத்தரணியும், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் கோசலை மதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-112)



மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தின் ப்ழைய மாணவியான ஆசிரியை தேவரஞ்சனி கிருத்திகராஜ் மற்றும் அவரது தந்தையான சண்முகம் விநாசித்தம்பி ஆகியோர் இணைந்து வித்தியாலயத்திற்கு நிழற்பிரதி இயந்திரம், மாணவர்களுக்கு கற்றல் உப கரணங்கள் ஆகியவற்றை அன்பளிப்பாக அண்மையில் வழங்கினார். (9)

## கவனிப்பாரற்ற நிலையில் ஆலங்குளம்

*விவசாயிகள் கவலை*

அளவெட்டி.மார்ச்.27
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஆலங்குளம் எனும் பெயருடைய குளம் புனரமைக்கப்படாமை யினால் விவசாயத்தை நம்பியுள்ளோர் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் அந்தப் பிரதேசத்தை சேர்ந்த பொது அமைப்புகளினால் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய போதும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என தெரிவிப்பட்டது.
இந்தக் குளத்தின் முன்முகப்பு வாயில் வாய்க்கால்களில் மண் நிரம்பி இருப்பதால் கிராம வீதிகளுடாக வயல் நிலங்களிலும் நீர் பரவி விவசாயத்தையும் பாதிக்கின்றது.
தற்போது குளத்திற்கு செல்லும் இருபக்க அணைக்கட்டிலும் மரம் செடிகள், பாதினியங்களும் காணப்படுகின்றது. இதனால் விவசாய த்தை நம்பியுள்ளோர் பெரிதும்பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.
இது தொடர்பில் சண்டிலிப்பாய் பிரதேச செயலரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, புனரமைப்பதற்கு தற்போது நிதி இல்லை. நீர்பாசனத் திணைக்களமே இதற்கு பொறுப்பு . நிதி கிடைத்ததும் குளத்தின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார். (63)

# ஏற்றுமதி வசதிகளை ஏற்படுத்தினால் கற்றாளை உற்பத்தியை அதிகரிக்கலாம்

## கற்றாளைச் செய்கையாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.மார்ச்.27

கற்றாளைச் செய்கையினை வருடத்துக்கு 5 ஆயிரம் கன்றுகள் என்ற எண்ணிக்கை அடிப்படையில் பயிரிட முடியும். அதற்கு ஏற்றுமதிக்கான வழிவகைகளை உரியவர்கள் மேற்கொள்ள வேண்டும் என்று நெடுந்தீவு கற்றாளைச் செயகையளார்கள் தெரிவித்தனர். யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினர் நெடுந்தீவுக்கான பயணம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டனர். இதன் போது அங்கு கற்றாளைச் செய்கையாளர்களிடம் சென்று களநிலைகளை ஆராய்ந்தனர். இதன்போது காற்றாளைச் செய்கையாளர்கள் இவ்வாறு தெரிவித்தனர்

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது;

தற்போது நாம் 3 ஆயிரம் கன்றுகளைப் பயிரிட்டுள்ளோம். இந்தக் கன்றுகள் ஏற்றுமதிக்காக ஒரு வருடத்தில் தாயாரிகிவிடும். பயிரிடல் முறைகள் பற்றி எமக்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின்துறைசார்ந்தவர்களால் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்தக் கன்றுகள் வளர்ந்தவுடன் அதனைச் சூழச் சிறிய கன்றுகள் தோன்றும். அதனையும் வேறாக்கிப் பயிரிடுவதன் மூலம் மூன்று மற்றும் ஆறு மாத காலமளவில் இரண்டாவது அறுவடையை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும். திட்டப் பணிப்பாளர்கள் ஏற்றுமதிக்கான வழிவகைகள் செய்து தரப்படும் எனத் தெரிவித்துள்ளனர். கிறீம்கள், மற்றும் மருந்து தேவைகளுக்கு அதிகமா இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகள் சீராக அமையும் என்றால் வருடத்துக்கு 5 ஆயிரம் கன்றுகளை எம்மால் பயிரிட முடியும் என்றனர்.



யாழ்ப்பாண மாவட்டத்தில் 36 ஆயிரத்து 370 கற்றாளைக் கன்றுகளை வழங்கியுள்ளோம். ஒரு கன்றின் விலை 60 ரூபா. ஒரு ஏக்கரில் ஆயிரம் கன்றுகளைப் பயிரிட முடியும். ஒரு வருடத்தில் பயனைப்பெறலாம். அழகு சாதனப் பொருள், குடிபானம், மருத்துவம் போன்ற தேவைகளுக்கு கற்றாளை அதிகம் பயன்படும். ஆகவே இதன் உற்பத்தி சிறப்பாக அமையுமாயின் தெற்குப் பகுதிக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளன என்று மாவட்ட செயலக விவசாயப் பிரிவு தெரிவித்தது.

(21.7)

## பண்டத்தரிப்பு வீதி ஒன்றுக்கு அமிர்தலிங்கத்தின் பெயர்


யாழ்ப்பாணம், மார்ச் 26

பண்டத்தரிப்பு பிரான்பற்று 4ஆம் குறுக்குத் தெரு வீதிக்கு மறைந்த எதிர்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் பெயரைச் சூட்டுவதற்கு மக்கள் ஒன்று கூடி தீர்மானம் எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு முதன்மை வீதியில் கிளை வீதியாகப் பிரான்பற்று 4ஆம் குறுக்கில் ஒரு வீதி அமைந்துள்ளது.

கடந்த நான்கு.ஐந்து வருடங்களாக மேற்படி வீதிக்கு மறைந்த தலைவர் அமிர்தலிங்கத்தின் பெயரைச் சூட்டுவது எனத் தீர்மாணிக்கப்பட்டதாயினும் முடிவாகவில்லை.

இறுதியாக கடந்தவாரம் மானிப்பாய் பிரதேச சபையின் பிரான்பற்று 7ஆம் வட்டார உறுப்பினரான சி.மகேந்திரன் தலைமையில் ஒன்று கூடிய மக்கள் மேற்படி 4ஆம் குறுக்கு ஒரு வீதிக்கு அமிர்தலிங்கத்தின் பெயரை சூட்டுவது என தீர்மானித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (21.50)





காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா அண்மையில் இடம்பெற்றது. அம்பாள் தேருக்கு எழுந்தருளி வருவதனையும் தேரில் ஆரோகணித்து அடியவர்களுக்கு அருட்காட்சி வழங்குவதனையும் காணலாம்.

## பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு உதவி

யாழ்ப்பாணம் மார்ச் 25

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு வீ - 3 அமைப்பால் அண்மையில் உதவி வழங்கி வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் கொட்டடிப் பகுதியில் வெள்ளாந்தெருவில் கணவன் இழந்த நிலையில் 3 பிள்ளைகளை வளர்த்து வரும் சத்தியசீலன் சுபாசினி என்பவருக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. இதன்போது பாடசாலை உபகரணங்கள் ஒரு மாத உலர் உணவுகள் என்பன வழங்கிவைக்கப்பட்டன.



## யோகசுவாமிகளது குருபூசை

யாழ்ப்பாணம், மார்ச் 27

குருநாதர் யோகசுவாமிகளது 54 ஆவது குருபூசை கொழும்புத்துறை சமாதிக் கோவிலிலும், சிவதொண்டன் நிலையத்திலும் குருபூசைக் கொண்டாட்டங்கள் இன்று காலை 9 மணிக்கு அபிஷேக ஆராதனைகளுடன் நடைபெறவுள்ளதாக சிவதொண்டன் சபையினர் அறிவித்துள்ளனர்.

# 23 பேருக்கு வாழ்வாதார உதவிகள்





யாழ்ப்பாணம், மார்ச்.27

வடமாகாண சபை உறுப்பினரும், யாழ் வணிகர் கழக உபதலைவருமான இ.ஜெயசேகரனால் 23 பேருக்கு வாழ்வாதார உதவித் திட்டங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ் வணிகர் கழக பணிமனையில் தலைவர் இ.ஜயக்குமார் தலைமையில் நடைபெற்றது.

ஜெயசேகரம் முன்னர் உறுதியளித்தவாறு தனது வடமாகாண சபையின் சம்பளப்பணத்தை ஒவ்வொரு மாதமும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் மற்றும் சமூக நலத்திட்டங்களுக்கு வழங்கி வருகின்றார்.

இந்த நிலையில் கடந்த நான்கு மாதங்களாக உள்ளூராட்சி தேர்தல் காரணமாக இந்த வாழ்வாதாரத்திட்டம் வழங்க முடியாமையினால் 4 மாதங்களுக்குரிய வாழ்வாதாரத் திட்டங்களையும் சேர்த்து தற்போது வழங்கப்பட்டது.

யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட 18 பயனாளிகளுக்கும், ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 04 மாற்றுத்திறனாளிகளுக்கும் ,நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கும் சிறுதொழில் முயற்சிக்காகவும் அவர்களின் கோரிக்கைக்கமைவாக சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான சமையற்பாத்திரங்களும், நிதியுதவிகளும் வழங்கப்பட்டது.

அதில், 7 பேருக்கு 10 ஆயிரம் ரூபாவும், 4 பேருக்கு 15 ஆயிரம் ரூபாவும், இருவருக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் 13 பேருக்கும் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களும் வழங்கப்பட்டன.

மேலும் 10 பேருக்கு ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து ஐந்நூற்று 40 ரூபா பெறுமதியான பொருள்களும், ஒருவருக்கு ரூபா 15 ஆயிரத்து எண்ணூறு பெறுமதியான துவிச்சக்கர வண்டியும், 9 பேருக்கு சுமார் 12 ஆயிரம் பெறுமதி யான பாத்திரங்களும் வழங்கப்பட்ட தாக வணிகர் கழகம் தெரிவித்துள்ளது. (112)

# மல்லாகத்தில் மின்கம்பத்துடன் கன்ரர் மோதியதில் விபத்து

## நீண்டநேரம் தடைப்பட்டது மின்சாரம்

யாழ்ப்பாணம், மார்ச். 26

யாழ்ப்பாணம் மல்லாகம் சந்திக்கு அண்மையில் நேற்றுக் காலை இடம்பெற்ற வீதி விபத்தின் காரணமாக நீண்ட நேரம் அப்பகுதியைச் சூழ மின்சாரம் தடைப்பட்டது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: யாழ்ப்பாணம் மல்லாகம் சந்திக்கு அண்மையில் பயணித்துக் கொண்டிருந்த கன்ரர் ரக வாகனம் திடீரென வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரத்தில் இருந்த மின்கம்பத்துடன் மோதித்தள்ளியுள்ளது. இதனால் அங்கிருந்த மின்கம்பம் முழுமையாகச் சேதம் அடைந்ததுடன் மின்சாரமும் தடைப்பட்டது. விபத்துக்குள்ளான வாகனமும் பலத்த சேதமடைந்தது. சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். மேலும் விபத்துக்குள்ளான வாகனத்தையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றனர். பின்னர் அங்கு வந்த இலங்கை மின்சார சபையினர் சேதமடைந்த மின்கம்பங்களைச் சீராக்கி மின்தடையை மதியமளவில் நீக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 21,8,26)

# ஆதரவு திரட்டுவதில் ரணில் மும்முரம்

## சீனா பறந்த எம்.பிக்களை முதலாம் திகதி நாடு திரும்புமாறு பணிப்புரை

சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்வரும் முதலாம் திகதியன்று நாடு திரும்புமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் 18 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று 9 நாள்கள் பயணமாக சீனா சென்றுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். நேற்றுமுன்தினம் கண்காணிப்புப் பயணத்தை ஆரம்பித்த இவர்கள் எதிர்வரும் 3ஆம்திகதியேநாடுதிரும்பவிருந்தனர்.

இந்த நிலையிலேயே, ஏப்ரல் முதலாம் திகதி நாடு திரும்புமாறு தனது கட்சி உறுப்பினர்களுக்கு ஐ.தே.க. தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி மாலை அல்லது மறுநாள் காலை நடைபெறவுள்ளது. இதன்போது தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிப்பது தொடர்பான வியூகங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தலைமை அமைச்சர் தெளிவுபடுத்தவுள்ளார். இதில் பங்கேற்க வைப்பதற்காகவே சீனா சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவசரமாக அழைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெறவுள்ளது. இதன்போது காத்திரமான சில முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என்றும், கட்சி மறுசீரமைப்பு சம்பந்தமாக இறுதி முடிவு எட்டப்படும் என்றும் ஐ.தே.க. வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக 14 குற்றச்சாட்டுகளை முன்வைத்து 53 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கூட்டு எதிரணியால் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது எதிர்வரும் 4ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவுள்ளது. இரவு 9.30 மணியளவிலேயே வாக்கெடுப்பு நடத்தப்படும். (21)

# கோத்தா உட்பட எண்மருக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ச, அவன்ட்கார்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் நிஷங்க சேனாதிபதி உட்பட எண்மருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஜூன் 9ஆம் திகதிக்கு கொழும்பு முதன்மை நீதிவான் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

அவன்ட்கார்ட் மெரிடைம்ஸ் நிறுவனத்தினூடாக மிதக்கும் ஆயுதக் களஞ்சியசாலையை அமைத்து அரசுக்கு 11.4 பில்லியன் ரூபா நட்டத்தை ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்ச, ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவால் குறித்த எண்மருக்கும் எதிராக வழக்குத் தாக்கல்செய்யப்பட்டது.

கொழும்பு முதன்மை நீதிவான் லால் ரணசிங்க பண்டார விடுமுறையில் சென்றிருந்ததால் மேலதிக நீதிவான் சானிமா விஜயபண்டார முன்னிலையில் வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே மேற்குறிப்பிட்ட தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

சந்தேகநபர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை எதிர்ப்புகள் நிராகரிக்கப்பட்டமையைச் சவாலுக்குட்படுத்தித் தாக்கல்செய்யப்பட்டுள்ள ரிட் மனுவுக்கு மே 25ஆம் திகதிநிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த அமர்வில், ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் முன்னாள் முதன்மை நீதியரசர் மொஹான் பீரிஸால் தாக்கல்செய்யப்பட்ட ரிட் மனு தொடர்பிலான விசாரணைகள் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றுவருவதாகவும் அதில் பல மூத்த சட்டத்தரணிகள் ஆஜராவதன் காரணத்தாலும் வழக்கை ஒத்திவைக்குமாறு கோரப்பட்டது.

மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் வழக்கின் சாட்சிய விசாரணையை ஒத்திவைக்குமாறு கோரப்பட்டமைக்கு தமது ஆட்சேபனையைத் தெரிவித்த மூத்த அரச சட்டத்தரணி ஜானக பண்டார, முன்னாள் முதன்மை நீதியரசர் மொஹான் பீரிஸின் மனு தொடர்பில் ஆஜராவதற்கு தமது எதிர்ப்பைத் தெரிவிக்கவில்லை.

இதனையடுத்து, ரிட் மனுவின் விசாரணைக்குப் பின்னர் சாட்சிய விசாரணையை ஒத்திவைக்குமாறு கோரப்பட்ட கோரிக்கையை நிராகரித்த முதன்மை நீதிவான், இரண்டாவது கோரிக்கைக்காக சாட்சிய விசாரணையை நேற்றைய தினத்துக்கு ஒத்திவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

# வடக்கு தொண்டராசிரியர் நியமனம் கோரி முற்றுகை

அச்சுவேலி, மார்ச் 27

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்று வடக்கு மாகாண சபையை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

எதிர்வரும் 28ஆம் திகதி நியமனம் வழங்கப்படவுள்ள 182 ஆசிரியர்களுடன் ஏனைய 494 பேருக்கும் நியமனம் வழங்க வேண்டும் என்று தெரிவித்தே அவர்கள் போராட்டம் நடத்தினர்.

தமது கோரிக்கைக்குச் சாதகமான பதில் கிடைக்கும் வரை போராட்டத்தைக் கைவிட்டப் போவதில்லை என்றும், இரவும் தமது முற்றுகைப் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ம-64-288)

# முதல் அமர்விலேயே கடும் அமளிதுமளி இ.தொ.கா. வசமானது டிக்கோயா நகர சபை

## இறுதிநேரத்தில் மொட்டு வேட்பாளர் "பல்டி' அடித்ததால் பெரும் பரபரப்பு

ஹட்டன் டிக்கோயா நகர சபையின் முதல் நாள் அமர்விலேயே பெரும் அமளிதுமளி ஏற்பட்டுள்ளது. இதனால் கடும் பொலிஸ் பாதுகாப்புக்கு மத்தியிலேயே தலைவர் தேர்வுக்கான வாக்கெடுப்பு நடைபெற்றது.

பெரும் பரபரப்புக்கு மத்தியில் வாக்கெடுப்பு நடைபெற்றபோதிலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன சமனான வாக்குகளைப் பெற்றதால் திருவுளச்சீட்டு முறையிலேயே தலைவர் தேர்வு இடம்பெற்றது. இதில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வெற்றி பெற்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஹட்டன் டிக்கோயா நகர சபையில் ஐக்கிய தேசியக் கட்சியே கூடுதல் வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது.

சேவல் சின்னத்தில் தனித்துக் களமிறங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 6 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இரண்டு ஆசனங்களையும், சுயேச்சைக்குழு (நட்சத்திர சின்னம்) ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மையை எந்தவொரு அணியும் பெற்றிருக்கவில்லை. இதனால், வாக்கெடுப்பின் மூலம் தலைவர், பிரதித் தலைவர் ஆகியோரைத் தெரிவுசெய்வதற்காக தேர்தலின் பின்னர் முதல் தடவையாக ஹட்டன் டிக்கோயா நகர சபையானது ஆணையாளர் ஹேரத் தலைமையில் நேற்றுக் கூடியது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அழகமுத்து நந்தகுமார், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் சடையன் பாலச்சந்திரன் ஆகியோர் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டனர். அத்துடன், உப தலைவர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜே. பாமிஸும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் குமார கருணசிறியும் போட்டியிட்டனர். வாக்கெடுப்பில் 16 உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

வாக்கெடுப்பின்போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட்டியிட்டுத் தெரிவான செந்தில்ராஜ் சிவதர்ஷினி ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பாக வாக்களித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும் நுவரெலியா மாவட்டத்தில் புரிந்துணர்வு அடிப்படையில் இணைந்து செயற்பட்டுவரும் நிலையில், தாமரை-மொட்டு உறுப்பினர் ஒருவர் ஐ.தே.கவை ஆதரித்ததாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.

மலையக தேசிய முன்னணியின் தலைவரான ரிஸி செந்திலின் மனைவியே ஐ.தே.கட்சியை ஆதரித்து வாக்களித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், நட்சத்திரச் சின்னத்தில் போட்டியிட்ட மோகன் சுப்பிரமணியம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு ஆதரவாக வாக்களித்தார். இதனால், வாக்கெடுப்பு உச்சக்கட்ட பரபரப்புக் கட்டத்தை அடைந்தது. இரு வேட்பாளர்களும் தலா 8 வாக்குகள் வீதம் பெற்றனர். இதையடுத்து தலைவர் தேர்வை திருவுளச்சீட்டு மூலம் நடத்துவதற்கு ஆணையாளர் தீர்மானித்தார். இதற்கிடையில் வாக்கெடுப்பின்போது ஐ.தே.கட்சியை ஆதரித்த பெண் வேட்பாளர் மீது இ.தொ.கா. தலைமையிலான அணி கடும் விமர்சனங்களை முன்வைத்தது. பதிலுக்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் சொற்போரில் ஈடுபடவே சபையில் சுமார் 15 நிமிடங்கள்வரை கடும் அமளிதுமளி ஏற்பட்டது.

திருவுளச்சீட்டு மூலம் இ.தொ.காவின் உறுப்பினரே வெற்றி பெற்றார். இதையடுத்து இ.தொ.கா. ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்திக் கொண்டாடியதுடன், ஹட்டனில் வெற்றி ஊர்வலத்தையும் ஏற்பாடுசெய்து நடத்தினர். (21)



# பேருந்து குடை சாய்ந்ததில் 20 பேர் மருத்துவமனையில்

கொழும்பு, மார்ச் 27

திம்புள்ள, பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை- நாவலப்பிட்டி பிரதான வீதியில் நேற்று மாலை பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது. அதில் 20 பேர் காயமடைந்து கொட்டகலை மருத்துவனையில் சேர்க்கப்பட்டனர் என்று திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டி பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு தலவாக்கலை பகுதியை நோக்கி சென்ற தனியார் பேருந்தே பத்தனை மவுண்ட்வேர்னன் பகுதியிலுள்ள மண்மேட்டில் மோதி விபத்துக்குள்ளானது. பேருந்தில் பயணித்தவர்கள் சிறு சிறு காயங்களுடன் தப்பியுள்ளனர். காயங்களுக்குள்ளாகியவர்கள் கொட்டகலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று திம்புள்ள பத்தனை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்தின் வேகத்தை கட்டுபடுத்த முடியாமல் போனதே இந்த விபத்துக்கான காரணம் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# இலங்கை மீது கண்காணிப்பு தொடரவேண்டும்

## அமெரிக்காவிடம் வலியுறுத்தியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 27

ஐ.நா. தீர்மானத்தை இலங்கை முழுமையாக நிறைவேற்றும் வரையில் பன்னாட்டுச் சமூகத்தின் கண்காணிப்பு இலங்கை மீது இருக்கவேண்டும். இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளிடம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்காவுக்குக் கடந்த வாரம் பயணம் மேற்கொண்டிருந்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள அதிகாரிகளை வொசிங்டனில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார். அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான முதன்மைப் பிரதி உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் அம்மையாருடன் முக்கிய சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

2019ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன், இலங்கை மீதான பன்னாட்டுச்சமூகத்தின் கண்காணிப்பு முடிவுக்கு வரவுள்ளது. ஐ.நா. தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தி முடிக்கும் வரையில், இலங்கை மீதான பன்னாட்டுச்சமூகத்தின் கண்காணிப்புத் தொடரவேண்டும்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. அமர்வில், அமெரிக்கா இது தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வரவேண்டும் என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

மற்றொரு தீர்மானம் கொண்டு வரப்படுவது தொடர்பில் அமெரிக்கா ஆராயும் என்று இந்தச் சந்திப்பில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (5)



## வவுனியா அபிவிருத்தி குழுக் கூட்டம் நேற்று

வவுனியா,மார்ச் 27

வவுனியா அபிவிருத்தி குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான் ஆகியோரின் இணைத். தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டத்தின் அபிவிருத்திப்பணிகள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன. கூட்டத்தில் நிகழ்நேர மொழிபெயர்ப்பு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. வவுனியா நகரில் அமைந்துள்ள வவுனியா காமினி மகா வித்தியாலயம் மும்மொழி பாடசாலையாக மாற்றப்படவுள்ளது. இது தொடர்பாக பரீட்சை ஆணையாளர், கல்வி அமைச்சர், செயலாளர்களுடன் கலந்துரையாடி வடமாகாணத்தின் பரீட்சைகள் நடைபெறும் நிலையமாகவும் மாற்றியமைக்க தீர்மானித்துள்ளேன் என்று வவுனியா மாவட்டச் செயலர் விதான பத்திரன தெரிவித்தார். கனகராயன் குளத்துக்கு அருகிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு சொந்தமான காணியை பொலிஸார் விடுவிக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் கோரப்பட்டது. வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரிடம் இது தொடர்பாக விளக்கம் கோரப்பட்ட து. கனகராயன்குளம் பொலிஸ் பிரிவானது முல்லைத்தீவு பொலிஸ்மா அதிபரின் கீழ் வருவதால் இது தொடர்பாக தான் முடிவுகள் எடுக்க முடியாது என்று கூறினார். அந்தக் காணியை பொலிஸார் விடுவிக்க வேண்டும் என்று இறுதியில் முடிவெடுக்கபட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே. காதர் மஸ்தான், சார்ள்ஸ் நிர்மலநாதன் , வட மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன். வட மாகாண கல்வி அமைச்சர் க. சர்வேஸ்வரன், வட மாகாண மகளிர் விவகார மற்றும் கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரன், மாகாண சபை உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், ப.சத்தியலிங்கம், ஏ.ஜெயதிலக மற்றும் அமைச்சின் செயலாளர்கள், அரச உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள். பொலிஸார், இராணுவத்தினர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ந.ரி4,110)

## வாகன விபத்தில் மூவர் படுகாயம்

ஹற்றன், மார்ச் 27


தலவாக்கலை டெவன் நீர்வீழ்ச்சிக்கு அருகில் இடம்பெற்ற வாகன விபத்தில் மூவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து நேற்று இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஹற்றன் பிரதான வீதியில் இரு உந்துருளிகள் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து ஏற்பட்டது.

இதில் காயமடைந்தவர்கள் கொட்டக்கலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இருவர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)



கேலிச்சித்திரம்



நன்றி: டெய்லிமிரர்

## சீனாவுக்குப் பயணமானது நாடாளுமன்றக் குழு

இலங்கையின் 18 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு, ஒன்பது நாள்கள் பயணமாகச் சீனாவுக்கு நேற்றுப் புறப்பட்டுச் சென்றது.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, கடந்த வியாழக்கிழமை கொழும்பில் உள்ள ஹில்டன் விடுதியில், சீனத் தூதுவர் செங் சியுவான், வரவேற்பு உபசாரம் அளித்தார்.

அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தலைமையில், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேரைக்கொண்ட இந்தக் குழுவினர், சீனாவின் பீஜிங் நகருக்கும், குவாங்டோங் மாகாணத்துக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

சீனாவிலுள்ள துறைமுகங்கள், தகவல்தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழிற்சாலைகளுக்கும், இவர்கள் சென்று பார்வையிடவுள்ளனர். (5)

## ஓ.எல். எழுதிய 969 மாணவர்களின் பெறுபேறுகள் நிறுத்தம்

### பரீட்சைத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நாளை வெளியிடப்படும் என்றும், பரீட்சைக்குத் தோற்றிய 969 மாணவர்களின் பெறுபேறுகள் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (5)

## ஊடகவியலாளருக்கு ராணுவம் அச்சுறுத்தல்

### கண்டிக்கின்றது சுதந்திர ஊடக இயக்கம்

கொழும்பு, மார்ச் 27

முல்லைத்தீவு அளம்பிலில் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஹிரு தொலைக்காட்சியின் ஊடகவியலாளருக்கு இராணுவத்தினரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைக் கண்டிப்பதாகச் சுதந்திர ஊடக இயக்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

8 ஆண்டுகளுக்கு மேலாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணி தொடர்பில், முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் பிரதேச மக்களின் ஆர்ப்பாட்டத்தைச் செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஹிரு தொலைக்காட்சியின் பிராந்திய செய்தியாளர் சண்முகம் தவசீலன். இராணுவத்தினரால் 2 மணி நேரத்துக்கும் அதிகமாகத்தடுத்துவைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

இதனைப் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயலாகவே நாம் கருதுகின்றோம்.

பரந்த ஜனநாயகச் சூழலை ஏற்படுத்துவதற்காக ஊடகவியலாளர்கள் அவர்களது கடமையைத் தங்கு தடையின்றி, செவ்வனே செய்வதற்கு உரிய சூழலை ஏற்படுத்துக்கொடுக்க வேண்டியது அதிகாரிகளது கடமையாகும் என்பதைச் சுதந்திர ஊடக இயக்கம் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறது - என்றுள்ளது. (5)

## தென்னிலங்கை மீனவர் கொக்கிளாய் கடலில் சாவு

### கடலில் மிதந்து வந்த போத்தலின் திரவத்தை அருந்தினராம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

நீர் கொழும்பில் இருந்து முல்லைத்தீவு கொக்கிளாய் கடலில் மீன் பிடிக்க வந்த ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். மீன்பிடிக்க வரும் போது கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றில் இருந்த திரவத்தை பருகியதாலேயே அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

வீரசிறியே அன்ரனி பீரிஸ் இமால்சிறி பெர்னாண்டோ (வயது 67) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 21ஆம் திகதி .படகு ஒன்றில் மீன்பிடிக்க கொக்கிளாய் வந்தார். இவருடன் சிலரும் வருகை தந்தனர் வரும் போது கடலில் மிதந்து வந்த போத்தல் ஒன்றை கண்டு மது என நினைத்து அதில் இருந்த திரவத்தை அருந்தியுள்ளனர். இதனால் படகில் மயங்கிய நிலையில் இருந்த இருவர் கொக்கிளாய் வைத்தியசாலைபக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கிருந்து மாஞ்சோலை வைத்திசாலைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அந்த இருவரில் ஒருவர் கிசிச்சை முடிவடைந்து நேற்று முன்தினம் அனுப்பிவைக்கப்பட்டார்.

மற்றுமொருவரான வீரசிறியே அன்ரனி பீரிஸ் இமால்சிறி பெர்னாண்டோ தொடர்ந்து சிகிச்சை பெற்ற நிலையில் நேற்று முன்தினம் இரவு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார். இறப்பு தொடரடபான விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பிருமகுமார் மேற்கொண்டார். (21)

# கண்டிக் கலவரத்துக்கும் எமக்கும் தொடர்பில்லை

## ஹெல உறுமய தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 27
கண்டியில் இடம்பெற்ற கலவரத்துடன் ஜாதிக ஹெல உறுமயக்கட்சியைச்சேர்ந்த பிக்குகள் எவருக்கும் தொடர்பில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலரான அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
ஜாதிக ஹெல உறுமய எதிர்காலத்தில் நாட்டின் தேசிய உரிமைக்காகவும் நாட்டின் சமூக அமைதிக்காகவும் தொடர்ந்தும் செயற்பாடுகளை முன்னெடுக்கும். சிலர் இந்தச் சம்பவங்களுடன் பழைய சம்பவங்களைக் கோர்க்க முயற்சித்தனர்.
பேருவளை, மானெல்ல உள்ளிட்ட பிரதேசங்களில் கடந்த காலத்தில் ஏற்பட்ட சம்பவங்களுடன் கண்டிச் சம்பவத்தைத் தொடர்புபடுத்த முயற்சித்தனர். அந்தச் சம்பவங்கள் எவற்றிலும் எமக்குத் தொடர்பில்லை. அந்தச் சம்பவங்களின் பின்னர் விகாரைகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது நாங்கள் அங்கு சென்று அவற்றை மறுசீரமைக்க உதவியதுடன் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தோம்.
அதனை விடுத்து பேருவளைச் சம்பவங்கள் உள்ளிட்ட சம்பவங்களில் எங்கள் கட்சியினர் எவரும் சம்பந்தப்படவும் இல்லை. எதிர்காலத்திலும் அப்படியான சம்பவங்களில் சம்பந்தப்படவும் மாட்டார்கள். ஆனால் பயங்கரவாதிகளுக்கு எதிராக நாங்கள் அகிம்சை வழியில் போராடினோமே தவிர எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆயுதங்களைக் கையில் எடுத்து வன்முறைகளில் ஈடுபடவில்லை. அரசின் செலவில் ஆயுதக் குழுக்களை வைத்துக்கொண்டு கொலைகளை செய்தவர்கள், அண்மைக் கால சம்பவங்களை வேறு தரப்பினர் மீது சுமத்திவிட்டு, தமது இரத்தக் கறை படிந்த ஆடைகளுக்கு மேல் சில் துணிகளை அணிந்து தாம்குற்றமற்றவர்கள்என்று காண்பிக்க முயற்சிக்கின்றனர் - என்றார். (5)

# மாணவர்கள் ஊடாக பரப்பப்படும் இனவாதம்

## பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
பாடசாலை மாணவர்கள் தங்கள் அலைபேசிகளின் ஊடாக, இனவாதத்தையும், மதவாதத்தையும் பரப்புவதில் ஈடுபட்டுள்ளதாக இரகசியப் பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.
"ஒரு தொகை மாணவர்கள் ஒன்றிணைந்து, சமூக ஊடகக் குழுக்களை உருவாக்கி அதனூடாகப் பிற மதங்களுக்கும், இனங்களுக்குமிடையில் வன்செயல்களைத் தூண்டிவிட முயல்கிறார்கள். இப்படியாகப் பரப்பப்பட்ட 5 சம்பங்களில் பிள்ளைகள் நேரடியாகவே தொடர்புபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இது போன்ற பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையும் தெரியவந்துள்ளது" என்று இரகசியப் பொலிஸ் உயர் அதிகாரி தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அமைவாக 8 வயதுக்குக் கூடிய எவரையும் தண்டிக்க முடியும். குற்றவாளிகளாக அவர்கள் இனங்காணப்பட்டால் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் கொடுக்க முடியும். விசாரணையில் இருக்கும் வழக்குகளில், சில மாணவர்கள் பெற்றோல் குண்டுகள் தயாரிக்கும் முறைகளை சமூகவலைத் தளங்களில் பகிர்ந்து கொண்டுள்ளனர். இன்னுமொரு சம்பவத்தில் ஒரு மாணவன், சமயத் தலங்களைத் தாக்குவதற்காக ஒன்று கூடும்படிஅழைப்புவிடுத்துள்ளார்.
கண்டறியப்பட்டுள்ள 5 சம்பவங்களிலும் மாணவர்கள் தங்கள் பெற்றோர்களின் அலைபேசிகளைப் பெற்றோருக்குத் தெரியாமலேயே பாவித்துள்ளமை தெரியவந்துள்ளது.
குற்றம் புரிந்தவர்கள் சிறுவர்கள்தான் என்றாலும், அவர்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இரகசியப் பொலிஸாரின் தொடர் நடவடிக்கைகள் காரணமாகவே இவை வெளிச்சத்துக்கு வந்துள்ளன - என்றார். (5)

# சண்டை என்றால் சட்டை கிழியத்தான் செய்யும்

## இப்படிச் சொல்கிறார் மல்வத்து துணை மகாநாயக்கர்

கொழும்பு, மார்ச் 27
போரின்போது உயிரிழப்புகள் தவிர்க்க முடியாது என்று மல்வத்துபீட துணை மகாநாயக்கர் ஆனமடுவே தம்மதஸ்சி தேரர் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணிக் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மல்வத்துபீட துணை மகாநாயக்கரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றது.
இதன்போது கருத்து வெளியிட்ட தம்மதஸ்சி தேரர் தெரிவித்ததாவது:
போர் ஒன்று நடைபெற்றால் இரண்டு பக்கத்திலும் இழப்புக்கள், உயிரிழப்புக்கள் மற்றும் அங்கவீனமடைதல்கள் நடைபெறவே செய்யும். அதற்காக வெளிநாட்டுச் சக்திகளைக் கொண்டு ஒரு தரப்பினரை மட்டும் தண்டிப்பதற்கான முயற்சிகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.
கடந்த அரசு போரை நிறுத்தி நாட்டில் சமாதானத்தை உருவாக்கியது. நல்லாட்சி அரசு ஆயிரம் பொய்களைக் கூறி அதிகாரத்துக்கு வந்தது. அதன் பின்பு பன்னாட்டுச் சக்திகளிடம் அளவுக்கதிகமாக அடிபணிந்து நடக்கத் தொடங்கியுள்ளது. இவ்வாறான போக்குகள் நாட்டுக்கு நன்மையைத் தரப் போவதில்லை. அதனைப் பொதுமக்களும் உணர்ந்துள்ளதன் காரணமாகவே கடந்த தேர்தலின்போது அரசுக்குத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் வாக்குகளைப் பயன்படுத்தியுள்ளனர் - என்றார். (5)

# நீதித்துறையை அவமதித்தவர்கள் யார்?

## விவாதத்துக்கு மகிந்த அணி தயாரா சவால் விடுகிறார் ரஞ்சன் ராமநாயக்க



கொழும்பு, மார்ச் 27
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட ஒன்றிணைந்த எதிரணியினரைத் தன்னுடன் பகிரங்க விவாதம் நடத்த வருமாறு, பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க சவால் விடுத்துள்ளார்.
நாடாளுமன்றச்சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி, உயர் நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதித்துறையினர் மீது அவதூறுபரப்பியதாகமகிந்த அணியினர் என் மீது குற்றஞ்சுமத்தியுள்ளனர். சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் இதுகுறித்து மகிந்த அணியினர் முறையிட்டுள்ளனர்.
என் மீது குற்றஞ்சுமத்துபவர்கள் நேரடி விவாதத்துக்கு வந்தால் நீதித்துறையினரை அவமதித்தவர் யாரென்ற உண்மையை வெளிப்படுத்துவேன். என் மீதுகுற்றஞ்சுமத்துபவர்கள், முன்னர் ஆட்சி நடத்திய போது நீதித்துறையினரை அவமதித்தனர். அலரி மாளிகையிலேயே தீர்ப்புகள் எழுதப்பட்டது. முன்னாள் நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை அவமதித்துப் பதவி நீக்கியதை மறந்துவிட்டார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)





# மேர்வின் வீட்டு கொண்டாட்டத்தில் ரணிலும் - ராஜித சேனாரத்னவும்

கொழும்பு, மார்ச் 27
முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகன் மாலக சில்வாவின் திருமணம் கொழும்பில் பிரமாண்டமாக இடம்பெற்றுள்ளது.
ஈரான் நாட்டின் செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்த மணமகளை, மாலக சில்வா கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கரம்பிடித்துள்ளார்.
திருமண வைபவத்தில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரசின் மூத்த அமைச்சர் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இதன்போது தலைமை அமைச்சர் மற்றும் ராஜிதவுடன் மேர்வின் நெருக்கமாக உரையாடும் வகையிலான ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில்வைரலாகப் பரவியுள்ளன. (5)



# புதிய தலைவரைத் தெரிவு செய்வோம்

## ரத்னதேரர் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 27
புதிய தேசியத் தலைவரொருவரை நியமிப்பதற்கான முயற்சிக்கு பின்நிற்கப் போவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அதுரெலியே ரதன தேரர் தெரிவித்துள்ளார்.
தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது, எந்தவொரு தேசிய சொத்துக்களையும் விற்பனை செய்வதில்லை. இராணுவத்தினரைச் சிறைக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் கைவிடப்படும் ஆகிய உறுதிமொழிகள் வழங்கப்படுமாயின் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்துவதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை.
ஆனால் ரணிலின் பயணம் இதே பாதையில் தொடருமாயின், அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் நானும் இணைந்து கொள்ள நேரிடும். புதிய தேசியத் தலைவரொருவரை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5)

### வடக்கில் மாவட்டந்தோறும்

# 3 மாதங்களுக்கு ஒரு தடவை எச்.ஐ.வி. பற்றிப் பேச முடிவு

யாழ்ப்பாணம், மார்ச் 27

**வடக்கில் எய்ட்ஸ் தொற்று மற்றும் அதிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான நடவடிக்கைகள், அவற்றின் முன்னேற்ற நிலை தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன. மாவட்டந்தோறும் 3 மாதங்களுக்கு ஒருதடவையும் மாகாண மட்டத்தில் 6 மாதங்களுக்கு ஒரு தடவையும் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.**

எச்.ஐ.வி. தொற்று மற்றும் எய்ட்ஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பான மாகாண மட்டக் கலந்துரையாடல் மன்னாரில் அண்மையில் இடம்பெற்றது. அதிலேயே மேற்குறித்த விடயம் தீர்மானிக்கப்ப ட்டது. எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில், கடந்த வருடத்தில் இதன் தொற்று அதிகரித்துள்ளதாக பாலியல் தொற்றுத் தடுப்புப் பிரிவின் கொழும்பு தலைமையகம் கூறியுள்ளது. அதனால் வடக்கில் இதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வடக்கில் கடந்த வருடம் மாத்திரம் 7 பேர் எச்.ஐ.வி. தொற்றுக்கு ஆளாகியமை இனங்காணப்பட்டது. நாடு முழுவதும் இவ்வாறு 284 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். வடக்கில் கடந்த டிசெம்பர்வரை 100க்கும் மேற்பட்டவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 50 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். நாடு முழுவதும் கடந்த டிசெம்பர்வரை 2 ஆயிரத்து 844 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 440 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

அதனையடுத்து வடக்கில் மாவட்டம் தோறும் 3 மாதங்களுக்கு ஒரு தடவையும் வடக்கு மாகாணம் தழுவியதாக 6 மாதங்களுக்கு தடவையும் இந்தக் கலந்துரையாடலை நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டுள்ளது என்று சுகாதாரத்தரப்பினர் தெரிவித்தனர். (எ-4)

## வனத்தில் தீ விபத்து

கொழும்பு, மார்ச் 27

வெல்லவாய - சியம்பலகுணய வனப்பகுதியில் நேற்று முன்தினம் தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தீப்பரவலில் இதுவரை 25 ஏக்கர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

வறட்சியான காலநிலை மற்றும் காற்று காரணமாக தீயை அணைக்க முடியாததால் தீபரவல் அதிகரித்தது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப் பிரிவினரும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். (ற-ரி5)

## மனநலம் குன்றிய பெண் மீது வன்புணர்வு; சந்தேகநபர் கைது

கொழும்பு, மார்ச் 27

வீட்டில் தனிமையில் இருந்த 20 வயதுடைய மனநலம் குன்றிய பெண்ணை வன்புணர்வுக்குட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நடந்தத. ஆணைமடுவை தோனிகல பிரதே சத்தைச் சேர்ந்த 31வயதான நபரே கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

தாய் வேலைக்கு சென்ற போது வீட்டில் தனிமையில் இருந்தவேளையிலேயே வன்புணர்வுக் குட்படுத்தப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# வேறு மொழி தெரியாமல் பெருமை பேசிப் பயனில்லை

### கல்வியியற் கல்லூரி முதல்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 27

அடுத்த சமூகத்தின் மொழி தெரியாமல் 2000 ஆயிரம் வருட வரலாறு நம் கைவசம் இருக்கிறது. தங்களுக்குச் சாதகமாக எழுதப்பட்ட வரலாற்றைப் பற்றிப் பெருமையடித்துக் கொண்டிருப்பதில் பயனேதும் இல்லை.

இவ்வாறு மட்டக்களப்பு தாளங்குடா கல்வியியற் கல்லூரி முதல்வர் எஸ்.ராஜேந்திரன் தெரிவித்தார்.

ஒட்டமாவடி மத்திய தேசியக் கல்லூரி மண்டபத்தில் மட்டக்களப்பு சிவில் பிரஜைகள் சபையின் தலைவர் ரீ. திருநாவுக்கரசு தலைமையில் நேற்று சகோதர மொழியான சிங்களத்தையும் இணைப்பு மொழியான ஆங்கிலத்தையும் எழுத, பேச, வாசிக்கக் கற்றுக் கொண்ட தமிழ் பேசும் முஸ்லிம் மற்றும் தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-" நாம் அடுத்த சமூகத்தின் மொழியை ஆர்வத்தோடு கற்றுக் கொள்வதில் நமக்கு ஒன்றும் குறைந்து விடப் போவதில்லை. அரசு கொள்கை வகுப்பில் இதற்கான சரியான நடைமுறை இருக்க வேண்டும்.

சிங்கள மொழியைப் போதிக்க ஒரு சிங்கள விரிவுரையாளரை அனுப்புவதற்கு நமது நிருவாகங்களில் வழிவகைகள் இல்லை. அதுபற்றிச் சிந்திப்பதற்குக் கூட நிர்வாக முறைமை இடம்கொடுப்பதுமில்லை. இங்கு மட்டுமல்ல தமிழ் பேசும் வடக்கு கிழக்கின் வேறெங்கும் உள்ள கல்வி, உயர் கல்வி நிறுவனங்களில் புலமைவாய்ந்த ரீதியில் சிங்கள மொழியைப் போதிக்க அதில் கவனம் செலுத்த எவரும் முயற்சிப்பதில்லை. எதிர்காலத்தில் இலங்கையில் இன ரீதியான சகவாழ்வு ஐக்கியம் நிலவ வேண்டுமாயின் கொள்கை ரீதியான மாற்றங்கள் தேவை என்றார்.

நிகழ்வில் படை, பொலிஸ், மற்றும் நிர்வாக சேவை அதிகாரிகள், நிறுவனப் பிரதிநிதிகள், மட்டக்களப்பு சிவில் பிரஜைகள் சபையின் பொதுச் செயலாளர் எச்.எம். அன்வர் மாவட்ட அமைப்பாளர் ஏ.எஸ்.எம். ஸாதிக் ஆகியோரும் டிப்ளோமா பாடநெறியை முடித்துக் கொண்ட பயிலுநர்களும் கலந்து கொண்டனர். (ற-ரி5)

# இலவச நடமாடும் சேவை

நுவரெலியா,மார்ச் 27



தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் இலவச நடமாடும் சேவை நேற்று முன்தி னம் நடைபெற்றது.

தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றது.

பிறப்பு சான்றிதழை சட்டரீதியாக மொழி பெயர்த்துக் கொடுத்தல், பிறப்பு சான்றிதழில் உள்ள பிழைகளை அடையாளம் கண்டு அவற்றை திருத்திக் கொடுத்தல், பிறப்பு சான்றிதழின் புதிய பிரதியை வழங்குதல், ஓய்வூதியம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வு, நீர் மற்றும் மின்சாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கல் எனப் பல சேவைகள் இதில் முன்னெடுக்கப்ப ட்டன.

இதில் நுவரெலியா மாவட்ட பிரதேச மற்றும் நகர சபைகள், பொலிஸ் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, மனித உரிமைகள் ஆணைக்குழு என பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி4)

# மாலபேயில் வீடு மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, மார்ச் 27

அதுருகிரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாலபே, ஜோதிபால மாவத்தையில் உள்ள வீடொன்றின் மீது நேற்று அதிகாலை துப்பாக்கிப் பிரயோகம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகத்தால் வீட்டின் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் சேதமடைந்தன எனவும் எவ்வித உயிராபத்துக்களும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். ரி 56 ரக துப்பாக்கி ஒன்றின் மூலமே இந்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அதுருகிரியப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# தங்கை தாக்கியதில் சகோதரி உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 27

மோதரப் பகுதியில் சகோதரிகளுக்கிடையில் ஏற்பட்ட தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார். இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது.

சகோதரிகளுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் உச்சமடையவே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் படுகாயமடைந்த மூத்த சகோதரி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட் பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. மோதர பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் சிறிய தங்கை கைது செய்யப்பட்டுள்ளதுடன் மோதர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# யானை தாக்கி ஒருவர் சாவு

பொலனறுவை, மார்ச் 21

பொலனறுவை - அரலகங்விலவில் காட்டு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை வயலுக்கு சென்ற போதே அவர் தாக்குதலுக்கு இலக்கானார். இதில் படுகாயமடைந்தவர் அரலகங்வில மருத்துவனையில் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மஹதமன பிரதேசத்தை சேர்ந்த 63 வயதான நபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

# துப்பாக்கி வைத்திருந்த நபர் பொலிஸாரால் கைது

கொழும்பு, மார்ச் 27

பண்டாரகம - கெலனிகம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். பாணந்துறை சட்டத்தை வலுப்படுத்தும் பிரிவின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலொன்றுக்கு அமையவே இவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டுள்ளவர் சூரியபாலுவ - கடவத்தை பிரதேசத்தை சேர்ந்த 41வயதானவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரிடமிருந்து வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள ரிப்பர் ரக துப்பாக்கியொன்றும், பல்வேறு வகையான 93 ரவைகளும் மீட்கப்ப ட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணை களைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ற-ரி5)

# மாணிக்கக் கற்களுடன் சீன நாட்டவர் கைது

கொழும்பு, மார்ச் 27

சீனாவின் சங்காயில் இருந்து சட்டவிரோதமாக மாணிக்கக்கற்களை கடத்திவந்த சீன நாட்டவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நடந்தது.

இவரிடமிருந்து 12 மணிக்கக்கற்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும் அவற்றின் பெறுமதி சுமார் 21 மில்லியன் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## சட்டவிரோதமாக சிகரெட்கள் விற்றோருக்கு ரூ.20,000 தண்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
வெளிநாட்டு சிகரெட்களை கடைகளில் சட்டவிரோதமாக விற்ற 3 பேருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

வவுனியாவில் பொலிஸார் 4 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்தனர். அவர்களின் வழக்கு வவுனியா நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. 3 பேர் மன்றில் முற்பட்டனர். அவர்களில் ஒருவரிடம் 160 சிகரெட்கள் மீட்கப்பட்டன. அவருக்கு 14 ஆயிரத்து 600 ரூபா விதிக்கப்பட்டது. மற்றையவரிடம் 20 சிகரெட் மீட்கப்பட்டன. அவருக்கு 3 ஆயிரத்து 600 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மூன்றாவது நபரிடம் 10 சிகரெட்கள் மீட்கப்பட்டன. அவருக்கு ஆயிரத்து 800 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. நான்காவது சந்தேகநபரிடம் 140 சிகரெட்கள் மீட்கப்பட்டன. அவர் மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வெளிநாட்டு சிகரெட்கள் அரசின் தீர்வை வரியின்றி விற்பனை செய்ய முடியாது. அது சட்டவிரோத விற்பனை என்று கொள்ளப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

### வவுனியாவில் கடந்த ஆண்டு மாத்திரம் போதைப்பொருள்களால்

## ரூ.16இலட்சம் ரூபா தண்டமாகஅறவீடு

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆண்டு தண்டப்பணமாக 16 இலட்சத்து 16 ஆயிரத்து 500 ரூபா பெறப்பட்டுள்ளது என்று வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி எ.அசோக திலகரத்தின தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடத்தில் மாத்திரம் சட்டவிரோதமான கள்ளு, கசிப்பு உற்பத்திகள் மற்றும் சாராய விற்பனைகளில் ஈடுபட்டவர்கள், கஞ்சா கடத்தல் மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டவர்கள் மீது 507 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

எமது சுற்றிவளைப்புச் சோதனைகளின்போது மாத்திரம் 21கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (எ-110)

## இலகு தமிழ் என்ற பெயரில் மொழியை சீரழிப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது

### வடக்கு மாகாண முதலமைச்சர் ஆதங்கம்



யாழ்ப்பாணம் மார்ச் 27
விஞ்ஞானம் வளர்ச்சி பெறுகின்றபோதும் இயற்கையின் வனப்பையும் இயற்கை எமக்குத் தரும் கொடைகளையும் இரசிக்கக் கூடிய வகையில் இளைய சமுதாயம் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இலகு தமிழ்ப் பாவனை என்ற பெயரில் மொழியைச் சீரழிக்கும் செயற் பாடுகள் கண்டிப்புக்குரியன. இன்றைய தொடர்பாடல் சாதனங்கள் தமிழ் மொழியின் இலக்கியச் சுவையை உணர முடியாதவாறு மழுங்கடிக்கின்ற செயற்பாடுகளில் போட்டி போட்டுக்கொண்டுசெயற்படுகின்றமை வேதனைக்குரியது. இவ்வாறு தெரிவித்தார் வடக்குமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன்.

வடக்குமாகாணத்துக்குட்பட்ட கலைஞர்களை மதிப்பளித்து முதலமைச்சர் விருது வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணம் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலைஇலக்கியங்கள்ஆரோக்கியமான சமுதாயத்துக்கு மிகவும்அத்தியாவசியமானவையாகும். அவை ஒரு இனத்தின் அடையாளங்களை பிரதிபலிக்கக் கூடிய கண்ணாடிகளாகும். இத்தகைய கலைபண்பாட்டு விழுமியங்கள் வளர்ச்சி பெற வேண்டுமாயின் சமுதாயம் ஆரோக்கியமானஒருநிலைக்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். அப்போது தான் கலைப்படைப்புக்களும் ஆரோக்கியமானதாக அமையும்.

அந்த வகையில் கலை பண்பாட்டு பாரம்பரிய வளர்ச்சிக்கும் அதன் பேணுகைக்கும் ஆணி வேராக செயற்படக் கூடிய கலைஞர்கள் மதிப்பளிக்கப்பட வேண்டும். அவர்களின் படைப்புக்கள் போற்றப்படுவதுடன் அவர்களின் சேவைகள் தொடர்ந்து மக்களுக்கு கிடைக்கக் கூடிய வகையில் வாய்ப்புக்களையும் சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

கலையும் கலைஞனும் எப்போதும் வறுமையில் இருந் ததாகவே பழைய வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. ஆனால் தற்காலக் கலைஞர்கள் அவ்வாறல்ல. பலர் செல்வ மிகுதியுடன் சிறப்பான வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். எந்த ஒரு உண்மையான படைப்பாளியும் உருவாக்குகின்ற படைப் புக்கள் வறுமையைத் துடைப் பதற்காக உருவாக்கப்படுவதில்லை. முகையொன்று மலர்வது போல் கலைஞர்களின் அந்தரங்க வெளிப்பாடுகளே படைப்புக்கள். ஆனால் அவர் களின் படைப்புக்கள் மெருகேற்றப்பட்டு சிறந்தவையாக அமைகின்ற போது அவற்றிற்குரிய அங்கீகாரமும் அந்தஸ்தும் காலம் கடந்தே கிடைக்கின்றன.

துன்பச் சூழல்களில் வாழுகின்ற படைப்பாளிகளும் அவர்களின் புடம் போடப்பட்ட படைப்புக்களும் போற்றப்பட வேண்டியவை.

பொக்கிசமாக வைத்து பேணப்பட வேண்டியவை.

பல்வேறுபட்ட படைப்புக்களும் படைப்பாளிகளும் எம்மிடையே காணப்பட்டபோதும் அவர்களின் வாழ்வு இலை மறை காயாகவே இருந்து வந்துள்ளன. அவர்களின் படைப்புக்கள் மக்களின் கைகளுக்கு கிட்டாமலே சென்ற வரலாறுகள் பல.

எனினும் இவ்வாறான படைப்பாளிகளை இனங்கண்டு அவர்களை பொது மக்களுக்கு அறிமுகம் செய்வதற்கும் அவர்களின் படைப்புக்களை மக்களின் கைகளில் தவழச் செய்வதற்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆக்க பூர்வமான செயற்பாடுகள் பலவற்றை முன்னெடுத்து வருகின்றது.

இன்றைய இளைய தலைமுறையினரில் கூடுதலானவர்கள் இலக்கிய உணர்வு குன்றியவர்களாகவும் கலை நயம் குறைந்தவர்களாக வும் காணப்படுகின்றனர்.

அவர்கள் நவீன இலத்திரனியல் யுகத்தில் இலத்திரனியல் கருவிகளுடன் கூடிய நாட்டங்களை கொண்டிருக்கின்ற காரணத்தால் இயற்கையின் எழில் கொஞ்சும் வனப்பையும்அதன்ஆரோக்கியசூழ்நிலையையும்அறியமாட்டாதவர்களாகவேறொரு செயற்கைப் பரிமாணத்தில் சதா சஞ்சரித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் இயற்கை இயற்கைதான். செயற்கை செயற்கைதான். இதை எங்கள் இளைய சமுதாயம் உணர வேண்டும்- என்றார்.

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

## மருத்துவபீட கண்காட்சியை நடத்துவதில் குழப்ப நிலை

### மாணவர்களும் ஊழியர்களும் இன்று பேச்சு

யாழ்ப்பாணம், 27
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தினர் ஏற்பாடு செய்திருந்த மருத்துவக் கண்காட்சி திட்டமிட்டவாறு இடம்பெறுமா அல்லது பிற்போடப்பட வாய்ப்புள்ளதா என்று குழப்பம் ஏற்பட்டுள்ளது.

அது பற்றித் தீர்மானிக்க மருத்துவ பீட மாணவர்களும் மருத்துவபீட ஊழியர்களும் இன்று ஊழியர் அறையில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். ஊழியர் சங்கம் இதற்கு ஏற்பாடு செய்துள்ளது. கல்விசாரா ஊழியர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மருத்துவக் கண்காட்சியை பெருமளவில் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்ட போதும் ஊழியர்களது போராட்டம் தடை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

கண்காட்சிக்கான ஏற்பாடுகளை மருத்துவபீட ஊழியர்களது பங்களிப்பின்றிச் செய்வது சாத்தியப்படாததொன்று. ஊழியர்கள் நாடு முவதும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர். கண்காட்சிக்கு அவர்கள் உதவ முன்வரத் தவறின் அதனை நடத்துவது சிரமம் என்று மாணவர்களும் கூறியுள்ளனர்.

மருத்துவ பீடமும் அந்த விடயத்தில் தீர்மானம் எடுக்க முடியாத இக்கட்டு நிலை. எதிர்வரும் 4,5,6 ஆம் திகதிகளில் குறித்த கண்காட்சியை நடத்தத் திட்டமிடப்பட்டது. அதனால் கண்காட்சி இடம்பெறுமா இடம்பெறாதா என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

இதுதவிர, இந்தக் கண்காட்சிக்கு முதன்மை விருந்தினர்களாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஆகியோர் ஒவ்வொரு நாளும் விருந்தினர்களாக அழைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது. கண்காட்சி இடம் பெற்றால் அதற்கு விருந்தினர்களாக அமைச்சின் செயலரும் ஆணைக்குழுத் தலைவரும் அழைக்கப்பட்டால் அதற்கு ஊழியர் சங்கம் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும் என்று ஊழியர் சங்கம் தெரிவித்தது. (எ-4)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

## கணக்காளருக்கு கொடுக்கப்பட்ட அழுத்தத்துக்கு கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்காளருக்கு உயர்மட்ட அழுத்தம் கொடுக்கப்பட்டமைக்குக் கவலையடைவதோடு கண்டனமும் தெரிவிக்கிறோம்.

இவ்வாறு பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்தது.

சங்கக் கூட்டம் பல்கலைக்கழக சங்க அறையில் நேற்று இடம்பெற்றது. தனக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டதாலேயே சம்பளப் பட்டியலில் கையெழுத்திட்டேன் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்காளர் தெரிவித்தார் என்று பல்கலைக்கழக நிறைவேற்று நிர்வாக உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்தது.

அதனால் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் சங்கம் எடுக்கவில்லை. ஆனால் பல்கலைக்கழகப் பதிவாளர் நெருக்குதல் கொடுத்திருந்த விடயத்துக்கு உரிய பதிலை வழங்கியிருக்கவில்லை. அதனால் பதிவாளர் நிர்வாக உத்தியோகத்தர் சங்கத்திலிருந்து நேற்று நீக்கப்பட்டார் - என்று நிர்வாக உத்தியோகத்தர் சங்கக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றிய கடிதக் குறிப்பு ஒன்று பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள் உள்ளிட்டோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)

# சுதாகரனின் விடுதலைக்காக மைத்திரிக்குக் கருணை மனு

## மேலதிக மாவட்டச் செயலரிடம் கையளித்தனர் பிள்ளைகள்

கிளிநொச்சி,மார்ச் 27
அரசியல் கைதி ஆனந்த சுதாகரனின் விடுதலையை வலியுறுத்திய கருணை மனு ஒன்று கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலரிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.
ஆனந்த சுதாகரனின் விடுதலையை கருணை மனுக்கள் அனுப்புவதன் மூலம் சீக்கிரப்படுத்த முடியும் என்ற சட்ட வல்லுநர்களின் ஆலோசனையின் பேரில், தமிழ் இளைஞர் சமூகத்தால் வடக்குக் கிழக்கில் உள்ள பொது அமைப்புக்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்திட்ட கருணை மனுக்கள் மேலதிக மாவட்டச் செயலர் பிருந்தா கரனிடம் அரசியல் கைதியின் பிள்ளைகளால் கையளிக்கப்பட்டன.



2008 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு கடந்த வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி அரசதலைவர் மைத்திரிபால சிறிசேவுக்கு கருணை மனுக்களை அனுப்புவதற்கான செயற்றிட்டம் கடந்த சில நாள்களாக வடக்கு, கிழக்கு மாகாணம் முழுவதும் முன்னெடுக்கப்பட்டது.

(ந.ரி4)

---

### வடக்கு மாகாணத்தின்

## நடப்பு வருட வேலைத் திட்டங்களை கொழும்பு நிதி ஆணைக்குழு ஏற்பு

யாழ்ப்பாணம்.மார்ச்.27
வடக்கு மாகாணத்தில் நடப்பு வருடத்தில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில்மேற்கொள்ளப்படவுள்ள வேலைத் திட்டங் களை கொழும்பு நிதி ஆணைக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது என்று பிரதி தலைமைச்செயலரின் திட்டமிடல் பிரிவு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாணத்தில் நடப்பு வருடத்தில் மேற்கொள்ளப்படவுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பான விவரங்களை ஒவ்வொரு திணைக்களமும் திட்டமிடல் பிரிவுக்கு வழங்கியிருந்தது. 2ஆயிரத்து 452 மில்லியனுக்கான திட்டங்கள் முன்வைக்கப் பட்டன.
திட்டங்கள் தொடர்பில் அதன் தன்மை, பயன்கள், தேவை தொடர்பில் திணைக்களத் தலைவர்களுடன் நேரில் சென்று கலந்துரையாடுவதற்கு இன்றைய தினம் (நேற்று) நிதி ஆணைக்குழுவின் தலைவர் யு.பளிகைஹார தலைமையிலான குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர். கலந்துரையாடல் யாழ்ப்பாணப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.
இதன்போது ஒவ்வொரு திணைக்களமும் முன்வைத்த திட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. அதன் பின்னர் எம்மால் வழங்கப்பட்ட 95 வீதமான திட்டங்களுக்கான சம்மதம் வழங்கப்பட்டது. மிகுதி 5 வீதமான திட்டங்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். ஏனென்றால் திட்டங்கள் தொடர்பில் அதன் நன்மை தொடர்பில் ஆராயப்படும்விடத்து அந்தத் திட்டங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
திட்டங்களுக்கான எழுத்து மூலமான அனுமதி இந்த வாரம் எமக்கு ஆணைக் குழுவால் அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படும். முன் வைக்கப்பட்ட கட்டுமான ரீதியான வேலைகளின் ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-7)

---



தமிழ் அரசியல் கைதியான சச்சிதானந்தம் ஆனந்தசுதாகரை விடுதலை செய்யுமாறு அரச தலைவருக்குக் கருணை மனு அனுப்பப்பட்டுள்ளது. உலகத்தமிழ் மாணவர் ஒன்றியத்தால் வடக்கில் அனைத்துப் பகுதிகளிலும் கையெழுத்துமனு சேகரிக்கப்பட்டது. அது யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகனிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. அது அரசதலைவருக்கு அனுப்பி வைக்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். உலகத் தமிழ் மாணவர் ஒன்றிய வடமாகாண தலைவர் ம. தனுசன் செயலாளர் வ.அனுராஜ் ஆகியோர் மனுவைக் கையளித்தனர் என்று தனுசன் தெரிவித்தார். அவர் மனுவைக் கையளிப்பதை படத்தில் காணலாம். (4)

---

## முன்பள்ளி ஆசிரியர்களின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை

வடக்குமாகாண உள்ளூராட்சிசபைகளின்கீழ் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுடுள்ளது என்று மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: வடக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளின்கீழ் 40க்கும் அதிகமான முன்பள்ளி ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. இதனை நிரப்புவதற்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்கள் கோரியுள்ளது. ஜி.சி.ஈ சாதாரண தர சித்தியுடன் முன்பள்ளி டிப்ளோமாவை முழுமை செய்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். போட்டிப் பரீட்சையின்மூலம் ஆசிரியர்கள் உள்வாங்கப்பட்டு அவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. தற்போது ஏனைய முன்பள்ளி ஆசிரியர்கள் அமைச்சின் கீழ் உள்வாங்கப்பபட்டு கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுவரும் நிலையில் இந்த நிரந்த நியம னங்கள் மூலம் முன்பள்ளி ஆசிரியர்களின் கொடுப்பனவில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

(எ-7)

---

## அனுமதியற்ற நல்லெண்ணெய் விளம்பரம்: 5 ஆயிரம் ரூபா தண்டம்

யாழ்ப்பாணம்.மார்ச்.27
முதன்மை உணவு அதிகாரியின் அனுமதி இல்லாமல் வானொலி ஒன்றில் நல்லெண்ணெய் மருத்துவ தேவைகளுக்கு உகந்தது என்று தனியான விளம்பரம் செய்தவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது ஊர்காவற்றுறை நீதிமன்று.
மருத்துவம் சார்ந்த தேவைகளுக்கு பயன்டுத்தப்படும் பொருள் தொடர்பில் முதன்மை உணவு அதிகாரியின் அனுமதி பெறுவது அவசியம். அவ்வாறு இல்லாமல் ஆனைக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவரின் நல்லெண்ணெய் மருத்துவத்துக்கு பயன்படும் என்ற பாணியில் உள்ளூர் வானொலி ஒன்றில் விளம்பரம் ஒளிபரப்பப்பட்டது. இதனைப் பதிவு செய்து காரைநகர் பொதுப் பரிசோதகர் ஊர்காவற்துறை நீதி மன்றில் கடந்த ஜனவரி மாதம் வழக்கு தொடுத்தார். குறித்த நபர் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் வழங்கு நடைபெற்று நீதிமன்றில் நபர் முற்ப டுத்தப்பட்டார்.
அனுமதி பெறாமல் விளம்பரம் செய்த குற்றத்துக்காக 5 ஆயிரம் தண்டம் விதித்து தீர்ப்பளித்தது மன்று. (எ-7)

---

## ஆனந்தசுதாகரனின் விடுதலைக்காக அனைவரும் கையொப்பம் இடுவோம்

*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்.*

யாழ்ப்பாணம் மார்ச் 27
ஆயுள்தண்டனைக் கைதியாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஆனந்தசுதாகரனின் பள்ளிசெல்லும் குழந்தைகளின்எதிர்காலவாழ்க்கையைக் கருத்தில் கொண்டும், ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தியும் வடக்கு மாகாணப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 29ஆந் திகதி (வியாழக்கிழமை) பாடசாலைகளில் தமது கையொப்பங்களைப் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.
இது தொடர்பில் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில்மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
வடக்கு கிழக்கில் பல்லாயிரம் பள்ளிசெல்லும் குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் உறவினர்கள் பலருக்கு என்ன நடந்ததென்பது இன்னும் புதிராகவே உள்ளது. பாடசாலைகளில் அந்தப் பிள்ளைகளின் மனங்களில் ஏற்பட்டுள்ள விரக்தி நிலையை நாம் நித்தம் கண்டுவருகின்றோம். தமது எதிர்காலம் பற்றிய கவலையுடன் உள்ள அந்த மாணவமுகங்களில் மலர்ச்சி ஏற்பட வேண்டுமாக இருந்தால் அவர்களின் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும், கண்முன்னே அடைக்கப்பட்டுள்ள உறவுகளும் விடுதலைசெய்யப்படவேண்டும்.
எமது நாட்டில் அதுவும் வடகிழக்கு மாகாணங்களில் பல்லாயிரம் குழந்தைகள் எதிர்காலக் கனவுகள் இன்றி தம்மோடு துணையாக வாழ வேண்டிய உறவுகளின் பிரிவை எண்ணி தினம், தினம் அழுது கண்ணீர் வடிப்பவர்களாக உள்ளனர்.
முதலில் தாயை இழந்து, தந்தையைப் பிரிந்து வாழும் ஆனந்தசுதாகரனின் பிள்ளைகளிடம் அவரை முழுமையாக விடுதலை செய்து ஒப்படைக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். அதிபர்களும் ஆசிரியர்களும் கையொப்பங்களை பதிவுசெய்து தமது கல்வி வலயங்களில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றுள்ளது.

---

### ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி

## சாவகச்சேரியிலும் கையெழுத்து சேகரிப்பு



சாவகச்சேரி மார்ச் 27
அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் விடுதலையை வலியுறுத்தி அரச தலைவருக்கு அனுப்புவதற்காக சாவகச்சேரியில் நேற்று முன்தினம் சமூக அமைப்புகள் ஒன்றிணைந்து கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டன.
சாவகச்சேரி இந்துக் கல்லூரி முன்றலில் கையெழுத்துச் சேகரிக்கும் பணிகள் இடம்பெறுவதாக அறிந்த பொதுமக்கள் அங்குவந்து அக்கறையுடன் கையெ ழுத்திட்டுச் சென்றனர்.
பிரதேசத்தில் கையெழுத்துப் பணிகள் தொடருமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

(எ-9)

## இஸ்ரேலுக்கு எதிரான போக்கு

# மனித உரிமைகள் சபையிலிருந்து வெளியேறுவோம் என்கிறது அமெ.

**டெல்அவிவ், மார்ச் 27**

**இஸ்ரேலுக்கு எதிரான போக்கைக் கடைப்பிடித்தால் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து வெளியேறிவிடுவோம் என்று அமெரிக்கா மீண்டும் மிரட்டல் விடுத்தது.**

ஐ.நா. சபையில் இஸ்ரேலுக்கு எதிராக நிறைவேற்றப்படும் தீர்மானங்களுக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அங்கீகரிப்பதாக அமெரிக்கா அண்மையில் அறிவித்தது. இதற்கு எதிராக ஐ.நா. சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது அமெரிக்கா கடும் ஆட்சேபம் தெரிவித்தது.

பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் அரசு யூத குடியிருப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இந்த விவகாரம் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நேற்றுமுன்தினம் விவாதிக்கப்பட்டது. அப்போது. பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் அமைக்கும் குடியிருப்புகள் சட்டவிரோதம் என்பது உட்பட அந்த நாட்டுக்கு எதிராக 5 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதையடுத்தே ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இருந்து வெளியேறுவோம் என்ற எச்சரிக்கை அமெரிக்காவிடம் இருந்து வந்துள்ளது.



ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே, இந்த எச்சரிக்கையை விடுத்தார். "ஐ.நா. சபையில் வடகொரியா, ஈரான், சிரிய நாடுகளை விட இஸ்ரேல் மோசமாக நடத்தப்படுகிறது. சபையின் நடவடிக்கைகள் ஒரு தலைப்பட்சமாக உள்ளன. எங்கள் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. இஸ்ரேலுக்கு எதிரான போக்கு நீடித்தால் மனித உரிமைகள் சபையில் இருந்து நிரந்தரமாக வெளியேறிவிடுவோம்" என்று அவர் தெரிவித்தார். (ம)



## 20,000 பேர் திரண்டு இஸ்ரேலில் பேரணி

டெல்அவிவ். மார்ச் 26

இஸ்ரேலில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள அயல் நாட்டவர்களை வெளியேறுமாறு, இஸ்ரேலியத் தலைமை அமைச்சர் நெத்தன்யாகு தெரிவித்துள்ள நிலையில், அவரின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமார் 20 ஆயிரம் பொதுமக்கள் ஒன்றுதிரண்டு நேற்றுப் பேரணியை நடத்தினர்.

இஸ்ரேலில் யூதர்கள் பெரும்பான்மையாக உள்ளனர். அங்கு ஆபிரிக்க நாடுகளான சூடான் மற்றும் எரித்திரியாவைச் சேர்ந்த 42 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் சட்டவிரோதமாகத் தங்கியுள்ளனர். அவர்களை வெளியேற்ற இஸ்ரேல் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. "சட்டவிரோதமாக குடியேறியவர்கள் வெளியேற வேண்டும். இல்லையேல் அவர்கள் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்கப்படுவார்கள். அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வந்து குடியேறுபவர்களை தடுக்க எல்லையில் சுவர் அமைக்கப்படும்" என்றும் தெரிவித்தார். அவரது கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலின் தலைநகர் டெல் அவிவில் போராட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் நடந்தது. அதில் சுமார் 20 ஆயிரம் பேர் கலந்துகொண்டனர். (ம)

## தென்சீனக் கடலில் சீனா போர்ப் பயிற்சி

பீஜிங், மார்ச் 27

சர்ச்சைக்குரிய தென்சீனக்கடல் மற்றும் மேற்கு பசிபிக் பகுதியில் சீன வான்படை போர்ப்பயிற்சியை நடத்தி உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



தென்சீனக் கடல் பகுதியை சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இந்தப் பகுதியை பிலிப்பைன்ஸ், வியட்நாம், தைவான், புரூனே உள்ளிட்ட நாடுகளும் சொந்தம் கொண்டாடி வருகின்றன. பன்னாட்டுத் தீர்ப்பாயத்தில் சீனாவுக்குச் சொந்தமில்லை என்று தீர்ப்பாகியுள்ளது.

எனினும் சீனாவின் அத்துமீறல்கள் தொடர்ந்து வருகின்றன. இந்த நிலையில், தென்சீனக் கடல்பகுதியில் சீனா நேற்றுமுன்தினம் போர்ப் பயிற்சியை நடத்தியது என்று சொல்லப்படுகிறது. (ம)

## இந்தோனேசியாவில் நேற்று நிலநடுக்கம்

இந்தோனேசியாவின் டனிம்பார் தீவில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவு கோலில் 6.4 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது.



இந்தோனேசியாவின் டனிம்பார் தீவில் உள்ள சாம்லகி பகுதியிலிருந்து வடமேற்கே சுமார் 222 கிலோமீற்றர் தூரத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பான உடனடித் தகவல் ஏதும் வெளியாகவில்லை என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## இரகசியம் பேணாததால் 65ஆயிரம் கோடியை இழந்தது பேஸ்புக்



பேஸ்புக் நிறுவனத்தில் வாடிக்கையாளர்களின் தகவல்கள் திருடப்பட்டதையடுத்து அந்த நிறுவனம் பங்கு வர்த்தகத்தில் இந்திய மதிப்பில் சுமார் 65 ஆயிரம் கோடியை இழந்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா என்ற நிறுவனம் அமெரிக்க அதிபர் தேர்தலில் பேஸ்புக் நிறுவனத்திடமிருந்து தகவல்களைப் பெற்று மக்கள் மனதில் மாற்றத்தை உண்டாக்கி தேர்தலில் முடிவுகள்மாற பெரிதும் உதவி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதை பேஸ்புக் நிறுவுனர் மார்க் ஏற்றுக்கொண்டார். இதையடுத்தே பேஸ்புக் நிறுவனத்தின் சொத்து மதிப்பு வெகுவாகக் குறைந்தது. (ம)


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 17 . 06 . 1943 | 24 . 03 . 2018 |

**திருமதி யோகாம்பிகை துளசிகாமணி**

யாழ். நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் பொற்பதி வீதியையும், கனடாவையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகாம்பிகை துளசிகாமணி 24.03.2018 சனிக்கிழமை கனடா பிரம்டனில் சாயிபாதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான C.S. கந்தையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மருமகளும், துளசிகாமணி அவர்களின் அன்பு மனைவியும், மணிசேகரன், யோகசேகரன், செல்வசேகரன் ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயராணி, கனகமலர், மீனா ஆகியோரின் அன்பு மாமியும், சாயி ரமணா (சத்தியா), சாயி ரமணி (சாயி), சாயி ரம்யா, சாயி பிரியா, சாயி கரன், சாயி பிரேமி, சாயி சந்தோஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சிவயோகநாதன் மற்றும் இந்திராணி, சிவகுமாரன், யோகேஸ்வரி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நடனசிகாமணி மற்றும் உதுமசிகாமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.03.2018) செவ்வாய்க்கிழமை St.John's Dixie Cemetery & Crematorium 737 Dundas Street East Mississuga, ON L4Y 2B5இல் கனடா நேரப்படி பி.ப. 5.00 - பி.ப. 9.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 29.03.2018 வியாழக்கிழமை மு.ப.10.00 - 12.00 மணிவரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று பூதவுடல் ந.ப.12.00 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:

மணிசேகரன் - கனடா - 416 845 4219

யோகசேகரன் - கனடா - 416 399 0837

செல்வசேகரன் - கனடா - 416 918 4221

யோகதாஸ் - யோகேஸ்வரி - யாழ்ப்பாணம் - 077 654 4008, 021 221 2547

Galaxy Star

வெற்றி வாரம் 246 / திகதி 25.03.2018

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

10 06 32 36 53

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி

ரூ. 4,333,740/-

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

2018 ஏப்ரல் 01ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும். வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



**நாஹா மருத்துவ நிலையம்**

தீவிர செயலிழப்புடன் கூடிய பாரிசவாதம், ஆஸ்த்மா எலும்பு சார்நோய்கள், மூட்டுக்கள் இசிவு, மாதவிடாய் கோளாறு, நீரிழிவு குணமாதல்

வங்கிமுன்லேன், சாத்தாவத்தை வயிரவர் கோயிலடி (ஜெகபதி வீடு) மானிப்பாய்.

077 321 2740



**வேலையாள்கள் தேவை**

இணுவிலிலுள்ள வியாபார நிலையத்துக்கு வேலையாள்கள் ஆண், பெண் இருபாலார்களும் தேவை.

077 410 9071, 077 624 7130


# நெஞ்சம் நெகிழும் நான்காம் ஆண்டு நினைவலைகள்



## திருமதி ஜெயவதனி ஞானேந்திரன் (பபி)

*அன்னை மடியில்* 03.08.1967 | *ஆண்டவன் அரவணைப்பில்* 11.04.2014

*திதி:- 27.03.2018 (பூர்வபக்க ஏகாதசி)*


ஆண்டு நான்கு சென்றதம்மா
ஆறுதில்லை எம் மனது,
என் அன்புச் செல்வமே!
நேரில் காண்பேன் எனக்காத்திருந்தவேளை
காலன் உனைக் கொண்டுபோன
செய்திகேட்டு
நிலைகுலைந்து போனேன் அம்மா
என் அன்பு மகளே! உன் நினைவு
கனவில் பிள்ளைகளுடன்
வந்துபோகும் போது
கட்டியணைக்க மனம் ஏங்குதம்மா!

*உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!*

**அன்புக் கணவர், பிள்ளைகள், அம்மா, தம்பி, மைத்துனி, மருமக்கள் மற்றும் உறவினர்கள்.**
**கிளாலை, கொல்லங்கலட்டி.**

(JN/6238)(11,17)

# கண்ணீர் அஞ்சலி



துன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட
இறைவரித் திணைக்கள இளைப்பாறிய வரி மதிப்பீட்டாளரும்
நொத்தாரிசுமாகிய

## A.E. யோகேஸ்வரன்

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சியடைந்தோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

**நா.வேதநாயகன் குடும்பம்,**
**த.மோகன்ராஜ் குடும்பம்.**

(CS/15133)(11,17)


உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111


# மரண அறிவித்தல்



தோற்றம் 05.06.1935 | மறைவு 24.03.2018

## திருமதி இரத்தினாவதி அரியரத்தினம்

சிவன்கோயிலடி, வட்டு வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், இராசவைத்தியர் இல்லம் சிவன்கோயிலடி வட்டு மேற்கு வட்டுக்கோட்டை, முதலாம் ஒழுங்கை, கண்ணகை அம்மன் கோயிலடி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினாவதி அரியரத்தினம் 24.03.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரபத்திரர் - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அரியரத்தினத்தின் (விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, பலாலி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற புஸ்பவதி மற்றும் இராசமலர், காலஞ்சென்ற விமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பானுமதி, சேகரன், அருளானந்தன், சீவானந்தன், காலஞ்சென்ற சுந்தரானந்தன் மற்றும் நித்தியானந்தன், கிருபானந்தன், குமாரானந்தன், காலஞ்சென்ற துசியந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலகுகானந்தன், வசந்தினி, யசோதா, சுபத்திரா, கலையரசி, வசந்தப்பிரியா, பத்மராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், பாரதி, வினு, சிவதனு, சிவயனா, கௌரீசன், திருசன், தாகினி, கஜேந்திரா, நர்த்தனன், கணண், கஜேந்தினி, தட்சாயினி, கீர்த்திகா, கம்சிகா, றமணா, மதுரன், கஜானா, விபிசன், சுயீக்கா, சுபீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சொகானின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2018) புதன்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்கைத்துறை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முதலாம் ஒழுங்கை,**
**கண்ணகை அம்மன் கோயிலடி,**
**வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 225 0969**

# 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



தோற்றம் 13.10.1932 | மறைவு 27.02.2018

## திருமதி சற்குணஅலங்காரம் அந்தோனிப்பிள்ளை

கடந்த (27.02.2018) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி அமரர் திருமதி சற்குணஅலங்காரம் அந்தோனிப்பிள்ளை அவர்களின் ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (27.03.2018) செவ்வாய்க்கிழமை பி.ப. 4.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும். அத்துடன் 29.03.2018 வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் கே.கே.எஸ். வீதி, சுன்னாகம் "திசா விருந்தினர் விடுதி" யில் (பெற்றோல் நிலையம் அருகாமை) ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இடம்பெறும். இந் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது அன்னை நோயுற்றிருந்த காலங்களில் எல்லாம் உரிய சிகிச்சையளித்து கடைசிவரை உதவிய Dr. T.பேரானந்தராஜா (V.P.) அவர்களுக்கும் Dr.T.நந்தகுமார் அவர்களுக்கும் யாழ். போதனா வைத்தியசாலை விடுதி இல. 2 இல் பணியாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் எம் துயரில் கலந்து அனுதாபம் தெரிவித்த அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**திருமதி ஜெ.கிருபை அலங்காரம்,**
**திரு.திருமதி அ.பிரான்சிஸ், செல்வி அ.எலிசபெத்,**
**திரு. திருமதி சற்குணராஜா, திரு.திருமதி கிருபைராஜா,**
**திரு.திருமதி அன்ரன் கிஷோஷன் குடும்பத்தினர்**

**071 320 2965, 077 673 8183**



# மணிவிழா காணும் நாயகனை



## வாழ்த்துச் செய்தி

முல்லைத்தீவு சிறிசுப்பிரமணிய ஆரம்பப் பாடசாலையில் கடந்த 12 வருடங்களாக சிறப்பாக சேவையாற்றி 26.03.2018 இல் அகவை 60ஐ பூர்த்தி செய்து ஓய்வு பெறவிருக்கின்ற அதிபர் திருஇளையதம்பி செல்வநாயகம் அவர்களின் பணி நிறைவு தினத்தை கௌரவிக்கும் முகமாக வழங்கபட விருக்கின்ற வாழ்த்துச் செய்தி பிரசுரத்திற்கு எனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

கல்விச் செல்வம் என்பது அள்ள அள்ள குறையாது. அதே போன்று கொடுக் கக் கொடுக்க விருத்தியாவது. அந்த வகையில் ஆசிரியப் பெருந்தகைகளாக சேவையாற்றுபவர்கள் கல்விச் செல்வத்தை மாணவர்களுக்கு அள்ளி வழங்குகின்றவர்களாகவும் மாணவர்களின் கல்விப் பசியை தீர்த்து வைப்பது டன் அவர்களை உயர் நிலைக்கு கொண்டுசென்று விடுகின்ற ஏணிப் படிக் கட்டுக்களாகவும் விளங்குகின்றனர்.

அந்த வகையில் கடந்த 28வருடங்கள் கல்வி சேவையுடன் சேர்ந்து இணை பாடவிதான செயற்பாடுகளிலும் சிறப்பாக செயலாற்றி ஓய்வுபெறுகின்ற திரு இ.செல்வநாயகம் அவர்களின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடனும் அமைய வாழத்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வடமாகாணம்



## வாழ்த்துச் செய்தி

முல்லைத்தீவு மாவட்டத்தில் பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாக ஆசிரியராகவும், அதிபராகவும் மிகச் சிறப்பான பணி களை ஆற்றி ஓய்வுபெறும் அதிபர் இ.இளையதம்பி செல்வ நாயகம் அவர்களின் அதிபர் சேவைக் காலத்தில் ஆரம்பபிரிவு மாணவர்களின் கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளில் அதி களவில் அக்கறை எடுத்துச் செயற் பட்டமையினாலேயே முல்லைத்தீவு மாவட்டத்திலயே மிகச் சிறந்த ஆரம்ப பாடசாலையாக புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாலயத்தை உருவாக்கியுள்ளார்.

கடந்த யுத்த காலத்தில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட இப் பாடசாலையைப் புனரமைத்து உயர்ந்த நிலைக்குக் கொண்டுவருவதற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி இன்று சிறந்த பௌதிக வளங்களைக் கொண்ட ஒரு பாடசாலையாக உருவாக்கியுள்ளதுடன் பாட சாலை கட்டமைப்பைச் சிறந்த கல்வி வலையுடன் திகழ வைத்துள்ளார். அவரது அர்பணிப்பு மிக்க சிறந்த சேவைக்கான பிரதீபா விருதினை கல்வி அமைச்சு வழங்கிக் கௌரவித்திருக்கின்றது.

வன்னியில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் இருந்து அவர் கல்விச் சேவைக்கு ஆற்றிவரும் பணியை கடந்த காலங்களில் பணியாற்றிய கல்வி அதிகாரி களே பாராட்டும் வகையில் செயல்பட்டு வந்த திரு இ.செல்வநாயகம் அவர் களின் பாடசாலையில் ஓய்வில் இருந்து ஒதுங்கியிருக்காது முல்லைத்தீவு மாவட்ட மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்குத் தனது பணிகளைத் தொடர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன் தனது அரிய சேவையினூடாக ஓய்வு பெற்றுச் செல்லும் திரு இ.செல்வநாயகம் அவர்கள் தனது மனைவி, பிள்ளைகளுடன் நலமாக வாழ வாழ்த்துகிறேன்

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வடமாகாணம்



## சுப்பிரமணியின் தாரகைச் செல்வம்

குவிராயர் செல்வநாயகம் மங்காத தாரகை ஒளியாக பன்னிரண்டு கால சுப்பிரமணியின் சேவையின் பின்னர் ஓய்வெடுக்கச் செல்வது புதுக் குடியிருப்பில் எல்லோராலும் பேசப்படும் செய்தி இவ்வாறு நான் வாழும் சுற்றுச் சூழலைச்சேர்ந்த எல்லோராலும் மகத்தாக போற்றப்பட்டு நிரம்பி வழியும் சேவை செய்து இளைப்பபறுபவர்கள் ஒருசிலரே, அவர்களுள் ஒருவர் செல்வநாயகம்

தனது நாமத்திற்கேற்ப செல்வமாக செல்லமாகத் தனது கொஞ்சும் தமிழில் இன்பக் கவிபாடி தன்னகத்தே வரும் சின்னவர்களை கனிவோடு அரவணைத்து வடமாகாணமே மணம் விசும்படியான தொடக்கல்வியை ஊட்ட தனது முழுமையான ஆற்றலையும் உடலையும் கசக்கி பிழிந்து தன்னாலான சக்தி அனைத்தையும் கொடுத்து கல்விக்கு கலங்கரை விளக் காக தன்னை அர்பணித்த அதிபர் பெருமகன் செல்வநாயகமாகும் நிறைவான சேவையே செல்வநாயகத்தின் மகுட கீதமாகும் இவ்வாறான அதிபர்கள் உரு வாகுவதற்கு 'அதிபர் செல்வநாயகத்தின் தொழிற்பாடு முன்னுதாரணமாக இருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை நிறைவான சேவையுடன் இளைப் பாறும் போது மிகுந்த மன நிறைவு சகலவும் பெற்று நீடுழி காலம் வாழ்ந்து தொடர்ந்து கல்விபணியற்ற எனது வாழ்த்துக்கள்

த.குருகுலராசா
வடக்குமாகாண சபை உறுப்பினர்



## கல்விச்சேவையில் தன்னிகரில்லா அதிபர்

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் அதிபராக பணியாற்றி 26.03.2018ம் திகதி ஓய்வுபெறும் உயர்திரு திரு இளையதம்பி செல்வநாயகம் அவர்களது சேவையைப் பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். நான் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளராக 01.03.2005ம் திகதி பதவியேற்றேன் முல்லைத்தீவு ஆரம்ப பாடசாலைகளில் அதிகளவு மாணவர்களை உடையதும் ஆற்றல் மிக்க அதிக பெற்றோரை உடையதுமான சிறிசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு பன்முக ஆளுமை யுடைய அதிபர் ஒருவர் தேவைப்படும் போது எனது கண்ணில் தெரிந்தவர் திரு இ.செல்வநாயகம் ஆவார். அவரை நான் 27.02.2006ல் அதிபராக நியமித்தேன். எனது தெரிவு இப்பாடசாலையின் ஒரு விடிவெள்ளியாக இன்றுவரை பர்ணமிப்பதையிட்டே நான் மட்டற்ற மகிழ்ச்சியடைய காரணமாகும்.

பாடசாலை நாள்களாயினும் சரி, விடுமுறை நாள்களாயினும் சரி காலை 7.00 மணிக்கு பின் இரவு 8.30வரை அதிபரை பாடசாலையிலேயே சந்திக்கலாம். பாடசாலையின் வழமையான கற்றல் நேரம் முடிந்த பின் இரவு 8.30மணி வரை விசேட வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். ஆசிரியர்களை வழிநடத்தி பிள்ளைகளை அழைத்துச் செல்ல வந்திருக்கும் பெற்றோருடன் கலந்துரையாடிக் கொண்டிருப்பார். இவரது பதவிக்காலம் 2006 தொடக்கம் 2009 வரை புதுக்குடியிருப்பு வலயம் யுத்த வலயமாக எந்நேரமும் விமானத் தாக்குதல்கள் நடந்த ஒரு பிரதேசத்திலே அதிபர் பதவி வகித்ததையும் பிள்ளைகளையும் ஆசிரியர்களையும் பாதுகாத்தமையையும் இந்நேர அதிபர்கள் சிந்திக்க வேண்டும்.

யுத்தம் முடிந்து பாடசாலை சின்னாபின்னமாக சேதமடைந்த பின் பாடசாலையை புனரமைத்து யுத்தத்தால் அழிவடைந்த ஒரு பாடசாலையா இது என இன்று வியக்க வைக்கும் நிலைக்கு உயர்த்தியவர் முல்லைத் தீவு வலயத்தில் தரம் 5மாணவர்களது புலமைப்பரிசில் பரீட்சை பெறு பேறுகளில் அதிகூடிய மாணவர்கள் சித்தியடைய காரணமாணவர். 2012 தொடக்கம் வருடாந்தம் 7,13,28, மாணவரென 2017ல் 51மாணவர்கள் சித்தி யெய்த காரணமானவர். இத்தகைய சித்தி இப் பாடசாலையில் அதிகளவு மாணவர் கல்விகற்க காரணமானது.

அதிபரின் வாழ்க்கைக் காலம் இப்பாடசாலையை சுற்றிச் சுற்றிவந்தமை யால் விளையாட்டுத் துறையில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தினார். சகல மாண வர்களையும் ஏதோ ஒரு விளையாட்டில் ஈடுபடுத்தியமை பெற்றோரின் அள வற்ற மகிழ்ச்சிக்கு காரணமானது. வருடந்தோறும் பரிசளிப்புவிழா, கலை விழா, மாவட்ட மட்ட போட்டிகள் அனைத்திலும் இப்பாடசாலை தனியிடம் பெற அதிபரின் பன்முக ஆளுமைச் செயற்பாடு, ஆசிரியர்களை தனது குடும்ப உறுப்பினர்களாக நேசித்தமை போன்ற பல காரணங்க ளாகும். முல்லைத்தீவு மாவட்டத்தில் இக்கட்டான யுத்த காலத்தில் பணியாற்றி தனது மாணவர்களையும் ஆசிரியர்களையும் பாதுகாத்து கல்வித்துறையில் வியத்தகு சாதனைகள் படைத்த அதிபர் உயர் திரு இளையதம்பி செல்வ நாயகம் அவர்களது ஓய்வுகாலம் சிறப்புற அமைந்திட உள்ளத்தால் வாழ்த்துகிறேன்

ப.அரியரத்தினம்
முந்நாள் வலயக்கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாண சபை உறுப்பினர்



## வாழ்த்துச் செய்தி

கற்க கசடற கற்றவை கற்ற பின் நிற்க அதற்கு தக

என்ற பொய்யா மொழிப்புலவரின் திருவாக்குக்கு ஏற்ப தான் கற்ற கல்வியை தான் கற்ற கல்வியின் நோக்குக்கு ஏற்ப அதற்கு செயல் வடிவம் கொடுத்த உத்தம கல்விமான் செல்வநாயகம் அவர்கள் என்றால் மிகையாகாது. படிப்படியாக தனது ஆசிரியர் சேவையை மேற்கொண்டு அதன் அனுபவ அடிப்படையில் தனது பிறந்த மண்ணிலேயே தனது அதிபர் பதவியை வகித்து சொந்த மண்ணிற்கே தனது பணியை சிறப்பாக நடத்தியவர் செல்வா அவர்கள் செல்வா என்ற மூன்று எழுத்துக்கும் கல்வி என்ற மூன்று எழுத்துக்கும் பாலமாக திகழ்ந்தவர். கலை, இலக்கியம், சமயம், சமூகம், அரசியல் என்ற அடிப்படையில் தனது நாவன்மையால் திறன்பட செயல்பட்டு தனது சிறப்பையும் உயர்வையும் நிலை நாட்டிய கல்விமான். பாட விதானத்தில் மட்டுமன்றி இணைபாட விதானத்திலும் மாணவர்கள் மூலமாக தனது சிறப்பை நிலை வெளிப்படுத்தினார். புலமை பரிசில் பரீட்சையில் ஏணிபோன்று படிப்படியாக ஏறுவரிசையில் படிப்படியாக மாணவர்களை செயல்படுத்தி 2017இல் அரைசதத்துக்கு மேல் மாணவர்களை சித்தியடை யச் செய்து மாவட்ட முதன்மை நிலை பெறச் செய்தமை முக்கிய அம்சமாகும் சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபா விருதினை பெற்ற செல்வா அவர்கள் வன்னி வள நாட்டின் வளமான சூழலில் தொடர்ந்து பணியாற்றி பிறந்த மண்ணிற்கு வளம் சேர்க்க இறையருள் புரிய வேண்டுமென்பதோடு எனது நல் ஆசியையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

தி.சடாசசர்மா
ஓய்வு நிலை ஆசிரியர்
மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி



## வாழ்த்துச் செய்தி

"தோன்றிற் புகழோடு தோன்றுக, அஃதிலார் தோன்றலின தோன்றாமை நன்று" என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கிணங்க கல்விச் சேவை யில் முத்திரை பதித்த தன்னலங்கருதாத சேவையாளனே அதிபர் இளைய தம்பி செல்வநாயகம் அவர்கள்.

எளிமை, அர்பணிப்பு, முகாமைத்துவத்திறன், நிர்வாக ஆற்றல், சிறந்த ஆளுமை அணிகலன்களாகக் கொண்ட பள்ளி முதல்வன். இன்றைய இளந்தளிரிகள் நல்ல ஆளுமைமிக்க பெருவிருட்சமாக விளங்க அயராது உழைக்கும் உத்தமசீலன். எதிர்கால கல்வி மாண்களை உருவாக்கி சமு தாயத்தில் புதிய ஒளி வீச வைப்பதில் ஆரம்பபாடசாலையின் பணிமகத் தானது. இங்கு இடப்படும் உறுதியான அத்திவாரமே உயர்கல்வி சிறப்புற அமைய எதுவாகிறன்து. இதற்காக தூர நோக்குடன் சிந்தித்து செயல்படும் நற்சிந்தனையாளர்.

யுத்தத்தினால் பாதிப்படைந்த பிள்ளைகளை சிறந்த ஆளுமையுடன் வளர வும், ஆற்றலுடன் படிக்கவும் உழைத்தவர் / உழைப்பவர் விளையாட்டுப் போட்டியில் அனைத்து மாணவரையும் பங்கு பற்ற வைத்தது மட்டுமன்றி பரிசளிப்பு விழாவிலும், அனைத்து மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி கௌரவித்த பெருந்தகையாளன். தன்னைப்போலவே ஆசிரிய சமூகத்தை யும் அர்பணிப்புடன் செயற்பட ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர் அவர்களை பாராட்டுவதில் பெருமையடைகின்றேன்.

முயற்சி திருவினையாக்கும் என்பதற்கிணங்க 2017ம் வருடம் புலமைப் பரிசில் பரீட்சையில் 51மாணவர்களை சித்தியடைய வைத்து பாட சாலையை மாவட்டத்தில் முதலிடம் பெறுவதற்கு காரணமாக இருந்தவர். கல்விச் செயற்பாட்டில் மட்டுமன்றி பௌதீக ஆளணி வளங்களிலும் கவனம் செலுத்தத் தவறவில்லை. பாதிப்படைந்த பாடசாலையை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் புனரமைத்து மாணவச்செல்வங் களின் கல்விக்கான சூழலை உருவாக்கியதுடன் திறன் வகுப்பறைச் செயல் பாட்டையும் உருவாக்கியவர் / அறிமுகப்படுத்தியவர். இத்தகைய உன்னத மான சேவையால் எல்லோர் மனங்களிலும் நன்மதிப்பைப் பெற்றுள்ளார்.

இவ்வாறு மாணவச்செல்வங்களின் கல்வி மேம்பாட்டுக்கு அளப்பரிய சேவையாற்றிய அதிபர் அவர்கள் தன் ஓய்வுகாலத்தில் பல்லாண்டுகாலம் மகிழ்வாக வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்

ஆ.சி.துரைராசா ரவிகரன்
வடமாகாணசபை உறுப்பினர்
முல்லைத்தீவு



## வாழத்தி அனுப்புவோம்

முல்லையில் முன்னணி பாடசாலையா, முதல்நிலை பாடசாலையாக்க கண்ட கனவை நனவாக்கி மகிழ்வுடனேயே ஓய்வுநிலைக்கு செல்லும் திரு இ.செல்வநாயகம் அதிபரை ஓராயிரம் கோடி நன்றிப்பூக்களை தூவி பாடசாலைச்சமூகம் பிரியாவிடை வழங்கும் இத்தருணத்தில் பாடசாலை யின் பழைய மாணவனாக பரவசம் அடைகிறேன். வளம் பல தேடிக் கொடுத்து வானுயர வளரச் செய்து வரலாற்றில் பதிவிட்ட அதிபர் அவர்கள் கோடி தசாப்தம் தாண்டியும் கோனாக திகழ்ந்தவர் எம் புதுவை மண்ணில். பகலிரவு பாராது ஓய்வின்றி உறக்கமின்றி உழைத்ததன் பயனை எமது சமூகம் இன்று அறுவடை செய்திருக்கின்றது. தொடரும் அறுவடைகளுக்கு அச்சாணியாய், ஓய்விலும் உழைப்பார் என்பது எம்மவர் அனைவரதும் நம்பிக்கை.

அறிவின்மை எனும் நோய் தீர்க்க ஆசிரியராக, அதிபராக அவதாரம் எடுத்து அரும்பணிகள் செய்து அனைவர் மனங்களிலும் அச்சாக பதிந்திருக்கும் அதிபரின் சேவைகளை புதுக்குடியிருப்பு மண் பெருமை யுடன் நினைக்கின்றது. கல்விப் பணியில் தொழில் வழிப்படுத்துனராக மேய்பனாக ஆசிரியர்களை கடமை, சேவையின்பால் பக்குவப்படுத்தி முகாமைத்துவப்படுத்தி நிறைவான பணி செய்தவராக அதிபர் அவர்களை காண்கின்றோம்.

யுத்த அரக்கனின் கோரப்பிடிக்குள் எம் மண்ணின் கல்விப் பெருங்கடல் சிக்குண்ட வேளையிலும் தலைமைத்துவ துடுப்பை சரியான திசைநோக்கி இயக்கி படகுப் பயணிகளான ஆயிரக்கணக்கான மாணவர்களை கரை சேர்த்துவிட்டே இன்று அதழபர் அவர்கள் கரையேறுகின்றார். தமிழ்மொழிப் பற்று, சிறந்த பேச்சாற்றல், நிர்வாகத் திறமை, சிறந்த ஆளுமை என பல் புலமை கொண்ட ஆசான் மாணவ குழந்தைகளின் பிஞ்சு மனங்களிலும் தாயாக, தந்தையாக, குருவாக தெய்வமாக பார்க்கப்படுகின்றார். சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையின் சாதனைச் சிகரத்தை வாழ்த்தி அனுப்புவோம்

எஸ்.வினோ நோகராதலிங்கம்
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
(பழைய மாணவன்)



## வாழ்த்துச் செய்தி

அதிபராக கடமையாற்றி 60வது அகவையை பூர்த்தி செய்து அரச சேவையிலிருந்து ஓய்வு பெறும் திரு இ.இளையதம்பி செல்வநாயகம் அவர்களின் கல்விச் சேவையை வாழ்த்தி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்

1990ஆம் ஆண்டில் ஆசிரிய பணியை ஆரம்பித்து 2001ஆம் ஆண்டில் அதிப ராக உயர்வுபெற்று 2006இல் மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கடமை யேற்று இன்று தனது சேவையை பூர்த்தி செய்து ஓய்வில் செல்கின்றார். இவர் இப் பாடசாலையை புனரமைத்ததுடன், மாணவர்களை கல்வி, கலை விளையாட்டு என பல துறைகளிலும் மிளிரச் செய்து மாகாணம் தேசிய மட்டங்களில் பங்குபற்ற பெருமைக்குரியவர். 2015இல் சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபா விருது வென்று தனது ஆத்மா திருப்தியை பெற்றுள்ளார். இதுவரை காலமாக மேற்கொண்ட அரச சேவையைப் பாராட்டுவதோடு இவர் தனது ஓய்வுக் காலத்தில் பல சமூக, சமய பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

இ.இரவீந்திரன்
செயலாளர்-
கல்விபண்பாட்டலுவர்கள் விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு -
வடமாகாணம்

**பிறந்த திகதி : 27.03.1958**

**சேவை விவரம்**

**15.03.1990** மு/கருவேலங்கண்டல் அ.த.க. பாடசாலை (ஆசிரியர்)

**01.01.1991-31.12.1995** மு/முத்தையன்கட்டு வலது கரை அ.த.க. பாடசாலை (ஆசிரியர்)

**01.01.1996-31.12.2000** மு/புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம்(ஆசிரியர்)

**01.01.2001-26.02.2006** மு/வேணாவில் ஸ்ரீ முருகானந்த வித்தியாலயம் (அதிபர்)

**27.02.2006 -இன்று வரை** மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை (அதிபர்)

Best Wishes Best Wishes

## திரு. இளையதம்பி

(அதி

மு/சிறிசுப்பிரமணிய

புதுக்குடிய



## வாழ்த்துச் செய்தி

மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை யாற்றி ஓய்வு பெறும் திரு இ.இளையதம்பி செல்வநாயகம் அவர்களது சேவையினைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1990ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராக, அதிபராக இவர் ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியவை இவர் 2006ஆம் ஆண்டிலிருந்து இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இப்பாட சாலையினை புனரமைப்பதோடு தேவையான வளங்களையும் பெற்றுக்கொள் வதற்கும் இவர் பெரும் பங்காற்றியுள்ளார். அத்துடன் இப்பாடசாலை மாணவர்கள் கல்வியிலும், இணைபாடவிதான செயற்பாடு களிலிலும் சிறந்து விளங்க வழிகாட்டியுள்ளர் புலமைப்பரிசில் பரீட்சையில் இப்பாடசாலையில் தோற்றி அதிகளவில் சித்தியடைந்து வருகின்றனர். 2017ஆம் ஆண்டில் 51 மாணவர்கள் சித்தியடைந்து மாவட்டத்தில் முதன்மை நிலையினைப் பெற்றுக்கொண்டமை பாராட்டுக்குரியதாகும் இவர் தன்னுடைய சேவைக் காலத்தில் ஆற்றிய பணிகளுக்கு நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிப் பதோடு ஓய்வுக் காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்

செ.உதயகுமார்
மாகாணக் கல்வி பணிப்பாளர் -
வடமாகாணம்



## சேவை நலன் பாராட்டல்

முல்லைத்தீவு சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் கடந்த 12 வருடங்களாக அதிபராக பெரும்பணியாற்றி ஓய்வு பெறுகின்ற திருவாளர் இளையதம்பி செல்வநாயகம் அவர்களின் சேவையை பாராட்டுவதில் பேருவகை அடைகின்றேன்.

திருவாளர் இ.செல்வநாயகம் அவர்கள் மு/முத்தையன்கட்டு வலதுகரை அ.த.கபாடசாலை, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், என்பவற்றில் ஆசிரியராகவும் வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றி 27.02.2006 முதல் தான் ஓய்வு பெறும் வரை சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி அயராது பணிசெய்தவர்.

இவர் முதல்வராக பணியாற்றிய காலப்பகுதியில் பாடசாலை பல் சாதனைகளை தனதாக்கி கொண்டது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட இப் பாடசாலையை முழுமையாக புனரமைத்தலில் இவருடைய வகிபாவம் மகத்தானது. இவருடைய பெரும் ஏற்பாட்டில் விளையாட்டுப்போட்டி, பரிசளிப்புவிழா, கலைவிழா என்பன சிறப்புற நடைபெற்று பலரின் பாராட்டுக்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இணைபாடவிதான செயற் பாடுகளில் மாணவர்களை தேசியம் வரையும் பங்குபற்றச்செய்தார் பிள்ளை நேயப்பாடசாலையின் கவின் நிலையை உருவாக்கியதோடு முக்கியத்துவம் மிக்க திறன் வகுப்பறை செயற்பாடுகளை அறிமுகம் செய்தமை இவரின் மேன்மையான பணியை எடுத்துக்காட்டுகிறது.

தரம் 5புலமை பரீட்சையில் இவருடைய நெறிப்படுத்தலில் பாடசாலை தொடர் சாதனைகளைப் படைத்தது 2017ல் 51மாணவர்கள் சித்தி பெற்றதோடு மாவட்டத்தில் முதன் நிலையடைந்து. பாடசாலை பெருமையடைந்து கொண்டது. இத்தகைய சாதனைகளை நிகழ்த்திய இ.செல்வநாயகம் அவர்களுக்கு சிறந்த அதிபருக்கான பிரதீபா விருது அரசினால் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. எனவே தான் அதிபராக பணியாற்றிய 12வருடங்களில் பாடசாலைக்காகவே அர்பணித்து பாடசாலையின் அத்தனை வெற்றிகளுக்காகவும் உழைத்து ஓய்வு நிலை அடையும் திருவாளர் இ.செல்வநாயகம் அவர்களின் சேவையை பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

"செயற்கரிய செய்வர் பெரியார்"

திருமதி றூ.கேதீஸ்வரன்
மாவட்ட செயலாளர்
முல்லைத்தீவு



## வாழ்த்துச் செய்தி

கல்வியே கண்ணெனப் போற்றும் மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையின் அதிபராக நீண்ட காலமாக சேவை யாற்றிய பெருமைக்குரிய திரு இளைய தம்பி செல்வநாயகம் ஓய்வு பெறும் நிலையில் மணி விழா வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன் தான் கல்வி பயின்ற மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் 12 வருடம் அதிபராக சேவையை வழங்கி ஓய்வைப் பெறுகின்றார் பாடசாலையை மாவட்டத்தில் முதல் நிலைக்கு உயர்த்தியதுடன் பிரதேசம் சார்ந்த சமூக சேவைகளையும்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்





## ...பி செல்வநாயகம்
## (...திபர்)
## ...ரிய வித்தியாசாலை
## ...டியிருப்பு.

கலை களையும் பாரம்பரிய கலைகளை ஊக்குவிப்பவ ராகவும் இருந்துள்ளார். இவரது அதிபர் சேவையை கௌரவித்து சிறந்த அதிபருக்கான விருதினை யும் பெற்றுள்ளார். எமது பிரதேச செயலகத்தி னால் முன்னெடுக்கப்பட்ட கலை விழாக்களிலும் பாரம்பரிய கலைகளை வளர்ப்பதிலும் நூலாக்கச் செயற்குழுவிலும் மிகுந்த பொறுப்புடன் சேவை யாற்றியுள்ளார் குறிப்பாக எம்மால் வெளியிடப்பட்ட புதுவையாளர் மலர்க ளில் 2014,2015,2016ம் ஆண்டு களில் இணைமலராசிரியராக தனது சேவையை வழங்கியுள்ளதுடன் புதுக் குடியிருப்பு பிரதேச கீதத்தையும் இயற்றியுள்ளார். இவ்வாறான சேவைகளை வழங்கிய மணிவிழா நாயகனை பாராட்டுவதுடன் நல்லதோர் சமூகத்தைத் தோற்றுவிப்பதற்கும் சிறந்த வழி காட்டியாக திகழ வேண்டும் என்றும் எல்லா நலனும் பெற்று பல்லாண்டு காலம் வாழவும் எனது உளம் கனிந்த நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்

திரு ம.பிரதீபன்
பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம் - புதுக்குடியிருப்பு



### வாழ்த்துசெய்தி

அகவை அறுபதில் ஓய்வு பெறும் முல்லைத்தீவு வலய சிறிசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் திரு இளையதம்பி செல்வநாயகம் அவர்களின் அர்பணிப்பு மிக்க சேவையினை பாராட்டி வாழ்த்துவதில் மிக்க மகிழ்வடை கின்றேன்.

2006.02.27ஆம் திகதி இப் பாடசாலையில் அதிபராக பதவி ஏற்று தனது அயராத முயற்சியால் பொருத்தமான பௌதீக வளங்களையும் ஆளணி வளங்களையும் அரச. அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து கோரிப்பெற்று சிறந்த பிள்ளை நேயக் கவின் நிலை உடைய பாடசாலையை உருவாக்கி யமையும், மிகவும் சிறந்த நெறிப்படுத்தலுடன் விளையாட்டுப்போட்டி, பரிசளிப்பு விழா, கலைவிழா நடாத்தி பெருமை கொள்கின்றமையும், இணைபாடவிதான செயற்பாடுகளில் மாகாண, தேசிய மட்டம் வரை மாணவர்கள் பங்குபற்ற வழிப்படுத்துகின்றமையும், தரம் 5 புல்மைப்பரிசில் பரீட்சையில் தொடர்ச்சியாக சித்தி வீதத்தினை அதிகரிக்கும் வகையில் ஆசிரியர்களை ஊக்குவித்து நெறிப்படுத்தியதுடன், 2017ஆம் ஆண்டு 90.24% சித்தியைப் பெற்றுள்ளமையும் மிகவும் பாராட்ட வேண்டியதுடன், எமது வலயத்திற்கு முன்னுதாரணமான செயற்பாடுகளாக அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 2015ஆம் ஆண்டு சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபா விருது பெற்றமையும் பாராட்டத்தக்க விடயமாகும்.

தெளிவான சிந்தனையும், நேர்த்தியான அமுலாக்கத்திறனும் இவரது வெற்றிக்கு வலுச்சேர்த்தது பாடசாலை சமூகத்தினர் மத்தியில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளார்.

பெருமைக்குரிய சேவைகளை ஆற்றிய அதிபர் அவர்களின் எதிர்காலம் வளமும், நலனும், மகிழ்வும் நிறைந்ததாக நிலைக்க இறைவனை வேண்டி மனமார்ந்த வாழ்த்துக்களை நிறைவு செய்கின்றேன்

உ.புவனராசா
வலயக் கல்விப் பணிப்பாளர்
முல்லைத்தீவு



### அகமகிழ வாழ்த்துகின்றேன்

மு/புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணியாசாலையின் அதிபராக கடமையாற்றி மணிவிழா காணும் இளையதம்பி செல்வ நாயகம் அவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச விளைநில பூமியின் தனிச்சொத்து. சிறந்த நிருவாகத்திறனும் விஞ்சிய செயற்றிறனும் எல்லோரையும் வசிகரீக்கும் இயல்பும் நேரிய உள்ளமும் தூரநோக்குச் சிந்தனையும் நிரம்பிய கலைஞானி தமிழ்ப் பாவேந்தர் முத்தமிழ் அறிஞர். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் அவர்களின் இணைபாடவிதான செயற்பாட்டின் மேம்பாட்டிற்காகவும் கண்துஞ்சாது இரவுபகல் பாராது பாடுபட்ட மாமனிதன் விஞ்சிய போர்ச் சூழலில் அலறித்துடித்த பள்ளிக்குஞ்சுகளை வாரி அணைத்தவர். சிதறிக் கிடந்த பள்ளியை வான் முகடு காண பெருக்கியவர். எஞ்சிய பள்ளிக்கு மீண்டும் உயிர் கொடுத்து தூக்கியவர். சமூகத்தையும் ஆசிரிய குழாத்தை யும் அரவணைத்து ஐந்தாந்தர புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகளவான மாணவர்களை தேற வைத்த மணி விழா நாயகன் பலகலையும் பெற்று பல்லாண்டு காலம் உடலும் உள்ளமும் வீரியத்துடன் நலம் பெற அக மகிழ்ந்து வாழ்த்துகின்றேன்

வைத்திய கலாநிதி Dr ப.தயானந்தரூபன்
வைத்திய அத்தியட்சகர்
ஆதார வைத்தியசாலை - புதுக்குடியிருப்பு



### வாழ்த்துச் செய்தி

"நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாய் இருக்க முடியாது"

கல்விப் பணியில் ஓய்வு காணும் கல்வியாளன், விழா நாயகன், மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் திருவாளர் இளைய தம்பி செல்வநாயகம் அவர்கள் அறிவுலகிற்கு ஆற்றிய நற்பணி களை நினைத்து வீழா நாயகனை பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

அறிவுலகின் ஆழம் உணர்ந்து கல்விப் பணியில் தன்னை இணைத்து இன்று 12 வருடங்களை அதிபர் பணியில் நிறைவு செய்துள்ளார். கல்விப்பணியாள னும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பாடசாலைகளில் ஆசிரியராக கல்விப் பணியை தன் பணியாக்கி பலரும் நல்வறிவு பெற்றிட உழைத்தவர் இவர் இன்னும் பலரை எதிர்கால கல்வியாளர்களாக கல்வியில் சிறந்த நிபுணத் துவம் உடையவர்களாக, உருவாக்குவது உண்மையில் காலததின் தேவைப் பாடாகும்.

அறியாமையில் இவ்வுலகம் மூழ்கிடாது இவர் போன்றவர்களது ஆழ்ந்த அனு பவமும் அறிவுத்திறனும் புதிய ஆளுமையுள்ள கல்விமான்களை உரு வாக்கும் எனபதில் ஐயமில்லை. இன்னும் இன்னும் இவர் போன்ற உயர்ந்த கல்விமான்கள் சேவை மனப்பாங்கு உள்ளவர்களும் கல்வியிலும் கல்வி சாரா விடயங்களிலும் ஆளுமையும் தலமைத்துவமும் உள்ள நல்லவர்கள் உருவாக இறையாசீர் நல்கி வாழ்த்தி நிற்கின்றேன்

கிறிஸ்துவில் அன்பில்

அருட்பணி செ.சுதர்சன்
பங்குத் தந்தை - புதுக்குடியிருப்பு



### வாழ்த்துச் செய்தி

மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் திரு இளையதம்பி செல்வநாயகம் அவர்களது பணி நிறைவை பாராட்டுவதில் ஓய்வு நிலை வலயக்கல்விப் பணிப்பாளராகிய நான் மன மகிழ்வடைகின்றேன்.

பெரும் இடர்களுக்கு மத்தியிலும் அறிவுத்திறன் அர்ப்பணிப்புடன் தான் சேவையாற்றிய பாடசாலைகளின் சகல வளர்ச்சிக்கும் வளங்களை பெற்றுக் கொள்வதிலும் அதைப் பயன்படுத்தி பெரும் கல்வி வளர்ச்சியை ஏற்படுத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே. ஆற்றல் மிகு அதிபராய் இயல், அசை, நாடக, முத்தமிழ் மன்னராய் இணைபாடவிதனச் செயற்பாட்டின் இலட்சிய புருஷனாய் ஆரம்பக்கல்வி மாணவர்களின் புலமையின் வித்தகனாய் பிரதீபா பிரபா விருது பெற்ற சிறந்த அதிபராய் அவரது சாதனைகள் எண்ணிலடங்கா.

அவருடைய ஓய்வுக்காலம் எல்லாம் சிறப்பாக அமையவும் அவருடைய பணி மேலும் சிறக்கவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.


திருமதி உ.முனீஸ்வரன்
ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்



### ஓய்வு வாழ்த்துரை

ஆசிரியர் பணி அறப்பணி என்பார் அறம் செழிக்க அனைத்தும் செழிக்கும் வரம் பெற்று வளம் காணலாம் நெஞ்சில் உரம் பெற்று உறுதியும் காணலாம் நீண்டதொரு பயணம் செய்து நெடுநாள் கடந்தின்று வேண்டதா எண்ணங் களை எட்டி புறம் வைத்து தூண்டா மணிவிளக்காய் தூய பணி முடித்து விட்டால் அஃதென்ன பணி ஓய்வா அல்லது பணி நிறைவா? பணி ஓய்வென்பது பதமான சொல்லாகும் பணி நிறைவென்பது இதமான செல்லாகும் மானிட வாழ்விற்கு நீண்ட ஓய்வேது தினம் உண்பதில் ஓய்வில்லை உடை உடுப்பதில் ஓய் வில்லை தினம் ஐம்புலன்களுக்கும் ஓய்வில்லை பின்னர் எதற்குத்தான் ஓய்வென்போம்? கட்டுண்ட நிலைக்கு மட்டுமே ஓய்வெனலாம் சற்றே விளங்கினால் சாலப் பொருந்தும் அரசுப் பணியில் ஆயிரம் விதிகள் அன்றாடப் பணிகளில் தடையாய் நிற்கும் இன்றோ நீவீர் விடுதலை பெற்றீர் இனி விதிகள் உம்மை கட்டுப்படுத்தா விரும்பினாலும் விண்ணிலும் பாயலாம் துரும்பாய் நினைத்தால் தூக்கி எறியலாம் ஒருகணம் நினைத்தால் பணி ஓய்வில்லை பணி நிறைவே எனலாம் பணி நிறைவை செய்தோர் பட்டியலில் இடம் கண்டீர் முப்பதுக்கும் மேலான ஆண்டுகள் பணி செய்தீர் தொட்டவை துலங்க தொண்டு செய்தீர் தொண்டுள்ளம் ஓங்க வளம் கண்டீர் ஆயிரமாயிரம் மாணவ மணிகளுக்கு ஏணியாய் நின்று ஏற்றம் தந்தீர் அறியாமை நீக்கும் அருந்தொண்டு புரிந்தீர் அன்னைக்கு மேலான அரவணைப்பு தந்தீர் என்றெக்கைகும் நும் புகழ் நிலைத்தொங்கும் நன் மணிகளை உருவாக்கி ஏற்றம் பல கண்டீர் நல்லா சிரியர் விருது பெற்றார் ஒருவர் நல் ஆசான் நலம் வளம் பெற இறை ஆசியோடு என் வாழ்த்தும் கூறுவேன்

வைத்திய காலாநிதி
திருமதி ச. சூரிகா
பாடசாலை அபிவிருத்திக்குழு ஆலேசகர்



### மணிவிழாக்கானும் வரலாற்று நாயகன்

மனித மாண்பு பேணி மகத்தான கல்விப்பணியாற்றி பெறும் வரலாற்று நாயகன் செல்வநாயகம் அதிபரை வாழ்த்துவதில் பெருமையடை கின்றேன் புதுக்குடியிருப்பில் செம்பாட்டுக் குறிச்சியில் பரியாரியார் இளைய தம்பி ,கமலியார் தம்பதிகளின் இளையபுத்திரன் அதிபர் செல்வநாயகம் எனது அயலில் பிறந்து வளர்ந்து வளமாகியவர் அன்றிலிருந்து இன்றுவரை குடும்ப உறவாக இருந்துவருகிறோம். ஆரம்ப கல்வியை சிறிசுப்பிரமணிய வித்தியா சாலையிலும் உயர் கல்வியை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியிலும் கற்று ஆசிரிய தொழிலில் இணைந்து கொண்டார். பாடசாலை பருவம் அதிபரைப் பார்போற்ற வாழ்த்தியது தொழில் இருந்து கொண்டே பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவும் பின் கல்விமாணிப் பட்டத்தையும் நிறைவு செய்தவர். இவ்விரண்டு கற்கை நெறிகள் இரண்டையும் என்னிடம் பயின்றவர். எனது பெருமைக்கும் நன்மதிப்பிப்புக்குமுரிய மாணவனாக திகழ்ந்தவர்.

தமிழில் அபார அறிவு ஞானமும் சிறந்த சமூக உறவும் சமூகத்தை முன்னின்று வழிநடத்தும் ஆற்றலும் சமூகம் சார்ந்த பங்களிப்பும் அதிபர் அவர்களை முதிர்ச்சி பெற்ற நிறைந்த மனிதானாக்கியது. பாடசாலைகளில் பூரணத்துவம் கொண்ட ஆசிரியராகவும் எடுத்துச் செல்லக்கூடிய முதல் நிலை முகாமையாளராகவும் விளங்கியவர். இதன் நிமித்தம் கல்விப் புலத்தின் நன் மதிப்பை எப்பவும் பெற்று வந்தவர். குறிப்பாக சிறிசுப்பிர மணிய வித்தியாசாலையில் இவரது காலம் ஒரு பொற்காலமாக மறுமலர்ச்சி கொண்ட காலமாக விளங்கியது. சிறந்த நிர்வாகம் அபிவிருத்திசார் நவீன முகாமை, ஆசிரிய மாணவர்களை வழிநடத்தல் பெறுபேற்றை மீளாய்வு செய்தல் மாற்று நடவடிக்கை எடுத்து ஆவணங்களை அறிக்கையிடல் பாடசாலையின் நிகழ்ச்சி நிரல்களை முறையாக நிறைவேற்றல் என்பன அதிபரின் அபார திறமைகளாக விளங்கியது இவற்றால் தேசிய மாவட்ட, மட்டங்களில் பல விருதுகளையும் பெற்றுக்கொண்டார்.

போரால் அழிந்த சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையின் பௌதிக வள விருத்தி அதிபரின் தனியாளுமையால் பெற்றுக்கொள்ளப்பட்டது. யார் யாரை எப்ப எப்ப உள்வாங்க வேண்டுமென்ற தீர்க்க தரிசனமும் மதி நுட்பமும் இவ் வெற்றிக்குக் காரணமாகும் பள்ளியின் கற்றல் பெறுபேறுகள் இணைபாட விதானச் செயற்பாடுகள் எப்பவும் முதன்மை நிலையே இவரின் திறமைக்குச் சான்றாக ஆவணப் படுத்தப்பட்டிருப்பது தரம் 5 புலமைப் பரிசில் பெறுபேறே யாகும். அதிபர் இ.செல்வநாயகம் அவர்கள் ஒரு நேர்க்கணியச் சிந்தனை யாளர் இதன் பொருட்டு இவரைச் சமூகம் எப்பவும் ஏற்றுக்கொள்ளும். ஓய்வு வாழ்க்கையை குடும்பத்துடனும் சீர் சிறப்புடன் வாழ வாழ்த்துக்களும் நல்லாசிகளும்

ச.நாகரத்தினம்
ஓய்வு நிலை பி.க.ப



### வாழ்த்துச் செய்தி

மணிவிழாக் காணும் திருவாளர் செல்வநாயகம் கற்பித்தல் நுட்பத்திறன் படைத்த நல் ஆசானாகப் பர்ணமித்து முல்லையில் பல மாணவர்களை உயர்நிலையடையச் செய்த பேராசான். ஸ்ரீமுருகானந்தா வித்தியாலத்தில் அதிபராகக் கடமையாற்றி தனது முகாமைத்துவ ஆளுமைத் திறமையி னால் வேணாவில் கிராம மக்களின் கல்வியில் சுடர் விளக்கேற்றியவர். சிறிசுப்பிர மணிய வித்தியாசாலையில் பன்னிரண்டு வருடங்கள் தனது முழு நேரத்தையும் அர்பணித்து மாவட்ட தேசிய மட்டத்தில் புலமைப்பரிட்சை, இணைபாட விதானச் செயற்பாடுகளில் உயர் பெறுபேறுகளை ஈட்டிக் கொடுத்த சாதனையாளன் பௌதிக விருத்தியில் போரினால் தரைமட்ட மாக இருந்த பள்ளியை சகலவளங்களும் நிறைந்த பாடசாலையாக மிளிர வைத்த திட்டமிடல் திறன் மிக்க பெருமுயற்சியாளன். தமிழ் அறிவாற்றல் மிக்க முத்தமிழ் வித்தகர். சிறந்த எழுத்தாளன், இதழாசிரியர், சமய கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை போற்றி வளர்த்து. மாணவர்களும் சமூகமும் சாதனை படைக்க வழிகாட்டி வரும் பேராசன். இத்தகைய சகல கலா வல்லவன் சேவையைப் போற்றி, எதிர்காலம் சிறக்க வாழ்த்துவதில் பேருவகையடைகின்றேன்

பொன் பேரின்பநாயகம்
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்



### மணி விழா நாயகனின் தடமிடல்கள்

கிடைக்க கூடிய வளங்களை உச்ச அளவில் வினைதிறனுடன் பயன்படுத்தி வெற்றியடைபவனே சிறந்த நிர்வாகியாகின்றான். இதற்காக ஒரு நிர்வாகியாக முகாமையாளனாக பல சவால் களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கமைய காலம் போற்றும் கல்வி பாடு துனை வாஞ்சையுடனும், அர்பணிப்புடனும் முல்லை மண்ணின் ஆசிரியராய் அதிபராய் ஆண்டுகள் பல வாழ்ந்து இந் நாளில் ஓய்வு பெறும் உயர் திரு இளையதம்பி செல்வநாயகம் அவர்களை கல்விச் சமூகத்தோடு இணைந்து பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சியடை கின்றேன்

"என்னென்ப ஞனை எழுத்தென்ப இவ்விரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

என்ற வள்ளுவரின் வாக்குக்கமைய கல்வியின் தேவைகளையுணர்ந்து எதிர்கால சந்தியை வளப்படுத்த நீண்ட பல ஆண்டுகள் நல் மாணவ உருவாக்கலில் தமையீந்த இவரின் பணியானது போற்றுதற்குரியது.

வன்னி மண்ணின் நின்றொளிர் தாரகையாம் சிறிசுப்பிரமணிய வித்தியா சாலையிலே மீள் குடியேற்றத்தின் பின் 2013ல் ஏழு மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்திருந்தனர் இன் நிலை சீரான வளர்ச்சிப்போக்கில் 13,26,28,51 என உயர்ந்த வண்ணமே செல்கின்றதென்றால் அதற்குச் செயல் வீரனான இம் மணிவிழா நாயகனின் அரும் பெரும் முயற்சியே காரணம் என்றால் அது மிகையல்ல மிகச் சிறப்பாக 2017ல் 51 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுச் சாதனையை நிலைநாட்டியுள்ளமையும் பாராட்டுதற்குரியதே இவரின் சேவையின் செம்மை கண்டு தான் 2015ல் காலமகள் இவருக்கு சிறந்த அதிபருக்கான பிரதிபா பிரபா விருதை வழங்கினாளோ? என்று எண்ணத் தோன்றுகின்றது. இந் நாயகனின் வழிகாட்டலில் இன்று மட்டுமல்ல என்றுமே இவ் வித்தியாசாலை அறிவுச் சுடர் விட்டு ஒளிர்ந்து கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை

வளமுறும் சேவை ஓய்து நலமுறவழி சமைத்தீர் இனி
இடரது இன்றி ஓய்வு இனித்திட வாழ்த்துகின்றேன்

சி. சுப்பிரமணியேஸ்வரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர் - புதுக்குடியிருப்பு



### வாழ்த்துச் செய்தி

முல்லை மண்ணின் எதிர்கால சந்ததியினரின் விடிவெள்ளியாம் மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலையில் நீண்ட காலம் சேவை யாற்றிய திருவாளர் இளையதம்பி செல்வநாயகம் அவர்கள் மாணிவிலா காணும் தருணத்தில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமை கொள்கின்றேன்.

திருவாளர் இளையதம்பி செல்வநாயகம் அவர்கள் அர்ப்பணிப்பு மிக்க ஒரு சேவையாளர் கல்விச் சமூகத்திற்கு அளப்பரிய சேவையை ஆற்றிடும் ஆற் றல் மிக்கவர் இவர் பல மட்டங்களில் தன்னை நிலை நிறுத்தி பணி செய்தமை யாவாரலும் அறியப்பட்டதே 15.03.1990 இல் மு/கருவேலங் கண்டல் அ.த.க பாடசாலையில் ஆசிரியராக முதல் நியமனம் பெற்று கல்வி பணியாற்றுவதற்காக காலடி எடுத்தார் தொடர்ந்து 01.01.1991 முதல் 31.12.1995 வரை மு/முத்தையன் கட்டு வலது கரை அ.த.க பாடாசலையிலும் 01.01.1996 முதல் 31.12.2000வரை மு/புதுக்குடியிருப்பு றோ.க வித்தியால யத்திலும் அரும் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது தனது சேவையில் உயர்ச்சி கண்டு 01.01.2001முதல் 26.02.2006வரை மு.வேணாவில் ஸ்ரீ முரு கானந்தா வித்தியாலயத்தில் அதிபராக பணி செய்தார் 27.02.2018 சேவை யில் ஓய்வு காணும் இன்றுவரை மு/சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் அதிபர் சேவை வழங்கி வருகிறார். இவரது ஆற்றல் நிறைந்த அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை அவரின் சேவைக்கால சாதனைகள் இதனை பறை சாற்றுகின்றன.

யுத்த காலத்தில் முடங்கிப்போன பாடசாலையை புதுப்பொலிவுடன் புனரமைத் தமையும் தன் தலையீட்டினாலும் முயற்சியினாலும் போதுமாக பௌதீக வளங்களை அரச அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றமையும் வியக்கத்தக்க வகையில் விளையாட்டுப்போட்டியில் எல்லா மாணவர்களையும் ஒருங்கிணைத்தமை, பரிசில்தினம், கலைவிழா போன்றவற்றை திறன்பட நடத்தியமையும் இணைப்பாடவிதான செயற் பாடுகளை வலயம், மாகாணம், தேசியம்வரை கொண்டு நகர்த்த முயற்சித்தமை போன்ற விடயங்கள் வரவேற்கத்தக்கமை ஆகும் இவரின் அளவற்ற சேவையால் 2015ஆம் ஆண்டு பிரதீபா பிரபா விருது கிடைத்தமையும் புலமைபரிசில் பரீட்சையில் உயர்வீத அதிகரிப்பால் சித்தி பெற்று தொடர்சாதனையை படைத்தமையும் இவ்வாறான சாதனைகள் கல்வி உலகில் இவரை அடையாளப்படுத்துகின்றன இத்தகைய சேவையாளனின் சேவை என்றும் எமக்கு கிடைக்க இறை ஆசியை வேண்டுவதோடு சேவைக்கு பின்னரான வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்

சேவையால் நிறைந்தோம்
மனம் மகிழ்ந்தோம்
வாழிய வாழ்வு
என்றும் வாழ்த்துக்களுடன்

M. ஜெறாட்
செயலாளர் - பாடசாலை அபிவிருத்தி சங்கம்



### வாழ்த்துச் செய்தி

ஆசிரியராய் அயிவமுதம் ஊட்டி அதிபராய் அருஞ்சேவையாற்றி ஈன்றோரிலும் மேலாகனம் நெஞ்சில் நிறைந்தவரே –சன்றோராய் எம்மை மாற்றி சாதனைகள் புரிந்தவரே வயதுக்கு வராத வார்த்தைகளால் வாழ்த்தி நிற்கின்றோம் கல்லூரியின் கனதியான முன்னேற்றங்களெல்லாம் உங்கள் கடின உழைப்பின் கபத்திரமான முத்திரைகள் சிறி சுப்பிரமணிய வித்தியா சாலையை சிறீலங்கா எங்கும் வியாபிக்க செய்தவர் நீங்கள் நேரகாலம் பாராத உங்கள் நேர்த்தியான சேவைகளால் எம் பள்ளி நிமிர்ந்து நிற்கிறது நன்றியோடு மெச்சுகிறோம் பதவியில் இருந்து ஓய்வு பெற்றாலும் பணிகள் தொடரட்டும் இளைப்பாறும் காலங்கள் இனிதாக அமையட்டும் நீண்ட ஆயுளுக்கும் நிறைந்த ஆரோக்கியத்திற்கும் இறை ஆசிகள் கிட்டட்டும் வாழ்த்துக்கள்

உ.சசிவர்மன்
பழைய மாணவ சங்க செயலாளர்

## பாடசாலைச் சமூகம்
## மு/சிறிசுப்பிரமணிய வித்தியாசாலை
## புதுக்குடியிருப்பு.

## 25 ஆவது ஆண்டு திருமண நாள் அழைப்பு



**கார்த்தி ஸ்ரீஸ்கந்தராசா**
**தங்கராணி (பப்பா)**
கைதடிச் சந்தி கைதடியை வசிப்பிடமாக கொண்ட
**ஸ்ரீஸ்கந்தராசா தங்கராணி (பப்பா)**
தம்பதியினர் ஆகிய நாம்
**இன்று (27.03.2018) செவ்வாய்க்கிழமை**
எமது இல்லத்தில் திருமணநாள் நிகழ்வை கொண்டாடவுள்ளோம்
இந்த நிகழ்வை சிறப்பிக்க உற்றார் உறவினர்,
நண்பர்கள் அனைவரையும் வருக வருக என
அன்புடன் அழைக்கின்றோம்.

Welcome Welcome

கைதடிச் சந்தி, கைதடி.
**கார்த்தி ஸ்ரீஸ்கந்தராசா தங்கராணி (பப்பா) தம்பதியினர்**

(CS 15105(13.17)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகர் அல்லது யாழ். நகரை அண்மித்த பிரதேசங்களில் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு - **071 0404 978**

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 3012 திகதி: 26.03.2018 திங்கட்கிழமை நிலம்

வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து: **36 50 51 61 O**
போனஸ் இலக்கம்: **05**
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட்: **36,219,590/-**

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space A Kenr டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 208
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.03.26
இன்றைய ஜக்பொட் பரிசு **ரூ. 51,997,090/-**

வெற்றி இலக்கங்கள்: **37 50 66 67**
ஆங்கில எழுத்து: **G**

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space A Kenr டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

## மணமகள் தேவை

1988ஆம் ஆண்டு பிறந்த பூரம் நட்சத்திரம், 8இல் செவ்வாய். கி.பா.103 உடைய சொந்தமாக நகைத்தொழில் செய்யும் மணமகனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை.
குறிப்பு:- ஐங்குலத்தோர் தொடர்பு கொள்ளலாம்
**077 986 3089, 071 085 7114**

## ES Printers

பனர் பிரிண்ட் (Banner), 35/=

# 357, Kasthuriyar Road, Jaffna.

## DISTRICT SECRETARIAT, JAFFNA
## INVITATION FOR BIDS

1. **The Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna on behalf of the Government Agent / District Secretary, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction of Additional Administrative Block at Divisional Secretariat Stage II as described below in the schedule.**
2. Bidding will be conducted through National Competitive Bidding, however, limited to the bidders who registered within the administrative boundary of the Northern Province.
3. To be eligible for contract award, the successful bidder should not have been black listed and should be registered in the field of building construction at the Construction Industry Development Authority (CIDA), valid until the date of closing of the bids. Further, the registration should be valid at the date of award.
4. Interested bidders may obtain further information from the **Procurement Unit, District Secretariat, Jaffna** and inspect the Bidding Documents at the same address on any working day from **9.00 a.m to 3.00 p.m from 28.03.2018.**
Contact numbers are : phone - 021 222 2233, 021 222 2234 (Ext. - 140)
Facsimile : 021 222 3674
5. A complete set of Bidding Documents in English language could be purchased by interested bidders on the submission of a written application to the **Procurement Unit, District Secretariat, Jaffna from 28.03.2018 until 18.04.2018 from, 9.00 a.m to 2.00 p.m** upon payment of a non refundable fee as described in the schedule below.
6. Sealed bids shall be sent by registered post addressed to the **Chairman, Procurement Committee, District Secretariat, Jaffna** or deposited in the Tender Box available at the Procurement Unit, District Secretariat, Jaffna on or before **2.30 p.m on 19.04.2018.** Late bids will be rejected. Bidders should write the job description and bid No. on the top left hand corner of the envelope. Bids will be opened at **2.30 p.m at same day** in the presence of the bidders or bidders' representatives who choose to attend. Original and duplicate should be submitted separately.
7. Procurement Committee will keep the right to make final decision in regard to accept or reject Bids and it will be the final regarding the bids.
8. Bid shall be valid for a period of **90 days** from the last date fixed for receiving of Bids or any extended period & bid security should be valid for **120 days** from the bid opening.
9. Prebid meeting will be held on **12.04.2018 at 10.00 a.m**
10. The details of the bids are given below :

| Bid No. | Description of work | Estimated Amount (million) (Excluding VAT) | Contract Period (month) | Minimum Grade of ICTAD (Building) | Bids Security (Rs.) | Non Refundable Fee (Rs.) |
|---|---|---|---|---|---|---|
| JF/PROC/KVD. ADM.II/ 01/16/2018 | CONSTRUCTION OF ADDITIONAL ADMINISTRATIVE BLOCK AT DIVISIONAL SECRETARIAT, KARAVEDDY – STAGE II | 11.34 | 04 | C6 & C5 | 226,000/- | 4,500/- |
| JF/PROC/KOP. ADM.II/ 01/17/2018 | CONSTRUCTION OF ADDITIONAL ADMINISTRATIVE BLOCK AT DIVISIONAL SECRETARIAT, KOPAY – STAGE II | 19.3 | 06 | C6 & C5 | 193,000/- | 5,000/- |

**Nagalingam Vethanayahan**
**District Secretary,**
**District Secretariat,**
**Jaffna.**

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்

## ஸ்ரீ காளியம்மன் ஓலைச்சுவடி ஜோதிட நிலையம்

ஜோதிட வம்ச பரம்பரை
**ஸ்ரீ சீத்தாராமன்**
**076 404 3680, 076 354 3908**

ஜாதகம் கேட்பவர்களுக்கு நாமநட்சத்திரம், கல்வி, உத்தியோகம், வியாபார விருத்தி, திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், குடும்ப ஒற்றுமையின்மை, வெளிநாட்டுப்பயணம், கண் திருஷ்டி மற்றும் வீடு, குடும்பத்தில் ஏற்படும் நன்மை, தீமைகளைத் துல்லியமாகக் கணித்துப் பார்க்க நாடுங்கள்

**ஜோதிடர் - ஸ்ரீ சீத்தாராமன்** (CS/14628(11,17)
ஆசிரியர் கலாசாலை அருகில், கோண்டாவில் வீதி, இருபாலை, யாழ்ப்பாணம்.

## மேல்நீதிமன்றம், யாழ்ப்பாணம்.
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் நீதிமன்றத்தில் சிற்றுண்டிச்சாலை சேவையினை வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.
01. மாவட்ட/நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்துறை.
எனவே சிற்றுண்டிச்சாலை சேவையினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விவரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கணக்கு கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூ 100/= ஐயும் மீளளிக்கக் கூடிய வைப்பாக ரூபா 5, 000/= ஐயும் செலுத்தி 18.04.2018 புதன்கிழமை பி.ப. 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 18.04.2018 பி.ப. 3.00 மணிவரை ஆகும்.

**மா. இளஞ்செழியன்,**
**தவிசாளர்/ மேல் நீதிமன்ற நீதிபதி,**
**மேல்நீதிமன்ற கேள்விச்சபை,**
**மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்.**

(C 6264/15/17)

## மரண அறிவித்தல்

## திருமதி அழகம்மா இராமசாமி



மட்டக்களப்பு ஆரையம்பதியைப் பிறப்பிடமாகவும், மாலியவத்தை சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அழகம்மா இராமசாமி நேற்று (26.03.2018) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராமசாமியின் அன்புமனைவியும் சிறீதரன் (அதிபர், யா/ சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), குமுதினி (ஜேர்மனி) காலஞ் சென்ற உமாதரன் ஆகியோரின் அன்புத்தாயாரும் கிருபாகரனின் அன்புப் பெரியம்மாவும் காந்தினிதேவி (ஊரெழு), விஜயராஜா (ஜேர்மனி), விஜய சோபனா ஆகியோரின் அன்பு மாமியும் ஸ்ரீவைஷ்ணவி, வைஷ்ணவன், குயிந்தன் (ஜேர்மனி), சகானா (ஜேர்மனி), சாருஜா (ஜேர்மனி), லக்சன், கிருஷிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.


**அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2018) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

**தகவல்: மகன் (இ. சிறீதரன்)**
**சங்கானை**

## அறநெறிகளைப் போதித்தருளிய

# அற்புதத் துறவியே யோகர் சுவாமிகள்



செல்லத்துரை லோகேஸ்வரன்

ஈழமணித் திருநாடு செய்த அருந்த வப்பயனாக அவதரித்த ஈழத்துச் சித்தர் வரிசையில் தோன்றிய கொழும்புத்துறை தவத்திரு யோகர் சுவாமிகளின் 54 ஆவது ஆண்டு குருபூசை தினம் இன்றாகும். சுவாமிகள் இந்தப் புனித பூமியில் நடமாடும் தெய்வமாக இருந்து, நல்ல அறப்பயிர் விதைகளை எமது மத்தியில் விதைத்து, அதை நாம் ஒவ்வொருவரும் நல்ல முறையில் அறுவடைசெய்து அருள் நெறியில் வாழ்வாங்கு வாழ்வதற்கு நல்ல வழிகாட்டியாக மக்களோடு மக்களாக வாழ்ந்த பெரும் துறவி.

**பேறுபெற்றது மாவிட்டபுரம்**

சுவாமிகள் ஈழவள நாட்டின் மாவிட்டபுரம் என்றும் புண்ணிய பதியில் வாழ்ந்த சைவப் பெரியார் அம்பலவாணருக்கும் சின்னாச்சி அம்மையாருக்கும் 1872ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி அவதரித்தார். பெற்றோர் அவருக்கு 'யோகநாதன்' என்று திருநாமம் சூட்டினர். அக்காலத்தில் மிஷனரிப் பாடசாலைகள் காணப்பட்டதால் இவர் தனது ஆரம்பக் கல்வி யாழ்ப்பாண புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆரம்பித்தார். ஆங்கிலம், தமிழ் போன்ற மொழிகளில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். சுவாமிகள் தனது இளமைக் காலத்தில் அரச உத்தியோகத்தராக வேண்டும் என்று எண்ணி இரணைமடு குளக்கட்டு வேலை ஆரம்பித்த காலத்தில் களஞ்சிய பொறுப்பாளராக வேலை ஏற்றார். தனது ஓய்வு நேரங்களில் தியானம், தேவார திருவாசகம் ஓதுதல் போன்றவற்றில் நாட்டம் செலுத்தினார். இவ்வாறு வாழ்ந்துவரும் காலத்தில் குருநாதன் செல்லப்பா சுவாமிகள் யோகநாதன் என்ற இரும்புத்துண்டை காந்தம் இழுப்பது போல் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாண நல்லூர் தேரடிக்கு இழுத்தார்.

**கருத்தில் நினைந்துருகிக் கைகூப்புந் தொண்டர்**
**வருத்தமெல்லாம் தீர்க்கும் வடிவேல் திருத்தலத்தில்**
**தேரடியிற் றேசிகனைக் கண்டு தெரிசித்தேன்**
**ஆரடா நீ யென்றான் அவன்.**

> இன்று உலகம் பூராகவும் சுவாமிகளின் சீடர்கள் தமது குருநாதன் யோகர் சுவாமிகள் காட்டி வந்த வழியில் அறப்பயிர் விதைத்து சைவ சமய உண்மைகளை உணர்ந்து அறப்பணி ஆற்றி வருகின்றார்.

**தேரடியில் தன் குருநாத தேசிகனை கண்ட பொழுது 'ஆரடா நீ, தேரடாவுள், தீரடாபற்று'** என்று சீராடியார் சூழ நிற்க உபதேசம் வழங்கப்பட்டு ஆட்கொள்ளப்பட்டார். தனது குருநாதன் செல்லப்பா சுவாமிகள் மகாவாக்கியங்களை எப்பொழுதும் தனது நாவினால் முணுமுணுத்தவாறு உச்சரித்துக் கொண்டிருப்பார். என்பதை

**செல்லப்பன் என்னுந் திருவுடையான் தேரடியில்**
**பொல்லாப் பிள்ளை யென்றான் போற்று**
**முழுதும் உண்மை யென்று முனிவனவன் சொன்னான்**
**எழுத முடியா ததை**
**நாமறியோமென்னும் அரிய திருவாக்குச்**
**சேமமுறச் சொன்னான் தெரி**
**முடிந்த முடிபென்று முன்னாளிற் சொன்னான்**
**அடியார்கள் முன்னரவன்**

என்று பாடலில் கூறுகின்றார்.

தேவர்களும் முனிவர்களும் ஒழிவு மறைவின்றி வந்து வணங்கும் நல்லூர் தேரடியில் சுவாமிகள் தன் குருநாதருடன் இருக்கும் காட்சியைக்காண அடியவர் கூட்டம் நல்லூர் தேரடியை நாடியது ஒரு நாள் தன் குருவின் கட்டளைப்படி கதிர்காமம் சென்றார். கதிர்காம யாத்திரையை முடித்துக் கொண்டு மீண்டும் யாழ்ப்பாணம் வந்து 1914ஆம் ஆண்டு தொடக்கம் கொழும்புத்துறையை தனது இருப்பிடமாகக் கொண்டு தன்னை நாடி வரும் மெய் அன்பர்களின் குறைகளையெல்லாம் தீர்த்து வாழ அருள்காட்டி வாழும் தெய்வமாக விளங்கினார்.

**உலகம் பூராகவும் சுவாமிகளின் சீடர்கள் பணிவாழ்வில்**

இன்று உலகம் பூராகவும் சுவாமிகளின் சீடர்கள் தமது குருநாதன் யோகர் சுவாமிகள் காட்டி வந்த வழியில் அறப்பயிர் விதைத்து சைவ சமய உண்மைகளை உணர்ந்து அறப்பணி ஆற்றி வருகின்றார். அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அமெரிக்க ஹவாய் சைவ ஆதீனம் அதற்கு உதாரணம் சிவாய நம சுப்பிரமுனி காட்டிய வழியில் ஐரோப்பியர் இன்று எமது சைவ சமய உண்மைகளை அறிந்து அவற்றைப் பின்பற்றி வருகின்றனர். அவ்வாறே எமது சைவ அன்பர்களும் தங்கள் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் எமது மண்ணில் எம்மோடு வாழ்ந்த தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களைப் பாடுவதற்கு வழி அமைத்துக் கொடுப்பதோடு ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளில் நல்லூர் தேரடியில் மாலைப் பூசை முடிவுற்றதும் நடைபெறும் பஜனை நிகழ்வில் தங்கள் குழந்தைகளுடன் பெற்றோர்கள் வந்து கலந்து சிறப்பித்து நல்லைக் குருநாதன் திருத்தாள் வணங்கி பேறு பெறுவோமாக.

---



## விண்ணரசர்

விண்ணுலகத் தந்தையே - உம்மை
வியந்து நாம் வணங்கிடுவோம்.

துன்பங்களை நீக்கி
துயர் துடைக்கும் பிதாவே

சிலுவையைச் சுமந்தவரே
சிறுமை கண்டு பொங்கியவரே

புனிதரே எம் ஆண்டவரே
புதுமைகள் எமக்கு புரிந்தீரே

கல்வாரி மலை புகழ் இயேசுவே
கருணை உள்ளம் கொண்டவரே

எல்லாம் வல்லவரே
எங்கும் நிறைந்தவரே

இறைவார்த்தை கூறிடுவோம்
இறைவனை நினைந்து பிரார்த்திப்போம்

அன்பாக நாம் வேண்டுகிறோம் - உலகுக்கு
அரசனே மீண்டும் வருக.

*சிவரம்யா*

### நாளை

## 28.03.2018

புதன்கிழமை

**பங்குனி 14**

திதி: துவாதசி மு.இ. 10.50 வரை
நட்சத்திரம்: ஆயிலியம் மு.ப.09.21 வரை
சுபநேரம்: 04.44–06.14 வரை
ராகுகாலம்: 12.14–01.44 வரை

## வரலாற்றில் இன்றைய தினம் 27.03.2018

1958 - குருஷேவ் சோவியத் யூனியனின் அமைச்சரவைத் தலைவரானார்.

1993 - சீன மக்கள் குடியரசின் அரச தலைவராக சியாங் செமின் நியமிக்கப்பட்டார்

1988 - புலிகளுடன் பேசி சமாதானத்துக்கு வரச் செய்யுமாறு இந்திய இராணுவ அதிகாரி பொது மக்களிடம் கோரிக்கை.

2008 - ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை நிறுத்துமாறு பன்னாட்டு ஊடக அமைப்புக்கள் மகிந்தவுக்குக்கடிதம்

2009 - உதயன் மீதான தாக்குதலுக்கு ஊடக அமைப்புக்கள் கண்டனம்.

2016 - பாகிஸ்தானின் லாகூரில் கிறிஸ்து உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டிய கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 70 பேர் சாவடைந்ததுடன் 300 பேர் வரை காயமடைந்தனர்.



1964 - அமெரிக்க வரலாற்றில் நிகழ்ந்த பெரியளவிலான நிலநடுக்கத்தில் 125 பேர் உயிரிழந்தனர்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# அளவுக்கதிகமான இராணுவத்தினர் இருப்பதே பிரச்சினை!

வடக்கில் அளவுக்கதிகமான இராணுவத்தினரைக் குவித்து வைத்திருப்பதன் மற்றொரு விளைவு, நேற்றுமுன்தினம் உடையார்கட்டில் மடை திறந்திருக்கிறது. தமது பாவனைக்குரிய குளத்து நீரைப் பயன்படுத்தி இராணுவத்தினர் விவசாயம் செய்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே உடையார்கட்டு விவசாயிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தமது சிவில் பாதுகாப்புப் படையினர் மூலம் நடத்திவரும் பெரும் பண்ணைகளின் தேவைக்காகக் குளத்து நீரைப் பயன்படுத்தி வருகின்றார்கள். இவ்வாறு குளத்தின் கணிசமான நீர் இயந்திரங்கள் மூலமாக இறைக்கப்பட்டுவிடுவதால் கிராமத்தின் விவசாயிகள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்குப் போதியளவு தண்ணீர் கிடைப்பதில்லை. சிறுபோகம் விதைக்கும்போது குளத்தில் இருக்கும் தண்ணீர், நெல் முற்றி அறுவடையை அண்மிக்கும் வேளையில் முடிவடைந்துவிடும் நிலை ஏற்படுவதாக விவசாயிகள் மனம் குமுறுகிறார்கள்.

இதையடுத்து குளத்திலிருந்து இராணுவத்தினர் தண்ணீர் எடுப்பதைத் தடுத்து நிறுத்துமாறு உள்ளூர் அரச அதிகாரிகளிடம் விவசாயிகள் கோரிக்கையை முன்வைத்தனர். அது நிறைவேறாத நிலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை முன்வைக்கப்பட்டது. விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் குளத்திலிருந்து இராணுவத்தினர் தண்ணீர் இறைக்கக்கூடாது என்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானத்தையும் உதாசீனப்படுத்திவிட்டு இராணுவத்தினர் தொடர்ந்தும் குளத்திலிருந்து தண்ணீர் இறைத்து வருவதால், விவசாயிகள் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். உள்ளூர் அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் கவனத்தை ஈர்த்து ஒரு தீர்வைப் பெற்றுவிடுவதே அவர்களின் நோக்கம்.

அளவுக்கு அதிகமாக இராணுவத்தினர் வடக்கில் நிலை கொண்டிருப்பதே இதற்கான காரணம். தமக்குரிய வேலை எதுவும் இன்றி இருக்கும் இராணுவத்தினருக்கு வேலை கொடுப்பதற்காகவே பண்ணைகளும், உல்லாச விடுதிகளும், உணவகங்களும் வடக்கில் அதிகளவில் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் கணிசமான எண்ணிக்கையிலான படையினருக்கு வேலையையும் கொடுத்ததாகின்றது, பணமும் உழைத்ததாகின்றது.

ஆனால், அளவுக்கதிகமான இராணுவப் பரம்பல் மக்களின் ஜனநாயக வெளியைப் பெரிதும் பாதிக்கின்றது. அதிலும் குறிப்பாக வன்னியில் இந்த நிலமை கடுமையாக இருக்கின்றது. அளவுக்கு மீறிய இராணுவத்தினரால் பொது மக்கள் வதைபடும் நிலையே அங்கு நீடிக்கின்றது.

இது குறித்து வடக்கு மாகாண முதலமைச்சர் தனது பல உரைகளில் சுட்டிக்காட்டியிருக்கிறார். கிளிநொச்சி மாவட்டம் இயக்கச்சி கிராமத்தில் உள்ள நல்ல தண்ணீர் கிணறுகள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருப்பதால், பொதுமக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுவதைக்கூட முதலமைச்சர் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால், அவரது கருத்துக்கள் அம்பலம் ஏறி தீர்வைப் பெற்றுத்தந்ததாக இல்லை. அவரும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத்தக்க சட்ட வழிமுறைகளை நாடினார் என்றும் இல்லை. இதனால் தொடர்ந்தும் பொதுமக்களே பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

போர் முடிந்துவிட்ட நிலையில் இராணுவத்தினர் 1980களில் இருந்த தமது முன்னைய நிலைகளுக்குத் திரும்பிவிட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. எனினும் 2015 தை மாதத்தில் கூட்டமைப்பின் அனுசரணையுடன் ஆட்சிபீடம் ஏறிய மைத்திரி, ரணில் அரசுகூட அந்தக் கோரிக்கைக்குச் செவிசாய்க்காததன் விளைவே உடையார்கட்டு விவசாயிகளின் போராட்டம்.


வடக்கில் இருந்து இராணுவத்தினரைக் குறைக்கவேண்டும் என்பதை ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு வல்லுநர்கள் பலரும்கூட பலதடவைகள் வலியுறுத்தியுள்ளனர். எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் இராணுவத்தினரால் சமூக, உளவியல் தாக்கங்கள் பலவும் ஏற்படுகின்றன என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவை எவையும் கவனத்தில் எடுக்கப்படாமல் தொடர்ந்தும் இராணுவத்தினரை வடக்கில் நிலை நிறுத்தி வைத்திருப்பதால், இந்தச் சிக்கல்கள் மேலும் தீவிரமடைந்து மற்றொரு இன முரண்பாட்டுக்கு இவையே அடித்தளமாகிவிடும். எனவே கொழும்பு அரசு இது விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுத்து இராணுவத்தினரின் எண்ணிக்கையை வடக்கில் இருந்து குறைக்கவேண்டும்.

# இலங்கை -பாகிஸ்தான் இணை அறிவிப்பு சொல்லளவில் மட்டும்தானா?

சேரலாதன்

உலக பயங்கரவாதத்துக்கு எதிராக இணைந்து செயற்படுவதற்கு இலங்கையும், பாகிஸ்தானும் இணங்கியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்று முழு உலகமும் பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்து வருகின்றது. பயங்கரவாதிகள் ஈவு இரக்கமற்ற வகையில் அப்பாவி மக்களின் உயிர்களை பறித்தெடுத்து வருகின்றனர். பயங்கரவாதத்துக்கு எதிராக உலக நாடுகள் அணிதிரண்டு போராடி வருகின்ற போதிலும், அவற்றால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.



இலங்கையின் நீண்ட காலமாக நீடித்த பயங்கரவாதத்தை ஒழிப்பதில் பாகிஸ்தான் வழங்கிய ஒத்துழைப்பை இலகுவில் மறக்கமுடியாதென இலங்கையின் அரச தலைவர் பாகிஸ்தானில் வைத்துக் கூறியுள்ளார். அந்த நாட்டின் சுதந்திர தின நிகழ்வுகளில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்ட அவர் அந்த நாட்டுத் தலைமை அமைச்சருடனான பேச்சுக்களின்போது இவ்வாறு தெரிவித்தார்.

### அரசுக்களால் புறக்கணிக்கப்படும் மக்கள் கிளர்ச்சியாளர்களாகப் பிரவேசிக்கின்றனர்

கிளர்ச்சிக் குழுக்கள் உருவாவதற்குப் பலகாரணங்கள் உள்ளன. தொடர்ந்து பல்வேறு வகையிலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்ற ஒரு மக்கள் பிரிவினர், இனியும் பொறுத்துக் கொள்ள முடியாது என்ற நிலையில் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட ஆரம்பிக்கின்றனர். இது மத ரீதியாகவோ, அல்லது இன ரீதியாகவோ அமையலாம்.

இலங்கையில் கூடத் தமிழர்களின் உரிமைக்கான போராட்டம் 20 ஆண்டுகளையும் கடந்து இடம்பெற்றது. இதில் ஏராளமான மனித உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. பெருமளவில் பொருளாதார இழப்புக்களும் ஏற்பட்டன. இவற்றுக்குப் பின்னரும் மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் தமிழர்களுக்கு உரிமை வழங்குவது தொடர்பாகச் சிந்தித்துக்கூடப் பார்க்கவில்லை. இறுதியில் உரிமைப்போராட்டம் பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு, பிற நாடுகளின் பங்களிப்புடன் மௌனிக்கப்பட்டது. இறுதிப் போரின்போது பல ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதை இலங்கையரசு ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. இறுதிப் போர் இடம்பெற்ற போது படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதிலும், அதற்குப் பொறுப்புக்குக் கூறுவதிலிருந்து இலங்கை அரசு பின்னடித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பொறுமையிழந்த நிலையில் இலங்கைக்கு எதிரான கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. அமெரிக்கா இப்போது தான் இலங்கையின் இரட்டை வேடத்தைப் புரிந்துகொண்டுள்ளது. அமெரிக்காவும் பிற மேற்குலக நாடுகளும் தமிழர் போராடியதற்கான சரியான காரணத்தைப் புரிந்து கொள்ளாமல் தமிழர் போராட்டத்துக்கு பயங்கரவாத முத்திரைகுத்தி அதை ஒடுக்குவதற்குப் பேருதவி புரிந்தன. இதைவிடுத்து போராட்டத்தின் உண்மையான காரணம் கண்டறியப்பட்டு அதற்கான தீர்வுகளும் வழங்கப்பட்டிருந்தால், ஏராளமான உயிர்களை அழிவிலிருந்து காப்பாற்றியிருக்க முடியும்.

### பயங்கரவாதத்துக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புண்டு

உலகப் பயங்கரவாதத்துக்கு எதிராகக் கிளம்பியிருக்கும் பாகிஸ்தானும் இலங்கையும் முதலில் தத்தமது நாடுகளிலிருந்து பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் பணிகளை முன்னெடுக்க வேண்டும். பயங்கரவாதத்துக்கும் பாகிஸ்தான் நாட்டுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. பயங்கரவாதத்தின் ஊற்றுக்கண் பாகிஸ்தான் என்றால் அது மிகையாகாது. இதன் பக்கத்து நாடான இந்தியா பயங்கரவாத அச்சுறுத்தல்களை பாகிஸ்தான் நாட்டில் இருந்தே பெருமளவில் எதிர்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஓர் இனத் தொகுதிக்கு எதிரான வன்செயல்களையும் பயங்கரவாத நடவடிக்கையாகவே கருத முடியும். இந்த வகையில் பார்த்தால் அண்மையில் இலங்கையில் நடத்தப்பட்ட முஸ்லிம் மக்களுக்கெதிராக நடத்தப்பட்ட வன்செயல்களையும் பயங்கரவாத நடவடிக்கைகளின் பட்டியலில் உள்ளடக்க முடியும். காலம் காலமாக தமிழர்களுக்கு எதிராகவும் இவை இடம்பெற்றிருக்கின்றன. இவை மேலும் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது இலங்கை அரசின் தலையாய கடமையாகும்.

### சிரியப் படுகொலைகள் குறித்து உலக வல்லரசு நாடுக்ள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை

சிரியாவில் இடம்பெற்று வருகின்ற மனிதப்படுகொலைகளை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யா நடத்தி வருகின்ற கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களால் ஒன்றும் அறியாத பச்சிளம் பாலகர்களும் உடல் சிதறி உயிரிழப்பதையும், காயங்களால் அவர்கள் அவதிப்படுவதையும் தொலைக்காட்சிகளில் பார்க்கும்போது பெரிதும் மனம்வருந்த வேண்டியுள்ளது.

ஆனால் வல்லரசு நாடுகள் இவை குறித்துப் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. ரஷ்யாவுக்கு எதிராக எந்த நடவடிக்கைகளையும் அந்த நாடுகள் இதுவரை மேற்கொள்ளாதமை வேதனைக்குரியது.

வல்லரசுகள் உட்பட மிகப் பெரிய நாடுகள் பயங்கரவாதம் என்ற பதத்தை தமது விருப்பத்துக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தி வருகின்றன. ரஷ்யாவிடமிருந்து ஆப்கானிஸ்தானைப் பாதுகாப்பதற்காக தலிபான்களைப் பயன்படுத்தி அதற்கு மிகப் பெரிய ஆதரவை வழங்கிய அமெரிக்கா, இன்று தலிபான்களை ஒழிப்பதில் முன்நிற்கின்றது. பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய பலஸ்தீன விடுதலை இயக்கம் மிகப்பெரிய பயங்கரவாத இயக்கமென ஒரு காலத்தில் பேசப்பட்டது.


ஆனால் இஸ்ரேல் நாடு பலஸ்தீன மக்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளை எவருமே கண்டு கொள்வதில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒரு பயங்கரவாத இயக்கமாக முத்திரை குத்தப்பட்ட போதிலும், அது நடத்திய போராட்டத்திலும் ஒரு நியாயம் இருக்கவே செய்தது.

இதுபோன்றுதான் ஏனைய இயக்கங்களின் அடிப்படை நோக்கமும் ஆராயப்பட்டு உரிய தீர்வு காணப்பட வேண்டும். உலக பயங்கரவாதத்துக்கு எதிராக இலங்கையும், பாகிஸ்தானும் கை கோர்ப்பு என்பது வெறும் செய்தியாக மட்டுமே இருக்கப்போகின்றது.

# உள்ளூராட்சித் தேர்தலில் வென்றுவிட்டு அரசைக் கவிழ்க்க முடியாது

**தொழில் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் ராஜாங்க அமைச்சர் பாலித ரங்க பண்டார தற்போதைய அரசியல் நிலைமை குறித்து வெளியிட்ட கருத்துக்களின் தொகுப்பு.**

ஆங்கில மொழிமூலம்: சிலோன்ருடே
தமிழில்: ஆனந்த்



**கேள்வி:-** மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடனான மைத்திரி-ரணில் அரசு, உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் நிலைதடுமாறுகிறதே?

**பதில்:-** அரசியலில் தற்போது ஸ்திரமற்ற தன்மை நிலவுவதாகக் கூறுவது தவறு. வெறுமனே இப்படி வாய் வார்த்தைகளால் கூறுவதால் அரசு ஸ்திரமற்றுப் போய்விடாது. அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் எந்த மாற்றமும் இல்லை. அரச தலைவர் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்று பல தேர்தல்கள் நடந்து முடிந்துள்ள போதிலும், 2019 ஆம் ஆண்டின் முடிவுவரை ஆட்சியிலிருப்பதற்கான அங்கீகாரம் அரச தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையில் ஆட்சியிலிருப்பதற்கு, நாடாளுமன்றத்திற்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது மக்கள் அனுபவம் வாய்ந்த வேட்பாளர்களைத் தவிர்த்து விட்டு மற்றவர்களுக்கு வாக்களித்துள்ளனர். பெரும்பாலும் கிராமப்புற மக்கள்தான் தேர்தல்களின் முடிவைத் தீர்மானிக்கிறார்கள்.

**கே:-** ஆனாலும் கூட இந்த தேர்தல் முடிவுகள் அரசிலும், ஐக்கிய தேசியக் கட்சியிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதே?

**ப:-** உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளினூடாக ஒரு நாடாளுமன்றத்தை கலைக்க வைக்க இயலாது. இந்த உண்மை புரியாமல்தான் பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

**கே:-** ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவும் உட்பூசலின் பிரதி பலன்தான் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் தோல்வியா?

**ப:-** பெரும்பாலான கட்சி உறுப்பினர்களது அபிப்பிராயம் கட்சிக்குள் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்பதுதான்.

**கே:-** கொடுத்த வாக்குறுதிகளை காப்பாற்றாமைதான், இந்த நல்லாட்சி அரசின் தோல்விக்கு காரணமா?

**ப:-** எங்கள் கட்சியின் தோல்விக்கு பல காரணங்கள் உள்ளன. எங்கள் கட்சி அதன் உறுப்பினர்களது குறைகளைக் கவனிக்கவில்லை. அரசியல்க் காரணங்களுக்காக பழிவாங்கப்பட்டவர்களுக்கு நாங்கள் எந்த உதவியுமே செய்யவில்லை. எங்கள் கட்சி ஆதரவாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. திருடர்களைப் பிடிப்போம் என்று கூறியபோதும் அப்படி எதுவும் இடம் பெறவில்லை. அதுமட்டுமல்லாது விவசாயிகளுக்கான உர மானியம் வழங்கப்படவில்லை. வயோதிபர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. விவசாயிகளுக்கு விவசாயக் கடன் வழங்கப்படவில்லை.

**கே:-** நீங்கள்தானே அரசின் நடவடிக்கைகளை கிராம மட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்?

**ப:-** உண்மைதான். அரச தலைவர் தேர்தலின் போது புத்தளத்தில் நாங்கள் வெற்றி பெற்றோம். ஆகவே புத்தளப் பகுதி மக்களுக்காக நாங்கள் ஏதாவது செய்தாக வேண்டும். அந்த நடவடிக்கைகளை கிராம மக்கள் உணர வேண்டும். அனல் மின்உற்பத்தி நிலையமொன்று அமைக்கும் திட்டமுள்ளது. நுரைச்சோலை மின்உற்பத்தி ஆலையினால் மக்கள் துன்பத்துக்குள்ளானார்கள். அது மீண்டும் தொடரக்கூடாது.

**கே:-** அமைச்சரவை மாற்றம் கிராம மட்டத்தில் தெளிவாக உணரப்பட முடிந்ததா?

**ப:-** பிரச்சினைகள் இருந்தபடியால்தான் அமைச்சரவையில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அவற்றால் எந்த பலனும் ஏற்படவில்லை என்பதை நாட்டு மக்களும் நாமும் நன்கறிவோம்.

**கே:-** சமீபத்தில் நடந்த வன்செயல்கள் பற்றி அரசும், எதிரணியினரும் மாறிமாறி ஒருவருக்கொருவர் குற்றம் சாட்டிக்கொள்ள, கடைசியில் அதனால் பாதிக்கப்படப்போவது பொதுமக்கள்தான். இந்தச்சின்னதொரு பிரச்சினையைக் கூட அரசினால் சரியாகத் தீர்க்க இயலவில்லையா?

**ப:-** எவர் இதனைச் செய்தார்கள் என்பதல்ல பிரச்சினை, எவருமே இத்தகைய விதத்தில் நடந்து கொள்ளக்கூடாது. ஒரு சிறு தீவிரவாதக் குழுதான் இதைச் செய்துள்ளது. பத்தேகம சமித்த தேரோவும் இதனையே கூறுகிறார்.

**கே:-** இந்த வன்முறை தீவிரமடைந்ததற்கு அரசின் மந்தமான போக்குத்தான் காரணமென்பது உண்மையா?

**ப:-** இதற்கு பொறுப்பாக இருந்த அரசே இதற்குப் பதில் கூற வேண்டும். விசேடமாக பொலிஸ்தரப்பினர் விரும்பியிருந்தால், இதனை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருக்க முடியும். பொலிஸ்தரப்பினரை உடனடியாக அந்த பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தியிருக்க வேண்டும். இது அரசின் பொறுப்பு. நாட்டு மக்களைக் காக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும். யார் செய்தது சரி, யார் செய்தது பிழை என்று விவாதிப்பதில் அர்த்தமில்லை. சட்டமும் ஒழுங்கும் முறையாக பேணப்பட்டிருக்க வேண்டும்.

**கே:-** நீங்களும் பொலிஸ்துறையில் பொலிஸ் அதிகாரியாக இருந்தவர்தானே? அப்படியிருக்க நீங்களே பொலிஸ்துறையை விமர்சிக்கலாமா?

**ப:-** பொலிஸ்துறையினருக்கு நாட்டின் சட்டதிட்டங்களை சரியான விதத்தில் நடைமுறைப்படுத்தத் தெரியாது. துப்பாக்கியை எத்தகைய சந்தர்ப்பத்தில் பயன்படுத்த வேண்டுமென்பதும், நீதிமன்றக்கட்டளையின் கீழோ அல்லது இல்லாமலோ ஒருவரைக் கைது செய்வது தொடர்பான அதிகாரம் குறித்த அறிவும் அவர்களுக்குக் கிடையாது. அத்துடன் பொலிஸ்துறையினருக்கு அவர்களுடைய பொறுப்பும், பங்களிப்பும் என்னவென்பது பற்றியும் ஆழ்ந்த அறிவொன்று இருக்கவேண்டும்.

**கே:-** நீங்கள் சட்டம் ஒழுங்கு அமைச்சின் பொறுப்பை இரண்டு வாரங்களுக்கு உங்களிடம் வழங்குமாறு தலைமை அமைச்சரிடம் கேட்டீர்களா?

**ப:-** சட்டம் ஒழுங்கு அமைச்சின் பொறுப்பை இரண்டு வாரங்களுக்கு என்னிடம் தந்தால், என்னால் இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்கமுடியுமென நான் தலைமை அமைச்சரிடம் கூறினேன்.

**கே:-** ஏன் தலைமை அமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானப் பிரேரணை பின்போடப்பட்டது?

**ப:-** நாங்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றி எதுவுமே குறிப்பிடவில்லை. நாங்கள் சொன்னது, ஐக்கிய தேசியக் கட்சி மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதுதான். இது கட்சி உறுப்பினர்களால் இறுக்கமாக முன்வைக்கப்பட்டு வரும் கருத்து.
இதனைக் கட்சித் தலைவரும் ஏற்றுக்கொண்டுள்ளார். இதற்கென இரண்டு குழுக்களும் நியமிக்கப்பட்ட நேரத்தில்தான், நாட்டில் எதிர்பாராததொரு பிரச்சினை தலைதூக்கியது. ஆகவே அதற்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. அந்த குழுக்களின் அறிக்கை கிடைத்தவுடன் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**கே:-** இப்போது அரசுக்கு எதிர்ப்பு எதுவுமே இல்லை என்பது உண்மையானால், ' சட்டப்படி வேலை ' என்றொரு நிலை உருவாகி நாட்டில், அரசு ஒன்று நடைமுறையிலுள்ளதா? என மக்கள் சந்தேகப்படும் நிலமையாகிவிட்டதே. இதனை ஒரு சதித்திட்டம் என எண்ணலாமா?

**ப:-** நாங்கள் இது சம்பந்தமாக கலந்துரையாடியுள்ளோம். சில அரச நிறுவனங்கள் நாட்டின் சட்ட ஒழுங்குகளை சீர்குலைக்க முயல்கின்றன. உள்ளூராட்சித் தேர்தலில் வென்றுவிட்டு அரசை கவிழ்க்க இயலாது என்று தெரிந்து கொண்டும் கூட, அரச நிர்வாகத்தைச் சீர் குலைக்க பலவழிகளிலும் முயல்கிறார்கள்.

**கே:-** 2020ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் கட்சி சார்பில் எவர் போட்டியிடவுள்ளார்? கட்சியின் மறுசீரமைப் பின்போது ஏதாவது முன்னேற்றங்கள் ஏற்பட்டனவா?

**ப:-** ஆம், முன்னேற்றங்கள் ஏற்பட்டன. முழுமையான மறுசீரமைப்பு ஒன்று கட்சிக்குள் இடம் பெறவேண்டும் என ஒவ்வொன்றாக இவை நடைபெற வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

## ஆசிரியருக்கான கடிதம்

### “மன்னார் புத்தளமாக மாறியதோ?”

சூரிய காந்தியில் ந. லோகதயாளனின் " கல்விப் புலத்திலும் ஏனிந்தச் சுத்துமாத்து " என்ற கட்டுரையானது மிகுந்த கரிசனையோடு சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். மன்னார் கல்வி வலயத்தின் கீழ் செயற்படும் ஆறு பாடசாலைகள் தற்போது புத்தள மாவட்டத்தில் இயங்குகின்றன. இதன் பிரகாரம் பதிவு மன்னார்! பரீட்சை புத்தளம்! பல்கலை வெட்டுப்புள்ளிக்கு மன்னார்! பாடசாலை நிர்வகிப்பு மன்னாரும் வடமாகாணமும்! வாழ்க்கை புத்தளம்! செலவு வடமாகாணம்! கொஞ்ச நெஞ்சமோ? ஆண்டுக்கு (200) இருநூறு மில்லியன் ரூபா புத்தளத்திற்கு வடமாகாணத்திலிருந்து அனுப்பப்படுகிறது. ஆசிரியர்களின் தொகை 167. இவர்களுக்கான சம்பளம்தான் இருநூறு மில்லியன் ரூபா.

இதுவல்ல பிரச்சனை! மன்னார் மாவட்டத்தில் நிரந்தரமாகக் கல்வி பயின்று உயர்தரப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் ஆறாவது இடத்தில் இடம்பிடித்த விஞ்ஞானப் பிரிவு மாணவிக்கு மருத்துவபீட அனுமதி கிடைக்காமல் போனாதே பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

மன்னாரில் கல்விகற்றதாக உறுதிப்படுத்தி, வெளிமாவட்டம் ஒன்றில் உயர்தரப் பரீட்சையை எழுதி, மன்னாருக்குரிய 'கோட்டா'வை பல்கலை அனுமதியாக மற்றொரு பரீட்சார்த்தி கொண்டதனால், உண்மையாகவே மன்னாரில் கல்விகற்ற மாணவிக்குப் பல்மருத்துவம் கற்கவே வாய்ப்புக் கிடைக்கப்பெற்றது.

மன்னார் என்ன பாவம் செய்த பூமியா? மன்னார் விடயம் தொடர்பாக கவனிக்கப்பட்டாமல் இருப்போமாக இருந்தால் பையப்பைய நாம் தோற்றுக்கொண்டு போகிறோம் என்பதே அதன் தாற்பரியமாகும். மன்னாரப் பிள்ளைகள் வீதியில் அலைய நாம் காரணமாக அமைந்துவிடுதல் ஆகாது!

*கே. எஸ். சிவஞானராஜா*

# நிம்மதியைத் தேடி...



ஒரு ஊரில் ஒரு குருவி இருந்தது. அந்தக் குருவி ஒரு கனவு கண்டது. அந்தக் கனவில் அந்தக் குருவி ஓர் அற்புத உக் கண்டது. அவ்வுலகில் துன்பம் இல்லை. சுமைகள் இல்லை. கவலைகள் இல்லை. மிகவும் சந்தோஷமான உலகம் அது. கனவில் கண்ட இன்ப உலகுக்கு செல்ல வழிதேடிய குருவி சோதிடர் ஒருவரிடம் சென்றது. "ஐயா...சந்தோஷமான ஒரு உலகத்தை நான் கனவில் பார்த்தேன். அங்கு செல்ல எனக்கு ஆசையாக உள்ளது. ஆனால்வழிதான் தெரியவில்லை. அங்கு எப்படிப் போவது என்ற விவரத்தை நீங்கள்தான் சொல்ல வேண்டும்" என்று கேட்டுக்கொண்டது. அதற்கு சோதிடரோ "அந்த உலகத்துக்குப் போக முழு வழியும் எனக்குத் தெரியாது. கொஞ்சத் தூரம் வரையில் தெரியும். அதை வேண்டுமானால் உனக்குச் சொல்லிக்கொடுக்கிறேன். ஆனால் நான் அந்த பாதி வழியைக் கூறுவதற்கு நீ எனக்கு ஏதாவது குருதட்சனை தரவேண்டும்" என்றார். "சரி என்ன வேண்டும்?" என்று குருவி கேட்டது. "எனக்குத் தட்சிணையாக நீ உன் உடம்பில் இருக்கும் இறகுகளில் ஒன்றைப் பிய்த்துத் தரவேண்டும்!" என்று சோதிடர் கேட்டார். சரி...ஒரு இறகுதானே... கொடுத்து விடுவோம் என்று நினைத்த குருவி தன் உடம்பிலிருந்து ஒரு சிறகைப் பியத்து சோதிடரிடம் கொடுத்தது.

அதனைவாங்கிக்கொண்ட சோதிடர் தனக்குத் தெரிந்த வரையில் வழி சொன்னார். வழியைக் கேட்டுக்கொண்டு குருவி பறந்து போயிற்று. அது நீண்ட தூரம் பறந்ததால் களைப்படைந்து ஒரு மரத்தில் தங்கியது. அந்த மரத்தில் ஒரு பாம்பு இருந்தது. அந்தப் பாம்பிடம் இந்தக் குருவி "சந்தோஷமான உலகைத் தேடி நான் பறந்து கொண்டிருக்கிறேன்"என்று தன் கதையைக் கூறியது. அதனைக் கேட்ட பாம்பு மீதி வழி எனக்குத் தெரியும். அதை நான் உனக்குச் சொல்ல வேண்டுமானால் நீ சோதிடருக்குக் கொடுத்தது போல உன் இறகுகளில் ஒன்றை எனக்கும் கொடுக்க வேண்டும்" என்று கூறியது. உடனே குருவி தனது இன்னோர் இறகைப் பிய்த்து பாம்பிடம் கொடுத்து மேற்கொண்டு போக வேண்டிய வழியைக் கேட்டுத் தெரிந்து கொண்டது. மறுபடியும் பறக்க ஆரம்பித்தது.

இப்படி குருவி அங்கங்கேதான் காணும் ஒவ்வொருவரிடமும் கேட்டு வழி தெரிந்து பறந்து கொண்டிருந்தது. வழி சொல்லும் ஒவ்வொருவருக்கும் அதுதான் இறகுகளைப் பிய்த்துக் கொடுடுக்க வேண்டியதாயிற்று.

இறுதியில் ஒரு இடத்துக்கு வந்து சேர்ந்த குருவி அங்கிருந்து நிமிர்ந்து பார்த்தது. சிறிது தூரத்தில் அது கனவில் பார்த்த அந்த சந்தோஷ உலகம் தெரிந்தது. அந்த உலகத்தின் வாசலும் கண்ணில் பட்டது. ஆனால் பாவம் குருவியால் மேற்கொண்டு எழுந்து பறக்கவே முடியவில்லை. ஏனெனில் இப்போது அதன் உடம்பில் சிறகுகளே இல்லை. எல்லாச் சிறகுகளும் பறிபோயிருந்தன. வெறும் உடம்பு மட்டுமே எஞ்சியிருந்தது. இன்னும் கொஞ்சத்தூரம் தான் அந்த உலகை அடைந்து விடலாம். ஆனால் குருவி எவ்வளவு முயன்றும் சிறகற்ற வெறும் உடம்பைக்கொண்டு அதனால் எழுந்து பறக்க முடியவில்லை. மீண்டும் மீண்டும் முயற்சித்தது. கையைக் காலை உதறுவதுபோல் அது படபடவென்று அடித்துக்கொண்டது. கதறிக் கதறித் துடித்து சோர்ந்து போய் தரையில் விழுந்தது. கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரியும் அந்த சந்தோஷமான உலகத்தின் வாசலைப் பார்த்தபடியே உயிரை விட்டது.

**மனிதனும் பேராசைப்பட்டு அளவில்லாத இன்பத்தைத் தேடி அலைகிறான். இன்பத்தை அடைந்தும் விடுகிறான். ஆனால் சந்தோஷத்துக்கு விலையாக நின்மதியைத் தொலைத்து விடுகிறான்.**

## விடுகதைகள்

1. மனிதன் செய்யாத குடை; மழைக்குப் பிடிக்க முடியாத குடை அது என்ன?
2. முட்டையிடும்; அடைகாக்கத் தெரியாது. குடியிருக்கும்; கூடு கட்டத் தெரியாது அது எது?
3. உள்ளே இருந்தால் ஓடித்திரிவான். வெளியே வந்தால் விரைவில மடிவான் அவன் யார்?
4. ஒருமுறை அழைத்தால் ஊரையே கூட்டுவான் அவன் யார்?
5. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது எது?
6. மீன் பிடிக்கத் தெரியாது. ஆனால் அழகாக வலை பின்னும் அது எது?
7. வாசலிலே வண்ணப்பூ. தினம் தினம் மாறும் பூ. தெளிவாகத் தோன்றும் பூ. அது என்ன?
8. ஆயிரம் நூல்ப் பின்னலை அள்ளி அள்ளித் தின்னலாம் அது என்ன?
9. வால் உண்டு உயிரில்லை. அங்கும் இங்கும் பறப்பான் அவன் யார்?
10. ஒளி கொடுக்கும் விளக்கல்ல. சூடு கொடுக்கும் நெருப்புமல்ல அது என்ன?

### விடைகள்



1. காளான்
2. காகம்
3. மீன்
4. குயில்
5. பேனா
6. சிலந்தி
7. கோலம்
8. இடியப்பம்
9. பட்டம்
10. சூரியன்

## சொற்களை ஆக்குவோம்

| | | | |
|---|---|---|---|
| வ | ம | டி | டு |
| க | ப் | லை | வீ |
| த | ண் | மா | பி |
| சி | அ | ம் | ர |

1. --------
2. --------
3. --------
4. --------
5. --------
6. --------



## எங்கள் கோவில் திருவிழா

- கோயில் ஒரு ஊரின் பெருமையைக் காட்டும்.
- கோயில் ஒரு ஊரின் சிறப்புக்கு அணியாக விளங்குகிறது.
- பொதுவாக கோயில் இல்லாத ஊர்களே இல்லை எனலாம்.
- கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி.
- கோயில் திருவிழாக்கள் ஊர் மக்களுக்குச் சந்தோசம் தருவன.
- சில கோயில்திருவிழாக்கள் இருபத்தைந்து நாள்கள் வரை நடைபெறும்.
- சில கோயில் திருவிழாக்கள் 10 அல்லது 15 நாள்கள் வரையும் நடைபெறும்.
- கோயில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.
- திருவிழாக்கள தேர், பின்னர் தீர்த்தமாடலுடன் முடிவடையும்.
- கோயில்களில் கொடியேறி விட்டால் ஊரே பக்தி மயமாகிவிடும்.
- தேர்திருவிழாவன்று அலங்கரிக்கப்பட்ட தேரில் சுவாமி வீதி வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.
- பக்தர்கள் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவர்.
- தூர இடங்களில் இருந்து கோயில் சூழல்கள் நோக்கி பலவகைக் காவடிகள் வந்து சேரும்.
- நடைபவனி பஜனைகளும் இடம்பெறும்.
- அடியார்களின் அங்கப்பிரதட்சணமும் காவடி, கரகாட்டங்களும் இடம்பெறும்.
- இரவு வேளைகளில் கோயில் சூழல் அலங்கார மின் விளக்குகளால் இந்திர உலகம்போல் காட்சிதரும்.'
- திருவிழாக் காலங்களில் மக்கள் மச்சம், மாமிசம் தவிர்த்து மரக்கறி உணவுகள், பால் பழம், தயிர் போன்றவற்றை உணவில் கலந்து மிக பயபக்தியுடன் ஒழுக்க சீலர்களாகவும் மக்கள் வாழ்வர்.



## தகவற் களஞ்சியம்

இலங்கையின் தேசியப் பூங்காக்களில் மிகப் பழமை வாய்ந்ததும் மிகப் பெரியதுமானது வில்பத்து தேசியப் பூங்கா ஆகும். இது அநுராதபுரத்தில் இருந்து மேற்காக 30 கிலோ மீற்றர் தொலைவில் வடமேற்குக் கரையை அண்டி 131,693 ஹெக்டெயர்கள் பரப்பளவில் பரந்து விரிந்து காணப்படுகிறது. உள்ளே மழை நீரைத் தேக்குகின்ற "வில்லுகள்" என அழைக்கப்படும் ஏராளமான குளங்களைக் கொண்டிருப்பதன் காரணமாகவே வில்பத்து என அழைக்கப்படுகிறது. 1905ஆம் ஆண்டு சரணாலயமாக அறிவிக்கப்பட்ட வில்பத்து 1945ஆம் ஆண்டு முதல் தேசியப் பூங்காவாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது.






**புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்**

**விபத்து நடந்தா விபத்தில அடிபட்டவங்க அம்புலன்ஸ்ல ஏறி மருத்துவமனை போறத்துக்குள்ள**



**அவங்க போட்டோ பேஸ்புக், வாட்ஸ்சப்ல ஏறி போயிடுது...**

**புடவை சாயம் போகுமான்னு யோசிக்கிற அளவுக்கு**



**புருசன் மனசு காயம் ஆகுமேன்னு பொண்டாட்டிங்க யோசிக்கிறது இல்லை**

# தெலுங்கு படத்தின் தமிழ் ரீமேக்கில் தனுஷ்



'வேலையில்லா பட்டதாரி2' படத்துக்குப் பிறகு தனுஷ் தற்போது 'வடசென்னை' படத்தில் நடித்து முடித்திருக்கிறார். இந்தப் படம் எதிர்வரும் ஜூன் மாதம் திரைக்கு வரவுள்ளது. அதேபோல் வேற்றுமொழி படங்களிலும் நடித்திருக்கிறார். தனுஷ் தற்போது 'மாரி2', 'எனை நோக்கி பாயும் தோட்டா' படங்களில் நடித்து வருகிறார். இந்த நிலையில், தனுஷ் அடுத்ததாக தெலுங்கில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'நீடி நாடி ஒகே கதா' படத்தின் தமிழ் ரீமேக்கில் நடிக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. இந்தப் படத்தை எஸ். தாணு கைப்பற்றியுள்ளார் என்றும் சொல்லப்படுகிறது.

twitter.com/azam_twitz



எமக்கு செய்த உதவி கடுகளவு இருந்தாலும் அதைத் தக்க சமயத்தில் செய்வது மலையளவு சந்தோஷத்தைத் தரும்!!!

அறிவும், மனமும் பேசி முடிவெடுத்து சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய் எடுப்பதற்குள் எம்மைக் கடந்து சென்றுவிடுகிறார்கள்..
பிச்சைக்காரர்கள்

**புகைப்பிடிப்பதால் வாழ்வில் 5 நிமிடங்கள் குறைகின்றன சிரிப்பதால் வாழ்வில் 10 நிமிடங்கள் கூடுகின்றன.......**



**அப்போ சிரிச்சுக்கிட்டே புகைப் பிடித்தால் சாவு வராதா....?**

twitter

பாசம் கொண்டால்
பிரிவு இல்லை
கோபம் கொண்டால்
உறவு இல்லை
பேராசை கொண்டால்
நிம்மதி இல்லை
விழிகள் இல்லையெனில்
பார்வை இல்லை
வலிகள் இல்லையெனில்
வாழ்க்கை இல்லை
முயற்சி இல்லையெனில்
வெற்றி இல்லை
முயன்ற மனிதர்
தோற்றது இல்லை





twitter.com/TrollCopytwitz

வெறும் கேள்விக்குறிகளாலும், ஆச்சரியக்குறிகளாலும் நிரப்பப்பட்ட புத்தகம் வாழ்க்கை

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உங்கள் செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். தன்னம்பிக்கையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வருமானம் சராசரி அளவில் இருக்கும்.

**இடபம்:** சமயோசிதமாக செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படும். தொழில், வியாபாரத்தில் பணவரவு திருப்தியளிக்கும்.

**மிதுனம்:** கடந்த கால உழைப்பிற்கான பலன் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும் வருமானத்திற்கு குறைவிருக்காது.

**கடகம்:** பெற்றோர் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் சிறு அளவில் போட்டி இருக்கும். இலாபம் சுமாராக இருக்கும்.

**சிங்கம்:** அடுத்தவர் விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். குடும்பத்தேவை ஓரளவு பூர்த்தியாகும். தொழிலில் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** குடும்ப நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற வளர்ச்சி நிலையை கண்டு பிறர் வியப்படைவர். தாராள பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** திட்டமிட்ட செயல்கள் விரைவில் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** உறவினர்கள் உதவி கேட்டு தொல்லை செய்வார்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும்.வருமானம் சீராக இருக்கும்.

**தனுசு:** மதிநுட்பத்துடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரம் செழித்து சமூகத்தில் புதிய அந்தஸ்து கிடைக்கும். சேமிக்கும் விதத்தில் இலாபம் வரும்.

**மகரம்:** செய்த நற்செயலுக்கான நன்மை தேடி வரும். தொழில், வியாபாரம் செழிக்க அதிகம் பணிபுரிவீர்கள். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். ஆரோக்கியம் பலம் பெறும்..

**மீனம்:** எவருக்கும் தேவையற்ற வாக்குறுதி தர வேண்டாம். செயல்களில் நிதானத்தை பின்பற்றவும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்..

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 7 | | 8 | | |
| | 7 | 1 | | | 6 | | 2 | |
| | | | | 5 | | 7 | | |
| | 4 | | | | | | 7 | 3 |
| | 8 | | 2 | 4 | 7 | | 5 | |
| 6 | 5 | 7 | | | | | 8 | |
| | | 6 | | 2 | | | | |
| | 9 | | 7 | | | 3 | 1 | |
| | | 5 | | 3 | 9 | | | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7 | 9 | 8 | 5 | 6 | 2 | 4 | 3 |
| 5 | 4 | 6 | 9 | 2 | 3 | 1 | 8 | 7 |
| 8 | 2 | 3 | 7 | 1 | 4 | 6 | 9 | 5 |
| 2 | 8 | 5 | 6 | 4 | 7 | 9 | 3 | 1 |
| 7 | 3 | 4 | 1 | 9 | 2 | 8 | 5 | 6 |
| 9 | 6 | 1 | 5 | 3 | 8 | 7 | 2 | 4 |
| 6 | 1 | 2 | 4 | 8 | 5 | 3 | 7 | 9 |
| 4 | 9 | 8 | 3 | 7 | 1 | 5 | 6 | 2 |
| 3 | 5 | 7 | 2 | 6 | 9 | 4 | 1 | 8 |

## உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு புதிய அலுவலகம்





யாழ்.பிராந்திய உள்நாட்டு இறைவரித்திணைக்களம் தனது புதிய அலுவலகத்தை இலக்கம்,711 கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள புதிய கட்டடத் தொகுதியில் ஆரம்பித்து வைத்துள்ளது.

புதிய அலுவலகத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜவன் திசா நாயக்க, முதன்மை அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.பிராந்திய உள்நாட்டு இறைவரித்திணைக்களபிரதி ஆணையாளர் திருமதி எஸ்.சர்வேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வரி இறுப்பாளர்கள், கணக்காளர்கள், கணக்காய்வாளர்கள், உத்தியோகத்தர்கள்,வர்த்தகர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கருத்துரைத்த உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் ஜவன் திசா நாயக்க,

"உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய பணிமனையை ஆரம்பித்து வைத்ததில் மகிழ்ச்சி. இதுவரைகாலமும் குறிப்பாக, கடந்த 30 வருட காலமாக அமைவிட ரீதியாக சேவையைப் பெறுகின்ற பொது மக்களும், இறைவரித் திணைக்கள ஊழியர்களும் பல்வேறுபட்ட அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் இந்த விடயங்கள் குறித்து யாழ் பிராந்திய இறைவரித் திணைக்கள ஆணையாளர் பந்துல கத்துகந்தரி மேற்கொண்ட முயற்சியின் பயனாக தற்போது அதற்குரிய தீர்வு கிடைக்கப் பெற்றுள்ளது.




யாழ். பிராந்திய பணிமனைக்குட்பட்ட வரி இறுப்பாளர்களின் ஒத்துழைப்புடன் இந்த பிராந்திய பணிமனையின் வரித் திரட்டுகளை சமர்ப்பித்தல் மற்றும் வரி செலுத்துகையின் பெறுதி என்பவை கொண்டுள்ள விகிதாசாரம் கடந்த 2015/16 நிதியாண்டில் 98 சதவிகிதமாக காணப்படுகிறது. இது மிகப் பெரிய அடைவு. உங்களுடைய தொழில் முயற்சிகள் மேலும் வளம் பெறவேண்டும். அதே போன்று வருகின்ற ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் இருந்து புதிய இறைவரிச் சட்டம் நடைமுறைக்கு வரவிருக்கிறது. இதற்கு ஏதுவாக அனைத்து வசதிகளையும் கொண்டமைந்த ஓர் பணிமனையின் தேவைப்பாடு எமக்கு அவசியமாக இருந்தது. அதற்கான முதற்கட்டம் இப்போது நிறைவேறியுள்ளது. எதிர்காலத்தில் இந்த பிராந்திய பணிமனை சொந்தமான காணியிலே அமையப்பெற்ற கட்டடத்தில் அனைத்து வசதிகளோடும், வாய்ப்புகளோடும் அமைவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன." - என்றார். (ஓ)

# இணைய வங்கிச் சேவையை நவீனப்படுத்தியது செலான் வங்கி

### *சுங்கத் திணைக்களத்துக்குரிய கொடுப்பனவு கட்டமைப்பு அறிமுகம்*

சிறந்த டிஜிற்றல் வங்கியியல் தீர்வுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி, தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் செலான் வங்கி இணைய வங்கிச் சேவை வசதிகளை மேம்படுத்தியுள்ளது.

தனிநபர் மற்றும் கூட்டாண்மை (Retail & Corporate) வாடிக்கையாளர்கள் இலங்கை சுங்கத்துடன் இலகுவான முறையில் இணையத்தினூடாக கொடுப்பனவுச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குரிய கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இதனூடாக பாரம்பரிய கொடுப்பனவு நடைமுறைமையை வங்கி மாற்றியமைத்துள்ளதுடன், தனது வாடிக்கையாளர்களுக்கு தன்னியக்கமான, உடனடியாக பதிவேற்றம் செய்யப்படும் இணையகொடுப்பனவுத் தீர்வு கிடைக்கப்பெற்றுள்ளது.

புதிய கட்டமைப்பினூடாக இலங்கை சுங்கத்துக்கு செலுத்தப்படும் கட்டணங்களுக்கு கையாளல் கட்டணமாக ரூபாய் 50 மட்டுமே அறவிடப்படுகிறது. பாரம்பரியமாக அறவிடப்படுகின்ற காசாளர் ஆணைக் கட்டணமான ரூபாய் 250 இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

'லங்கா கிளியர்' (LankaClear) இன் 'லங்கா பே' (LankaPay) இணையக் கொடுப்பனவு கட்டமைப்பினூடாக இது வலுவூட்டப்படுவதுடன், செலான் வங்கியின் இணைய வங்கிச் சேவையூ



டாக கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் அது இலங்கை சுங்கத்தின் வங்கிக் கணக்கில் 'லங்கா பே' இன் 'Common Electronic Fund Transfer Switch (CEFTS)' கட்டமைப்பினூடாக நேரடியாக வைப்புச் செய்யப்படுகிறது. இது செலவு குறைந்த உயர் பாதுகாப்பான இலத்திரனியல் கொடுப்பனவு வலையமைப்பாக விளங்குவதுடன், ஒப்பற்ற வங்கி அனுபவத்தை தனது வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான முறையில் வழங்குவதற்குரிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள செலான் வங்கியின் செயற்பாடுகளுக்கான பதில் பொது முகாமையாளர் மலிக் விக்ரமநாயக்க,

"எமது தனிநபர் மற்றும் கூட்டாண்மை வாடிக்கையாளர்கள், கிளை நிலையம் ஒன்றுக்குச் செல்லாமல், சௌகரியமான முறையில் தமது கொடுக்கல் வாங்கல்களை தாமே மேற்கொள்வதை வலுவூட்டும் வகையிலான தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்யும் திட்டத்தின் ஒரு அங்கமாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது. இந்தக் கொடுப்பனவுத் தீர்வை அறிமுகம் செய்வதற்கு முன்பாக, தனியார் வங்கிகளில் கணக்கைப் பேணியிருந்த ஏற்றுமதியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் சிரமமான படிமுறையையே பின்பற்ற வேண்டியிருந்தது. தமது வங்கியிலிருந்து காசாளர் கட்டளையை பெற்று, அதனை இரு அரசவங்கிகளுக்குகொண்டு சென்று மற்றுமொரு கொடுப்பனவு ஆணையை இலங்கை சுங்கத்துக்காக பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டது.

செலான் வங்கி நவீன பாதுகாப்பு மெருகேற்றங்களை பதிவு செய்துள்ளது. அதனூடாக மேற்கொள்ளப்படும் சகல டிஜிற்றல் கொடுக்கல் வாங்கல்களிலும் உயர் பாதுகாப்பு மற்றும் தங்கியிருக்கக்கூடிய தன்மை போன்றன உறுதி செய்யப்படுகின்றன. டிஜிற்றல் மயப்படுத்தல் செயன்முறைக்கமைய நவீன தொழில்நுட்பங்களை செலான் வங்கி அறிமுகம் செய்து வருவதுடன், அதனூடாக பாரம்பரிய கொடுக்கல் வாங்கல் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி வங்கியியல் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது." - என்றார். (ஓ)

# ஆங்கில பாட ஆசிரியர்களின் திறனை மேம்படுத்தும் செயற்றிட்டம் ஆரம்பம்

### 'பிரிட்டிஸ் கவுன்சில்' முன்னெடுத்துள்ளது







நாட்டில் ஆங்கில மொழிக் கல்வியின் தரத்தை மேம்படுத்தும் விதமாக மற்றுமொரு புதிய செயற்றிட்டத்தை 'பிரிட்டிஸ் கவுன்சில்' (British council) அறிமுகம் செய்துள்ளது.

உயர்கல்வியைத் தொடர்வதிலும், தனியார் துறையிலும் பொதுவாக பயன்படுத்தப்படுகின்ற மொழியான ஆங்கிலத்தைக் கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துவதனூடாக, சிறந்த கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களை மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குரிய வழியை ஏற்படுத்திக் கொடுப்பதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கமாக காணப்படுகிறது.

ஆங்கில மொழிக்கான ஆசிரியர் கல்வித் திட்டம் (TEE) என்பது, இலங்கையில் 'பிரிட்டிஸ் கவுன்சில்' முன்னெடுக்கும் ஆங்கில ஆசிரியர் கற்பித்தலில் மேம்பாட்டை ஏற்படுத்தும் திட்டத்துக்கு பக்க பலமாக அமைந்திருக்கிறது. இவை நிபுணத்துவ மேம்பாடு மற்றும் ஆளுமை விருத்தி ஆகியவற்றை ஆசிரியர்களுக்குப் பெற்றுக்கொடுக்கும் வகையில் அமைந்துள்ளன. இவ்விரு திட்டங்களும் 'பிரிட்டிஸ் கவுன்சில்' ன்ட்ராண்ஸ்போம்' (TRANSFORM ) கல்வி நிகழ்ச்சி திட்டத்தின் கீழாக அமைவு பெற்றுள்ளன. இந்த ஆங்கில மொழிக்கான ஆசிரியர் கல்வித் திட்டமானது, நாட்டிலுள்ள ஆங்கில மொழி ஆசிரியர்கள் மற்றும் பயிலும் நிலையிலுள்ள ஆசிரியர்களை கருத்தில் கொண்டு 14 மாத கால வரையறையைக் கொண்ட கற்கைநெறியாக முன்னெடுக்கப்படுகிறது. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந்த கற்கை நெறி பூர்த்தியாகும். முதல் கட்டமாக கண்டி, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள தேசிய கல்வியியல் கல்லூரிகளில் இணைந்துள்ள ஆயிரம் பயில் நிலையிலுள்ள ஆசிரியர்கள் இந்த கற்கைநெறிக்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்காக 'பிரிட்டிஸ் கவுன்சில்' சார்ந்த ஆறு பயிற்றுவிப்பாளர்கள் கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து அவர்கள் மேற்படி நான்கு கல்லூரிகளிலும் பணி புரிவதற்கான நியமனத்தைப் பெற்றுக்கொண்டுள்ளனர். கடந்த பெப்ரவரி மாதத்தின் இரண்டாம் வாரத்தில் இந்தத் திட்டம் ஆரம்பமாகியிருந்தது. கல்லூரியின் நிர்வாகத்துடன் இணைந்து இவர்கள் கருமமாற்றுவதுடன், வழமையாகப் பின்பற்றப்படுகின்ற பாடவிதானங்களைப் பின்தொடர்கின்றனர்.

"ஆங்கில மொழி பயிலுநர் ஆசிரியர்களுக்கு 120 மணித்தியாலங்களை உடைய ஆங்கிலமொழி மேம்பாடு மற்றும் கற்பித்தல் முறை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதனூடாக ஆசிரியர்களின் ஆங்கில அறிவு மட்டம் 'A2' இலிருந்து 'B1' இற்கு உயர்வடையும். ஆசிரியர்களின் கற்பித்தல் ஆளுமைகளை, தொடர்பாடலுக்கு அவசியமான மொழியாற்றலைப் பெற்றுக்கொடுக்க சிறந்த அடித்தளத்தை ஏற்படுத்திக்கொடுக்கும்.

ஆங்கில மொழிக்கான ஆசிரியர் கல்வித் திட்டத்துக்கு நிதிகளை வழங்கும் புகழ்பெற்ற கூட்டாண்மைத் துறை முன்னோடியான ரிக்கி மென்டிஸ், பன்னாடுகளுடன் இணைப்புப் பெற்றுள்ள இலங்கைக்கான பிரிட்டிஸ் கவுன்சிலின் நோக்கம் தொடர்பில் விளக்கமளிக்கையில்,

"தனியார் துறையின் வியாபாரக் கவனிப்பு என்பது பன்னாடுகளை நோக்கியதாகஅமைந்துள்ளது. ஆங்கிலமொழியில் சிறப்பாக பணியாற்றக் கூடியதாக இருப்பது தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்துள்ளது. புதிய தலைமுறை ஊழியர்கள் ஆங்கில மொழிக் கல்வியை முறையாகத் தொடர்வதற்கு உதவிசெய்ய வேண்டிய தேவை உள்ளதை நான் உணர்ந்து கொண்டேன். இந்தத் திட்டத்தை முன்னெடுக்க பிரிட்டிஸ் கவுன்சிலைத் தவிர வேறொரு நிறுவனத்தையும் பொருத்தமானதாகக் குறிப்பிட முடியாது.

ஆங்கில மொழியாற்றல் படைத்த புதிய தலைமுறையினரை உருவாக்குவதனூடாக, எதிர்காலச் சந்ததியினருக்கு நல்ல கல்வியறிவின் ஆற்றலை இவர்களின் ஊடே வழங்க முடியும். இதனாலேயே இந்தத் திட்டத்துக்குரிய நிதி மூலத்தை வழங்கத் தீர்மானித்தேன்." - என்றார்.

இந்தச் செயற்றிட்டம் குறித்து பிரிட்டிஸ் கவுன்சிலின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜில் கல்டிகொட் கருத்துத் தெரிவிக்கையில்,

"21ஆம் நூற்றாண்டில் ஆங்கிலம் முக்கியமான மொழியாக அமைந்துள்ளது. பன்னாட்டுப் பொருளாதாரத்தில் பங்கேற்க எதிர்பார்க்கும் ஒவ்வொரு நாடும், தனது ஊழியர்களை ஆங்கில மொழியில் பணியாற்றுவதற்கு பயிற்றுவிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. இதை இலங்கை அரசு உணர்ந்து கொண்டுள்ளது. அதன் அடிப்படையிலேயே நாம் இந்தத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறோம். நிலைபேறான மேம்பாடுகளை மேற்கொள்வதற்கு உதவிகளை வழங்குகிறோம். அந்த மறுசீரமைப்பு செயற்பாடுகளில் மேம்படுத்தப்பட்ட ஆங்கில மொழியின் கற்பித்தல் மற்றும் பயிலல் என்பவை அடங்கியுள்ளன.

'ரிக்கி மென்டிஸ்' போன்ற ஆர்வலர்கள் இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை கவனத்தில்கொண்டு, ஆசிரியர்களாக கடமைகளை பொறுப்பேற்கவுள்ளவர்கள் மீது நம்பிக்கை கொண்டு, முதலீடுகளை மேற்கொள்ள வந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இரு வழிமுறைகளை நாம் பின்பற்றுகிறோம். இன்றைய கால ஆசிரியர்களில், இன்றும் நாளையும் முதலீடுகளை மேற்கொள்வதனூடாக நீண்ட கால அடிப்படையில் இந்த கட்டமைப்பை மறுசீரமைப்பு செய்ய முடியும். இந்த நடவடிக்கைகளை ஏனையவர்களும் முன்னெடுத்து செல்வர் என்ற நம்பிக்கையைக் கொண்டுள்ளேன்." - என்றார். (ஓ)

## அளம்பில்...

போராடி வீரச்சாவடைந்தவர்களின் உடல்கள் புதைக்கப்பட்ட அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த காணியில் ஒரு பகுதியை நிரந்தரமாக இராணுவம் கையகப்படுத்த முயற்சி களை மேற்கொண்டுள்ளது. காணியை இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்கு கிராம அலுவலர் ஊடாக அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது என்று தெரிவிக்கும் மக்கள் அதை அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்தனர். துயிலும் இல்லத்தில் தமது பிள்ளைகள், மற்றும் உறவுகளை புதைத்த மக்கள் 600க்கும் மேற்பட்டவர்களின் கையொப்பங்கள் சேகரித்துத் தமது கோரிக்கை அடங்கிய மனுவை மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தனர்.

மாவீரர் துயிலும் இல்லக் காணி ஒன்பது ஏக்கரில் ஒரு ஏக்கர் காணியை ஒருவர் பெற்று அபிவிருத்தி பணிகள் மேற்கொண்டு வருகிறார்கள். மிகுதி காணியில் இராணுவம் பப்பாசிச் செய்கை மேற்கொள்வதோடு விவசாயம் செய்கிறார்கள். எமது உறவுகளுக்கு மேல் நின்று கிரிக்கட் விளையாடுகிறார் கள். பகுதியில் கன்ரின் நடத்துகிறார்கள் இவற்றை எல்லாம் நிறுத்தி எமது உறவுகளுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்த காணியை மீட்டுத்தாருங்கள் என்று அவர்கள் கோரினர்

கடந்த வருடம் அனைத்து இடங்களிலும் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்டபோது நாம் வீதியில் எமது பிள்ளைகளுக்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினோம். இந்தமுறை மாவீரர் நாளுக்கு முன்னதாக துயிலும் இல்லக் காணியை மீட்டு உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த ஆவன செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பில் உரியவர்களிடம் தெரிவிக்கப்படும் என்று மாவட்டச் செயலர் தெரிவித்தார். இந்த கடிதத்தின் மனுவின் பிரதிகள் அரச தலைவர், மனித உரிமைகள் பேரவை, ஜெனிவா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், உள்ளிட்டவர்களுக்கு அனுப்பியுள்ளோம் என்றும் மக்கள் தெரிவித்தனர். (ற-ரி2)

## தெகிவளை...

முன்னணி நிறுத்திய நாவலகே ஸ்ரான்லி டயஸ் வெற்றி பெற்றார். அவருக்கு 23 வாக்குகள் கிடைத்தன.

ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்திய முதல்வர் வேட்பாளர் சுனேத்ரா ரணசிங்கவுக்கு 21 வாக்குகளே கிடைத்தன.

பிரதி முதல்வர் பதவிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கீர்த்தி உடவத்தை 25 வாக்குகளைப் பெற்று தெரிவானார். மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் நால்வரும் வாக்களிக்கவில்லை.

அதேவேளை, மகிந்த ராஜபக்சவின் சொந்த இடமான தங்காலை நகர சபையில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தது. இங்கு நடத்தப்பட்ட முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் பதவிகளுக்கான வாக்கெடுப்பில், ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்திய வேட்பாளர்களே வெற்றி பெற்றனர்.

காலி, நீர்கொழும்பு மாநகரசபைகளில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றிய போதும், இந்த இரு மாநகரசபைகளின் முதல்வர் பதவிக்கான தேர்தல்களில் மகிந்த ராஜபக்சவின் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியிடம், ஐக்கிய தேசியக் கட்சி கடந்த வெள்ளிக்கிழமை தோல்வியைச் சந்தித்தது. (ற-5)

## வாழ்வாதார...

கள் உடனடியாக அகற்றப்படவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். தவறினால் சிறுபோகத்தைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டினர்.

தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுவை புதுக்குடியிருப்பு பிரதேச செயலருக்குக் கையளித்தனர். அதை திட்டமிடல் பணிப்பாளர் பெற்றுக் கொண்டார். முல்லைத்தீவு மாவட்டச் செயலருக்கும் மனுக் கையளிக்கப்பட்டது. இது தொடர்பில் இராணுவத்துடன் கலந்துரையாடப்படும் என்று மாவட்ட செயலர் தெரிவித்தார். இன்று இடம்பெறும் வடக்கு மாகாண சபை அமர்வில் இது தொடர்பில் பிரேரணை கொண்டுவரவுள்ளேன் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்தார்.

**பின்னணி**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்டது உடையார் கட்டுக் கிராமம். அங்குள்ள உடையார் கட்டுக்குளத்தை நம்பி அங்குள்ள 2 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யப்படுகின்றது. கால போக நெற்பயிர்ச் செய்கை தவிந்த ஏனைய பயிர்ச் செய்கை களுக்கு அந்தக் குளமே விவசாயிகளின் நம்பிக்கையாக இருந்தது.

போர்க்காலத்தின் பின்னர் உடையார்கட்டுப் பிரதேசத்தில் நிலை கொண்ட படையினர் படிப்படியாகத் தங்களுடைய இருப்பைப் பலப்படுத்திக் கொண்டனர். பண்ணை ஒற்றை அமைத்து பயிர்ச் செய்கையிலும் ஈடுபட்டனர். அந்தப் பண்ணைக்கு உடையார் கட்டுக் குளத்தில் இருந்து நீரைப் பெற்றனர். அவர்கள் 4 அங்குலப் பம் கொண்ட மூன்று இயந்திரங்களை அந்தக் குளத்தில் பூட்டி தங்களுடைய பயிர்களுக்கு காலை மாலை என்று நீர் இறைக்கின்றனர். குளத்து நீர் அதனால் வெகுவாக வற்றுகிறது. விவசாயிகள் தங்களுடைய பயிர்களுக்கு நீர் இன்றி தவிக்கின்றனர்.

இந்தப் பிரச்சினை அண்மையில் இடம் பெற்ற புதுக்குடியிருப்பு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பேசப்பட்டது. வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவனேசன் குளத்து நீர் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்த முடியாது, குளத்தில் இருந்து நீர் இறைக்கும் இயந்திரம் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். நீர் இறைக்கும் இயந்திரம் கொண்டு குளத்தில் உள்ள நீரைப் படையினர் இறைப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று இணைத்தலைவரால் பணிக்கப்பட்டது. எனினும் அவை அகற்றப்படவில்லை. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கோரியே விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் உடையார் கட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. நேற்று இரண்டாவது முறையாகவும் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ற-21)

## கண்டாவளை...

கிளிநொச்சி, மார்ச் 27

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலர் நாகேஸ்வரன் நேற்று மாரடைப்பால் உயிரிழந்தார்.

பிரதேச செயலகத்தில் நேற்றுக் கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த செயலர் திடீரென மயக்கமடைந்தார். அவர் உடனடியாக தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நாகேஸ்வரன் சில மாதங்களுக்கு முன்னர் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்று கண்டாவளை பிரதேசத்தில் கடமையேற்றிருந்தார். (ற-21,35)

## காணிகளை...

இறைவழிபாடு, ஆத்மசாந்திப் பிரார்த்தனை என நேற்றுமுன்தினம் ஆரம்பமான போராட்டம் 5 நாள்கள் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது. முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், காணிகளைப் பறிகொடுத்த மக்கள் எனப் பலர் இந்த ஆன்மிகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள நிலங்களை விடுவிக்கக் கோரியும், காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தக் கோரியும் இந்த ஆன்மீகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இந்தப் போராட்டம் நீதியானது, நியாயமானது. எமது சிந்தனைகள் உறுதியானவை. அவற்றை தளரவிடாது எமது குறிக்கோளை அடைவதற்கே இந்த ஆன்மிகப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள், இறை வழிபாடுகள், தியானங்கள் போன்றவற்றை உள்ளடக்கி மனதை ஒரு நிலைப்படுத்திப் போராடுகிறாம். எமது போராட்டம் எந்தத் தீர்வுகளும் இன்றி முடிவடைந்து விடக் கூடாது எமது அடுத்த சந்ததி எமது மண்ணில் வாழ வேண்டும். இறுதிநாளாக எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்தப் போராட்டத்தில் இன, மத பேதமின்றி அனைவரும் இணைந்து கொள்ளுங்கள். அனைவரும் ஒன்று திரண்டு பிராத்தனையில் ஈடுபடுவோம், எமது மனங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுவோம்." என்று தெரிவித்தார் கேப்பாபிலவு நிலமீட்புப் போராட்டத்தை முன்னின்று செயற்படுத்தும் ஆறுமுகம் வேலாயுதம். (ற-21)

## கடற்கரையை...

நடவடிக்கையில் ஈடுபடும் சுமார் 4 ஆயிரம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை முடக்கும் வகையில் செயற்படுகிறார் என்று அந்தப் பகுதி மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்ற னர்.

முல்லைத்தீவு நக ரில் இருந்து 6 கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது தியோகுநகர். அங்கு சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடற்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். கரைவலை வளைப்பது, வீச்சு, மட்டி, போன்ற தொழில் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

கரைவலை வளைப்பதற்கு கரையில் இருந்து ஏராளமான நிலப்பரப்பு வேண்டும். தனிநபர் ஒருவரை கடற்கடையை அண்டி 4 முதல் 5 கிலோமீற்றர் நீளத்துக்கு கம்பி வலைகளை அடித்து மீனவர்களுக்கு இடையூறு ஏற்படுத்துகின்றார். கடற்கரையை சுற்றி கம்பிவலையால் வேலி அடைத்துள்ள அவர் தனது எல்லைக்குட்டப்பட பகுதியில் கனடா நாட்டுக் கொடியையும் பறக்கவிட்டுள்ளார். அங்கு கரைவலைத் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய வாழ்வாதாரமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் கடந்த பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனால் பேசப்பட்டது. அது தொடர்பில் அதிகாரிகளுடன் ரவிகரன் கடுமையாக முரண்பட்டிருந்தார். தற்போது அந்தக் கடற்கரைக்கு செல்ல மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு இறுக்கமாக்கப்பட்டுள்ளது. நேற்று மீனவர்களுக்கு கடற்கரைக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. குழப்பமடைந்த மீனவர்கள் அங்கு முரண்பாட்டில் ஈடுபட்டனர். இது தொடர்பில் ரவிகரனுக்கு தெரியப்படுத்தப்பட்டது. அங்கு சென்ற ரவிகரன் மீனவர்களுடன் கலந்துரையாடினார். இந்த விடயத்தில் தன்னாலான அழுத்தங்களைப் பிரயோகித்து தீர்வைப் பெற்றுத்தருவதாகத் தெரிவித்தார்.



மன்னாரில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள்

சம்பவம் தொடர்பில் தியோகு நகர் கடற்தொழிலாளர் சங்கத்தினரைத் தொடர்பு கொண்டோம்.

"கரைவலை வளைப்பதற்கு இடமில்லாது செய்யப்பட்டுள்ளது. மீனவர்களுடைய வாழ்வாதாரம் அந்தரத்தில் உள்ளது. தற்போது வீச்சுத் தொழிலுக்கு, மட்டித் தொழிலுக்கு மீனவர்கள் செல்லும் போது மாடு சாய்ப்பது போன்று 4 மோட்டார் சைக்கிள்களில் அடித்துக் கலைக்கின்றனர் அந்த நபரின் அடியாள்கள். நாம் கடற்கரைக்குச் செல்லமுடியாதவாறு எம்மைக் கட்டுப்படுத்தியுள்ளனர். அதிகாரிகள் அரசியல் தலைவர்கள் இது தொடர்பில் உரிய நடவடிக்கை உடன் முன்னெடுக்க வேண்டும்." என்று அவர்கள் தெரிவித்தனர். (ற-21)

## அகழப்பட்ட...

மன்னார், மார்ச் 27

மன்னார் லங்கா சதொச விற்பனை நிலைய வளாகத்தில் இருந்து அகழப்பட்ட மண்ணில் மனித எலும்பு எச்சங்கள் என்று சந்தேகிக்கப்படும் எலும்பு எச்சங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

மன்னார் நகர நுழைவாயில் பகுதியில் இயங்கிய லங்கா சதொச விற்பனை நிலையம் முழுமையாக உடைக்கப்பட்டு அங்கு புதிய கட்டடம் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அங்கு அகழப்படும் மண் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. எமில் நகரைச் சேர்ந்த ஒருவரும் அந்த மண்ணைக் கொள்வனவு செய்திருந்தார். அதை தனது வீட்டுக்குக் கொண்டு சென்று கொட்டியபோது அதில் சந்தேகத்துக்கு இடமான எலும்பு எச்சங்கள் வெளிவந்துள்ளன. நேற்றுமுன்தினம் அது தொடர்பில் மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்றுத் தடயவியல் நிபுணர்கள் அந்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். மன்னார் நீதிவான் மற்றும் சிறப்பு சட்ட வைத்திய அதிகாரி ஆகியோரின் விசாரணைக்காக அந்த இடத்துக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (ற-56)

## பொலிஸ்...

மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினரான கே.கே. மஸ்தான் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது. அதிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. காணியை விடுவிக்க வேண்டும் என்று வவுனியா வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டபோதும் அந்தக் காணியைப் பொலிஸாருக்கு வழங்க வேண்டும் என்று மாவட்ட செயலர் பணித்துள்ளார் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

அந்தக் காணிக்குப் பதிலாக வேறு காணி பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளபோதும் பொலிஸார் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் காணியை விளையாட்டுத் திடலாகப் பயன்படுத்துகின்றனர் என்று கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் இது தொடர்பில் விளக்கம் கோரப்பட்டது போது கனகராயன்குளம் முல்லைத்தீவுப் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் கீழ் உள்ளதால் தான் முடிவு எடுக்க முடியாது என்று தெரிவித்தார். அதையடுத்துக் காணியை கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு வழங்க வேண்டும் என்று தீர்மான மானிக் கப்பட்டது. (ற-ரி4,110)



## பிரதி...

செய்யப்பட்டார். இவர் ரெலோ கட்சியைச் சேர்ந்தவர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மேயரை தெரிவு செய்வதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நேற்று சபை மண்டபத்தில் கூடியது. மேயர் பதவிக்கான போட்டி முடிந்ததும் பிரதி மேயரைத் தெரிவு செய்வதற்கான கோரிக்கை விடுக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் துரைராசா ஈசனின் பெயர் முன்மொழியப்பட்டது. அவரை எதிர்த்து வேறு கட்சிகள் எவையும் போட்டியாளரை நிறுத்தாதனால் ஈசன் போட்டியின்றி பிரதி மேயராக தெரிவு செய்யப்பட்டார். (உ-8)

## கட்டுப்படாத...

லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தமது வாக்குகளை ஏனைய உறுப்பினர்களுக்குப் பகிரங்கமாகக் காட்டிவிட்டே வாக்களிக்கவேண்டும் என்று கட்சி விதித்த நிபந்தனையை யாழ். மாநகர சபையில் ஒரேயொரு உறுப்பினரைத் தவிர வேறு எவரும் பின்பற்றவில்லை. மேயராகத் தெரிந்தெடுக்கப்பட்ட இ.ஆர்னோல்ட்டும் அதில் அடக்கம்.

கூட்டமைப்பு சார்பாக வாக்களித்த 16 உறுப்பினர்களில் தர்சானந்தன் மட்டுமே தாம் யாருக்கு வாக்களித்தார் என்பதைச் சபையில் இருந்த அனைவருக்கும் பகிரங்கமாகத் தூக்கிக் காட்டினார்.

இதற்கு எதிர்த் தரப்பிலிருந்து கண்டனம் எழுப்பப்பட்டது. இவ்வாறு வாக்கைப் பகிரங்கமாகக் காட்டுவது ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் செயல் என்று தெரிவிக்கப்பட்டது.

தர்சானந்தைத் தவிர கூட்டமைப்பின் எந்தவொரு உறுப்பினரும் தாம் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதைப் பகிரங்கமாகக் காட்டவில்லை. (உ-8)

## தடுக்கி...

கூட்டமைப்பு உறுப்பினர் சிறில் தடுமாறி விழ முற்பட்டார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய மேயரை. தெரிவு செய்வதற்காக யாழ்ப்பாண மாநகர சபைக்கு தெரிவு செய்யப்பட வேட்பாளர்கள் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் நேற்று மாநகர சபை மண்டபத்தில் கூடியது.

அமர்வில் புதிய மேயரை தெரிவு செய்ய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. உறுப்பினர்கள் தமது வாக்கை அளிக்க ஒவ்வொருவராகச் சென்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சிறில் வாக்களிக்க இருக்கையை விட்டு எழுந்தார். வாக்குப் பெட்டிக்கு செல்ல முற்பட்டபோது நிலை தடுமாறி விழ முற்பட்டார். அருகில் இருந்த மேசையை பற்றிப் பிடித்து கீழே விழாமல் பாதுகாப்பாக வாக்களிக்கச் சென்றார். (ற-8)

## உத்தரவை...

கட்ட வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னதாக கட்சிகள் தமது தலைமையுடன் பேசுவதற்கு நேரம் வழங்கப்பட்டது. அந்த நேரத்துக்குள் உறுப்பினர்கள் யாரும் சபா மண்டபத்துக்கு வெளியே செல்லக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அதையும் மீறி முன்னாள் மேயர் யோகேஸ்வரி பற்குணராசா சபா மண்டபத்தைவிட்டு வெளியேறிவிட்டுப் பின்னர் திரும்பி வந்தார். எனினும் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மேயரை தெரிவு செய்வதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நேற்று சபா மண்டபத்தில் கூடினர். ஆரம்பத்திலேயே மேயர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்புச் சார்பாகப் போட்டியிட்ட இ.ஆர்னோல்ட் 18 வாக்குகளைப் பெற்று முன்னிலையில் இருந்ததுடன் தமிழ் தேசிய மக்கள் முன்னனி சார்பாக போட்டியிட்ட மணிவண்ணன் 13 வாக்குகளையு ஈ.பி.டி.பி சார்பாக ரெமிடியஸ் 13 வாக்குகளையும் பெற்றனர். இதனால் சட்ட ஒழுங்குகளின் பிரகாரம் ஒரே வாக்குகளைப் பெற்ற இருவரில் ஒருவரைக் குலுக்கல் முறையில் நீக்கி, கூடுதல் வாக்குகளைப் பெற்ற நபருக்கும் மற்றையவருக்கும் இடையில் மீண்டும் வாக்கெடுப்பு நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி சீட்டுக் குலுக்கலில் மணிவண்ணன் தோல்வி அடைந்தார்.

இதனால் ரெமிடியஸ் மற்றும் ஆனோல்ட் போட்டியில் களமிறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. உடனே ஈபிடிபியைச் சேர்ந்த வேட்பாளர்கள் தாம் கட்சித் தலைமையுடன் கலந்துரையாட வேண்டியுள்ளதால் ஒரு மணிநேரம் இடைவெளி தருமாறு கோரினர். அவர்களின் கோரிக்கையை ஆரம்பத்தில் நிராகரித்த உள்ளூராட்சி ஆணையாளர் பின்னர் கூட்டமைப்பு தவிர்ந்த ஏனையவர்கள் அனைவரும் நேரம் கேட்டமையினால் பத்து நிமிடங்கள் மட்டும் தரப்படும் என்று அறிவித்தார். அத்துடன் சபையில் இருக்கின்ற உறுப்பினர்கள் எவரும் அவையை விட்டு வெளியே செல்ல முடியாது அதற்கு அனுமதியும் இல்லை என நிபந்தனை விதித்தார்.

சபையில் இடை நேரம் அறிவிக்கப்பட்டு உறுப்பினர்கள் கட்சி ரீதியாக தமக்குள் கலந்துரையாடினர். இதன்போது நாசூக்காக முன்னாள் மேயர் யோகேஸ்வரி கையடக்க தொலைபேசியுடன் சபையிலிருந்து வெளியேறி சிறிது நேரத்தில் பூனையை போல சத்தமில்லாது உள்ளே வந்து அமர்ந்தார். அதன் பின்னர் சபை கூடியதும் ரெமிடியஸ் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவிக்கப்பட்டது. (உ-8)

## மீளப்...

பட்ட மணிவண்ணன் மீண்டும் ஆர்னோல்ட் உடன் போட்டியிட அனுமதிக்க வேண்டும் என்று விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மேயரை தெரிவு செய்வதற்காக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நேற்று சபையின் மண்டபத்தில் கூடினர்.

புதிய மேயராகத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்ட இ.ஆர்னோல்ட் 18 வாக்குகளையும், தமிழ் தேசிய மக்கள் முன்னனி சார்பாக போட்டியிட்ட மணிவண்ணன் 13 வாக்குகளையும், ஈ.பி.டி.பி சார்பாக ரெமிடியஸ் 13 வாக்குகளையும் பெற்றனர். சட்ட ஒழுங்குகளின் பிரகாரம் ஒரே வாக்குகளைப் பெற்ற இருவரில் ஒருவரை நீக்கி கூடுதல் வாக்குகளைப் பெற்ற நபருடன் இணைத்து மீண்டும் வாக்கெடுப்பு நடத்தத்தத் தீர்மானிக்கப்பட்டது. சம வாக்கு பெற்ற ரெமிடியஸ் மற்றும் மணிவண்ணன் ஆகியோரது பெயர்கள் எழுதப்பட்டு சீட்டு குலுக்கப்பட்டது. அதில் மணிவண்ணன் தோற்கடிக்கப்பட்டார். ஆனோல்ட்டுக்கும், ரெமிடியஸ்க்கும் இடையே போட்டி நடத்தத் தீர்மானிக்கப்பட்டு சபையில் அறிவிக்கப்பட்டது. ரெமிடியஸ் மேயர் பதவிக்கான போட்டியில் இருந்து விலகுகின்றேன் என்று திடீர் என அறிவித்தார்.

அப்போது முன்னணி வேட்பாளர் மணிவண்ணன் தமக்கும் ஆர்னோல்ட்டுக்கும் இடையில் போட்டியை நடத்த வேண்டும் என்று கோரினார். நீங்கள் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டவர். இவர்களுக்கு இடையில் இடம்பெற்ற போட்டியில் ரெமிடியஸ் விலகியமை அவரது உரிமை. மீண்டும் போட்டி நடத்த வேண்டிய தேவை இல்லை என வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மணிவண்ணனின் கோரிக்கையை நிராகரித்தார். (ற-8)

## சாத்தியமற்றவ...

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் தெரிவு ஏனையவர்களுக்கு எடுத்துக் காட்டாக அமைய அமைதியாக செயற்பட்டோம். சாத்தியப்படாத விடயங்களுக்கு தேவையில்லாமல் சண்டை பிடிக்கக் கூடாது என்பதாலேயே நான் போட்டியில் இருந்து விலகினேன்.

இவ்வாறு ஈபிடிபி சார்பாக மேயர் பதவிக்கு போட்டியிட்ட சட்டத்தரணி ரெமிடியஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் பதவிக்கான போட்டிகள் இடம்பெற்று சபை ஒத்திவைக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் தெரிவு ஏனையவர்களுக்கு எடுத்துக் காட்டாக அமையும் என நம்புகின்றேன். நானோ எனது கட்சியோ சாத்தியப்படாத ஒரு விடயத்துக்காகச் சண்டைபிடிப்பதில்லை. எமது கட்சிக்கு எமது உறுப்பினர்களை விட வெளியேயும் ஆதரவு உள்ளது என்பதை காட்டவே போட்டிட்டோம். எமக்கான வாய்ப்புக்கள் சாத்தியப்படவில்லை. அதனால் போட்டியிலிருந்து விலகினேன்.

மக்கள் எமக்கு அளித்த வாக்குக்கும் நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிக்கும் அமைய எமது சேவைகள் தொடரும். நாம் மாநகர சபையில் வீண் குழப்பங்களைச் செய்யமாட்டோம். மக்களுக்கான சேவையை அனைவரும் இணைந்து செய்வோம்-என்றார். (ற-8)

## விஜயகாந்தின்...

தண்டனை விதிக்கப்பட்டுள்ள விஜயகாந்த் நேற்று நடந்த மாநகரசபையின் அமர்வில் கலந்துகொள்ள சிறைச் சாலை உயர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும் அது நிராகரிக்கப்பட்டது.

முற்போக்கு தமிழ் தேசியக் கட்சியின் செயலாளர் சுந்தர்சிங் விஜயகாந் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான தேர்தலில் வெற்றியீட்டிருந்தார். யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் தேர்வுக்காக நேற்றுச் சபை கூடியது. இந்த அமர்வில் கலந்து கொள்ள சிறையில் உள்ள விஜயகாந்த் அனுமதி கோரியிருந்தார். நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்ட ஒருவருக்கு அவ்வாறான ஏற்பாடுகள் செய்ய முடியாது எனத் தெரிவித்து சிறைச்சாலை அதிகாரிகள் கோரிக்கையை நிராகரித்துள்ளனர்.

2013ஆம் ஆண்டு ஜூலை மாதம் வங்கியொன்றில் நகை அடகு வைப்பதற்கு சுதர்சிங் விஜயகாந்த் சென்றிருந்தார். அந்த வங்கியில் கடமையாற்றும் அலுவலரின் திருட்டுப் போன நகைகளில் 33 பவுண் பெறுமதியான நகைகள் சுதர்சிங் விஜயகாந்திடம் இருந்தன. அதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கோப்பாய் பொலிஸார், விஜயகாந்த் உள்ளிட்ட 4 பேரைக் கைது செய்தனர். தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட சந்தேகநபர்கள் நான்கு பேரும் ஆள் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

விஜயகாந்த் உள்ளிட்ட நான்கு பேர் மீதும் 103 பவுண் நகைகளைத் திருடியமை உள்ளிட்ட நான்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கோப்பாய் பொலிஸாரால் நீதி மன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. குற்றச்சாட்டுக்களை நான்காவது எதிரி ஏற்றுக் கொண்டதையடுத்து அவருக்கு நீதிமன்றினால் ஏற்கனவே 15 மாத கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

ஏனைய எதிரிகள் மூவர் மீதான 2 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டன. 3 குற்றவாளிகளுக்கான தண்டனைத் தீர்ப்பை கடந்த 8ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் வழங்கினார்.

முற்போக்கு தமிழ் தேசியக்கட்சியின் செயலாளர் சுந்தர்சிங் விஜயகாந்த் உள்ளிட்ட இருவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அதே குற்றத்துக்கு மேலும் ஒருவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. குற்றவாளிகள் மூவரும் தலா 7 லட்சம் ரூபா இழப்பீட்டை நகையின் உரிமையாளருக்கு வழங்கவேண்டும். செலுத்தத் தவறின் 6 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்றும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று தீர்ப்பளித்தது. (ற-8)

## அதிர்ஷ்டம்...

ஈபிடிபி வேட்பாளர் மு.ரெமீடியசிடம் தோற்றார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய மேயர் தெரிவு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நேற்று சபையின் மண்டபத்தில் நடந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக இ.ஆர்னோல்ட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பாக வி.மணிவண்ணன், ஈ.பி.டி.பி. சார்பாக மு.ரெமிடியஸ் ஆகியோர் முன்மொழியப்பட்டு மேயர் பதவிக்கான போட்டியில் களமிறங்கினர்.

புதிய மேயராகத் தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக போட்டியிட்ட இ.ஆர்னோல்ட் 18 வாக்குகளைப் பெற்றார். தமிழ் தேசிய மக்கள் முன்னணி சார்பாக போட்டியிட்ட மணிவண்ணன் 13 வாக்குகளையும், ஈ.பி.டி.பி. சார்பாக ரெமிடியஸ் 13 வாக்குகளையும் பெற்றனர். இதனால் சட்ட ஒழுங்குகளின் பிரகாரம் ஒரே வாக்குகளைப் பெற்ற இருவரில் ஒருவரைத் தெரிவு செய்ய 'குலுக்கல் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

சம வாக்குகளைப் பெற்ற ரெமிடியஸ் மற்றும் மணிவண்ணனதுபெயர்கள் எழுதப்பட்டு சீட்டு குலுக்கப்பட்டது. சபையில் பகிரங்கமாக வேட்பாளர்கள் முன்னிலையில் குலுக்கல் இடம்பெற்றது. இதில் மணிவண்ணன் அல்லது ரெமிடியசை சீட்டினை எடுக்குமாறு ஆணையாளர் கேட்டார்.

ரெமிடியஸ் சீட்டினை எடுத்து ஆணையாளரிடம் ஒப்படைத்தார். அவர் எடுத்த சீட்டில் மணிவண்ணன் பெயர் இருந்ததால் அவர் மேயர் பதவிக்கான போட்டியில் இருந்து விலக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. குலுக்கல் ஆரம்பிக்கும்போது யாருடைய பெயர் எடுக்கப்படுகின்றதோ அவர் போட்டியில் இருந்து நீக்கப்படுவதாக அறிவிக்கப்படும் என ஆணையாளர் தெரிவித்திருந்தார். (உ-8)

## யார்...

பாக போட்டியிட்ட ஆர்னோல்ட் .18 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார்.

வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முன்னர் இரகசிய வாக்கெடுப்பா?அல்லது பகிரங்க வாக்கெடுப்பா? எனக் உறுப்பினர்களிடம் கேட்கப்பட்டது. பகிரங்க வாக்கெடுப்புக்கு 19 பேர் கோரிக்கை விடுத்தனர். ஆனால் பகிரங்க வாக்கெடுப்புக்கு கூட்டாக வலியுறுத்தியவர்களில் ஒருவர் மட்டும் மேயர் தெரிவுக்காக இடம்பெற்ற வாக்களிப்பில் மாறி வாக்களித்துள்ளார். அவ்வாறு வாக்களித்த கறுப்பாடு யார் என சபைக்கு வெளியே கூடிய பிரமுகர்கள் பேசிக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆகியோர் பகிரங்க வாக்கெடுப்பை வலியுறுத்தினர். த்மிழ்த் தேசிய மக்கள் முன்னணி. ஈபிடிபி. சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்பன இரகசிய வாக்கெடுப்பை வலியுறுத்தின. (ற-8)

## அனைவரோடும்...

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபையின் புதிய மேயர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் பதவிக்கான போட்டிகள் முடிந்து சபை ஒத்திவைக்கப்பட்டபோது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் பாதிப்புக்களை சந்தித்த எமது மக்களின் நலனை கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் அவர்களுக்கான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும்.

கட்சி பேதங்களுக்கு அப்பால் மக்களின் உரிமைக்காவும் நலனுக்காகவும் ஒற்றுமையுடன் அனைவரும் பயணிக்க வேண்டும். எனது தலைமையும் அவ்வாறே பயணிக்கும். இங்குள்ள வரலாற்று சின்னங்கள் மதிக்கப்பட்டு அதனுடன் சம்பந்தப்பட்டவர்களின் ஆலோசனைகளைப் பெற்றே நாம் செயற்படுவோம்.-என்றார். (ற-8)

## சாவ...

வருங்காலத்தில் அனைவரும் ஒன்றாகச் செயற்பட்டு நகரின் வளர்ச்சியை முதன்மையாகக் கொண்டு செயற்படுவோம் .

இவ்வாறு சாவகச்சேரி நகரசபையின் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்ட திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தேர்தலின் போது அனைத்து வேட்பாளர்களும் நகரின் வளர்ச்சியை மையமாக வைத்துப் பரப்புரை மேற்கொண்டிருந்தனர். அனைவரின் ஒத்துழைப்புடன் எமது ஆட்சிக் காலத்தில் சிறந்த ஒரு முன்னோடி நகரசபையாக மாற்ற அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகின்றேன்.- என்றார். (ற-9)

## சாவகச்சேரி நகர...

18 உறுப்பினர்களைக் கொண்ட நகர சபையின் தவிசாளராக திருமதி சிவமங்கை இராமநாதன் நேற்றுத் தெரிவானானர். திருமதி தயாளராசன் பவுலினா சுபோதினி, திருமதி லலிதாராணி ரவீந்திரன், திருமதி சண்முகரஞ்சினி சடாஸ்வரன் ஆகியோர் உறுப்பினர்களாகப் பதவியேற்றனர். (ற-9)

## சாவகச்சேரி...

பாலமயூரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
சாவகச்சேரி நகரசபையின் சபா மண்டபத்தில் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாஸ் பற்றிக் ரஞ்சன் தலைமையில் நேற்றுத் தெரிவு இடம்பெற்றது. சபையின் 18 உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.
தவிசாளர் தெரிவு முதலில் இடம்பெற்றது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் யோகேஸ்வரன் ஜெயக்குமாரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் திருமதி சிவமங்கை இராமநாதனும் முன்மொழியப்பட்டனர்.
தவிசாளர் பதவிக்கு இருவர் போட்டியிடுவதால் பகிரங்க வாக்கெடுப்பா அல்லது இரகசிய வாக்கெடுப்பா தேவையென மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டார். உறுப்பினர்களின் விருப்பப்பிரகாரம் பகிரங்க வாக்கெடுப்பே நடத்தப்பட்டது.
அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஆறு உறுப்பினர்களும் யோகேஸ்வரன் ஜெயக்குமாருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும் ஈபிடிபியின் 3 உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரு உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் தலா ஓர் உறுப்பினருமாக மொத்தம் 12 பேர் திருமதி சிவமங்கை இராமநாதனுக்கும் ஆதரவளித்தனர். குரல் வாக்கெடுப்பு மூலம் தெரிவு இடம்பெற்றது.
பிரதித் தவிசாளர் பதவிக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அருணாசலம் பாலமயூரனின் பெயர் முன்மொழியப்பட்டது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் ஒருவர் முன்மொழியப்பட்டபோதிலும் அவர் அதனை ஏற்றுக்கொள்ளததால் அருணாசலம் பாலமயூரன் பிரதித் தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
சாவகச்சேரி நகரசபையின் தவிசாளர் தெரிவைப் பார்வையிட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை.சேனாதிராஜா எம்.ஏ. சுமந்திரன் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், கேசவன் சயந்தன், ந.ஜெயசேகரம் ஆகியோரும் வந்திருந்தனர். (ற-8)

## பருத்தித்துறை...

என்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
தொங்கு சபைகளில் கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சி ஆட்சி அமைப்பது என்றும் ஏனைய கட்சிகள் அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்ற சிவில் சமூகத்தின் நிலைப்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் மாநகர சபையில் அதற்கு மாறான நிலைப்பாட்டை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எடுத்திருந்தமையினால், சாவகச்சேரி நகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூடிய ஆசனங்களைப் பெற்றிருந்தாலும், அங்கு கூட்டமைப்பு தவிசாளர் பதவிக்கு போட்டியிட்டு வெற்றி பெற்றது.
இந்த நிலையில் பருத்தித்துறை நகர சபையிலும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.
பருத்தித்துறை நகர சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு 6 ஆசனங்களும், கூட்டமைப்புக்கு 5 ஆசனங்களும், ஈ.பி.டி.பிக்கு 2 ஆசனங்களும், சுயேச்சைக் குழு, தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு தலா ஒரு ஆசனமும் உள்ளன. ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் கூட்டமைப்பு பருத்தித்துறை நகர சபையில் ஆட்சி அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.
பருத்தித்துறை நகர சபையின் தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான அமர்வு இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்தச் சபையிலும் வாக்கெடுப்பின் ஊடாகவே தவிசாளர் தெரிவு செய்யப்படவுள்ளார். (ற-5,26)

## ஈ.பி.டி.பி...

ணாசலம் பாலமயூரனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஈ.பி.டி.பி., ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி என்பவற்றின் ஆதரவுடன் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.
தவிசாளர் தெரிவில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் யோகேஸ்வரன் ஜெயக்குமாரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் திருமதி சிவமங்கை இராமநாதனும் முன்மொழியப்பட்டனர். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஆறு உறுப்பினர்களும் யோகேஸ்வரன் ஜெயக்குமாருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும் ஈபிடிபியின் 3 உறுப்பினர்களும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இரு உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி, தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் தலா ஓர் உறுப்பினருமாக மொத்தம் 12 பேர் திருமதி சிவமங்கை இராமநாதனுக்கும் ஆதரவளித்தனர்.
உள்ளூராட்சி சபைகளில் தொங்கு நிலை சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சித் தலைவர்கள் கூட்டம் கடந்த பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி கொழும்பில் நடை பெற்றது. இந்தக் கூட்டம் தொடர்பான செய்தி கடந்த மாதம் 24ஆம் திகதி உதயனில் வெளியாகியிருந்தது.
"கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், செயலர் ந.சிறிகாந்தா, புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், ராகவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.
ஈ.பி.டி.பி. மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடன் பேச்சு நடத்தக் கூடாது என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார். கூட்டமைப்பு ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு தெரிவிக்கும் கட்சிகளுடன் மாத்திரமே பேசுவது என்ற முடிவும் எடுக்கப்பட்டது"என்று அந்தச் செய்தி பிரசுரமாகியிருந்தது. (ற)

## தேசியத்துக்கு...

கியே நகர்த்தியுள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.
யாழ்ப்பாண மாநகரசபை, சாவகச்சேரி நகர சபைகளுக்கான முதல்வர் தெரிவு தொடர்பாக மக்கள் முன்னணியால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசியத்துக்கு எதிராக செயற்படுகின்றது. பதவிகளுக்காக இனப் படுகொலையாளிகளுடன் இணைந்து தமிழினத்துக்குத் துரோகமிழைக்கின்றது என்பதை நாம் பல்வேறு தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம்.
இன்றும் (நேற்று) அவர்களின் உண்மை முகத்தை துகிலுரித்து காண்பிப்பதற்கான தந்திரோபாய நடவடிக்கையாக யாழ். மாநகர சபை மற்றும் சாவகச்சேரி நகர சபைகளில் முதல்வர் தெரிவில் நாம் போட்டியிட்டோம்.
நாம் முன்னெடுத்துவந்த கொள்கை வழியிலான பதவிகளுக்கு சோரம் போகாத அரசியல் நிலைப்பாட்டின் காரணமாக நாங்கள் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்தபின் சபைகளில் ஆட்சியமைப்பதில் எந்தக் கட்சியுடனும் பேச்சு நடத்தப்போவதில்லை, அவர்களின் ஆதரவைக் கோரப்போவதில்லை என்ற நிலைப்பாட்டை நாம் கடைப்பிடித்தோம்.
தமிழினத்தை மாறி மாறி இனவழிப்பு செய்த சிங்கள பேரினவாத கட்சிகளுடனும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட ஒட்டுக் குழுக்களுடனும் பதவிகளுக்காக கூட்டிணைந்தமை நாம் கூட்டமைப்புப் பற்றி கூறிவரும் கருத்துக்கள் உண்மையானவை என்பதை நிரூபித்துள்ளது.
தற்போது தமிழ் தேசிய வாதிகள் ஒருபுறமாகவும், தமிழ் இன விரோதிகள் மறுபுறமாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள்.
எமக்கு வழங்கிய ஆணையை ஏற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தமிழ்த் தேசியப் பற்றுறுதியுடன் அரசியல் பயணத்தை முன்னெடுக்கும். தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அயராது உழைப்போம். நாம் எமக்குக் கிடைத்த அரசியல் களங்களைப அதற்குப் பயன்படுத்துவோம்.
இன்றைய தமிழ்த் தேசிய அரசியல் கள யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு தமிழர் விரோத சக்திகளிடமிருந்து எம்மினத்தை பாதுகாத்துக்கொள்ள அனைத்து மக்களும் எமது அரசியல் இயக்கத்துக்குப் பின்னால் அணிதிரள வேண்டும் என்று உரிமையோடு வேண்டுகின்றோம்.என்றுள்ளது. (ற-21)

## வடக்கில்...

ணத்தில் உள்ள அனைத்துச் சபைகளையும் கைப்பற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் பெரும்பாலான உள்ளூராட்சி சபைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக இடங்களைக் கைப்பற்றியிருந்தது. பெண் தவிசாளரைத் தெரிவு செய்வதில் கட்சி மேலிடம் எடுத்த முயற்சியின் பயனாக சாவகச்சேரி நகரசபைக்கு பெண் பிரதிநிதிக்கு தவிசாளர் பதவி வழங்கியுள்ளோம்.
உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளின்படி எந்தந்த சபைகளை கட்சிகள் கைப்பற்றியதோ அந்தந்த கட்சிகளுடன் இணைந்து நிர்வாகத்தை மேற்கொள்ள வேண்டும் என்று கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் கட்சித் தலைமை அறிவித்திருந்தது. நேற்றுமுன்தினம்வரை எந்தவொரு கட்சியும் எமது கட்சியின் கோட்பாட்டை மதித்து அதற்கான அறிக்கைகளை வெளியிடவில்லை. மாற்றுக் கருத்துக்களையே தெரிவித்து வந்தனர்.
கட்சித் தலைவர் என்ற முறையில் எமது கட்சித் தலைவர் மாவை.சேனாதிராசா ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் அலைபேசி மூலம் அழைப்பு விடுத்திருந்தார். அவரும் நிலையான பதிலைத் தரவில்லை.
தேர்தலின்போது கூடிய ஆசனங்களைப் பெற்ற கட்சிகள் நிர்வாகத்தை நடத்தவேண்டுமென நாம் விரும்பியபோதும் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. நேற்று யாழ்.மாநகரசபை மேயர் பதவிக்கு மும்முனைப் போட்டியை உருவாக்கி எமது கட்சிக் கோட்பாட்டுக்கு மாறாகச் செயற்பட்டுள்ளனர். அதனால் வடமாகாணத்தில் உள்ள அனைத்துச் சபைகளையும் கைப்பற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்-என்றார். (ற-9)

## வல்வெட்டித்துறை...

அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள அதேவேளை, சுயேச்சைக் குழுவும் ஆட்சி அமைப்பதற்கான பேரம் பேசுதல்களில் இறங்கியுள்ளது.
வல்வெட்டித்துறை நகர சபையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு 7 ஆசனங்களும், சுயேச்சைக் குழுவுக்கு 4 ஆசனங்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஈ.பி.டி.பிக்கு தலா 2 ஆசனங்களும் உள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தலா ஓர் ஆசனம் உள்ளது.
சுயேச்சைக்குழு ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் முனைப்பில் உள்ளது. கூட்டமைப்பும் அதேபோன்று ஆட்சி அமைப்பதற்கு நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. நேற்று இரவு வரையில் கூட்டமைப்பும், சுயேச்சைக் குழுவும் போட்டியிடவுள்ளன என்பது உறுதியாகியுள்ள நிலையில், இந்த இரு தரப்பையும் யார் ஆதரிக்கவுள்ளார்கள் என்பது தொடர்பில் எந்த முடிவும் நேற்று இரவு வரையில் எடுக்கப்படவில்லை. (ற-5,26)

## யாழ்...

முறைமையில் நடத்தப்பட்ட முதலாவது உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெரும் வெற்றியைப் பெறத் தவறியிருந்தது. அனேகமான இடங்களில் தொங்கு சபைகளே உருவாகின. இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சபைகளில் ஆட்சியமைப்பதை வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது.
யாழ். மாநகரை மேயரைத் தெரிவு செய்வதற்காக சபையின் உறுப்பினர்கள் சபையில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிறஞ்சன் தலைமையில் சபா மண்டபத்தில் நேற்றுக்கூடினர்.
தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பாக இ.ஆர்னோல்ட், தமிழ் தேசிய மக்கள் முன்னனி சார்பாக வி. மணிவண்ணன், ஈ.பி.டி.பி. சார்பாக ரெமீடியஸ் ஆகியோரின் பெயர்கள் மேயர் தெரிவுக்காக முன்மொழியப்பட்டன.
தெரிவுக்கான வாக்கெடுப்பு இரகசியமான முறையில் இடம்பெற வேண்டும் என்று அதிகமான உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்ததால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.
முதல் சுற்று வாக்கெடுப்பில் ஆர்னோல்ட்டுக்கு 18 வாக்குகளும் ரெமீடியசுக்கு 13 வாக்குகளும் மணிவண்ணனுக்கு 13 வாக்குகளும் கிடைத்தன.
ஈபிடிபி மற்றும் மக்கள் முன்னணி ஆகியவற்றுக்கு சமமான வாக்குகள் கிடைத்ததை அடுத்து குலுக்கல் சீட்டு போட்டுப் பார்க்கப்பட்டது. அதில் ரெமீடியஸ் வெற்றி பெற்றதால் மணிவண்ணன் போட்டியில் இருந்து நீக்கப்பட்டார்.
இதை அடுத்து ஆர்னோல்ட் மற்றும் ரெமீடியசுக்கு இடையில் மீண்டும் போட்டி நடத்தப்படும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்தார். ஆனால், அதற்கிடையில் தமது கட்சிகளுடன் இந்த விடயம் குறித்துக் கலந்துரையாட அவகாசம் தருமாறு கோரினர். 10 நிமிடங்கள் அவகாசம் வழங்கப்பட்டது. தமக்குள்ளும் தலைமையுடனும் பேசிய ஈபிடிபியினர் போட்டியில் இருந்து தமது வேட்பாளரான ரெமீடியஸை விலக்கிக்கொள்கின்றோம் என்று அறிவித்தனர். இதனை அடுத்து இ.ஆர்னோல்ட் யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயராகத் தெரிவானார். (உ-8)

## வீதியோரத்தில்...

சந்திக்கு அருகில் நேற்று நடந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்தார். வீதியோரம் வீசப்பட்டிருந்த தென்னோலையில் ஏறிய மோட்டார் சைக்கிள் நிலைகுலைந்ததால் இந்த விபத்து நடந்தது என்று தெரிவிக்கப்படுகின்றது.
மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த விஜயானந்தன் சசிகலா (வயது-53) என்பவரே உயிரிழந்துள்ளார்.
அதிகாலை 5 மணியளவில் மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோயிலுக்குச் செல்வதற்காகக் கணவருடன் அவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தார். எதிரே வந்த வாகனத்துக்கு வழிவிடுவதற்காக வீதியோரம் கணவர் மோட்டார்சைக்கிளைச் செலுத்தியுள்ளார். வீதியோரம் வீசப்பட்டிருந்த தென்னோலையில் ஏறியதால் மோட்டார் சைக்கிள் நிலைகுலைந்தது. சசிகலா தூக்கி வீசப்பட்டார். தலைக்கவசம் அணியாத நிலையில் அவருக்குத் தலையில் காயம் ஏற்பட்டது.
அவர் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். சிகிச்சை பயனின்றி காலை 6.45 மணியளவில் உயிரிழந்தார்.
உயிரிழப்புத் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கையிட்டனர். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி மூலம் விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
வீதியோரம் அமைக்கப்படும் தண்ணீர் பந்தல்களுக்கு உபயோகித்த தென்னோலைகள் வீதியோரம் பாதுகாப்பற்ற முறையில் வீசப்படுகின்றன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ற-9)

## கேரதீவில்...

தில் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம், நாவாந்துறையைச் சேர்ந்த அடைக்கலநாதன் கொன்சலாஸ் (வயது- 41) என்பவரே உயிரிழந்தார்.
கொன்சலாஸ் நாவாந்துறையில் உள்ள உறவினர்களுடைய வீட்டுக்குச் சென்றுவிட்டு கிளிநொச்சியிலுள்ள தனது வீடு நோக்கிப் பயணித்தபோதே விபத்து நடந்துள்ளது.
கேரதீவுப் பாலத்துக்கு அண்மித்த பகுதியில் சமிக்ஞை இன்றி நின்றிருந்த தண்ணீர் பவுசருடன் மோதுண்டு கீழே வீழ்ந்த அவரை பின்னால் வந்த கார் மோதியது என்று கூறப்படுகின்றது. விபத்துக்குள்ளான கொன்சலாஸ் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், அவர் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். விபத்துத் தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-21)

## சுருண்டது ஆஸி.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸில் வெறும் 107 ஓட்டங்களில் சுருண்டு, 322 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது ஆஸ்திரேலிய அணி.
கடந்த 22ஆம் திகதி வியாழக்கிழமை இந்த ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி 311 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது.
பந்துவீச்சில் கம்மின்ஸ் 4 இலக்குகளையும், ஹசில்வூட், லையன் இருவரும் தலா 2 இலக்குகளையும், மார்ஸ், ஸ்ராக் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி முதல் இன்னிங்ஸுக்காக 255 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பான்குரொப்ட் 77 ஓட்டங்களையும், லையன் 47 ஓட்டங்களையும், பெய்ன் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ரபாடா, மோர்கல் இருவரும் தலா 4 இலக்குகளையும், பிளன்டர் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
இரண்டாவது இன்னிங்ஸுக்காக தென்னாபிரிக்க அணி சகல இலக்குகளையும் இழந்து 373 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மார்க்ரம் 84 ஓட்டங்களையும், குயின்டன் 65 ஓட்டங்களையும், வில்லியர்ஸ் 63 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஹசில்வூட், கம்மின்ஸ், லையன் மூவரும் தலா 3 இலக்குகளையும், ஸ்ராக் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
430 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி, 107 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து 322 ஓட்டங்களால் வெற்றிபெற்றது தென்னாபிரிக்கா.
பந்துவீச்சில் மோர்கல் 5 இலக்குகளையும், மகாராஜ் 2 இலக்குகளையும், ரபாடா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். மோர்கல் ஆட்டநாயகனானார்.

(ம)



# சிமித்துக்கு எதிர்ப்பலை ஊடகங்கள் கடும் வசை




தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் பந்தை திட்டமிட்டுச் சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கிய ஆஸ்திரேலிய அணித்தலைவர் சிமித்தின் செயலை அந்த நாட்டு ஊடகங்கள் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. சிமித் மட்டுமல்ல, இனிமேல் எந்த ஆஸ்திரேலிய வீரரும் இதுபோன்ற காரியத்தைச் செய்யத் துணியக்கூடாத அளவுக்கு கடும் வசையாக அனைத்துச் செய்திகளும் அமைந்துள்ளன.
தென்னாபிரிக்கா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்று முன்தின மூன்றாம் நாள் ஆட்டத்தின்போது தென்னாபிரிக்க அணி துடுப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது, ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் பான்குரொப்ட் பந்தை திட்டமிட்டுச் சேதப்படுத்தினார். இந்தக் குற்றத்தை அணித் தலைவர் சிமித் ஏற்றுக்கொண்டார். தனக்குத் தெரிந்தே இந்தச் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார். இதையடுத்து அவரது தலைமைப் பொறுப்பு பறிக்கப்பட்டதுடன் ஆஸ்திரேலிய ஊடகங்கள் சிமித்தை மிகக் கடுமையாக வசைபாடியுள்ளன.

### தி ஆஸ்திரேலியன்

தி ஆஸ்திரேலியன் என்ற நாளேடு 'சிமித்தின் அசிங்கங்கள்' என்ற தலைப்பில் மிக மோசமாக வர்ணித்துள்ளது. சிமித்தின் இந்த மோசடிச் செயல் ஆஸ்திரேலிய கிரிக்கெட்டின் கால் முதல் தலையில் அணியும் ஹெல்மெட் வரை பாதித்துவிட்டது. கிரிக்கெட் ஆஸ்திரேலியாவின் தலைவர் ஜேம்ஸ் சதர்லாந்து 20 ஆண்டுகளாக அந்தபதவியில் இருந்தும், இதுபோன்ற கெட்டுப்போன கிரிக்கெட் கலாசாரத்தை ஒழிக்க அவரால் முடியவில்லை. இந்த அசிங்கமான செயலால், நாட்டுக்குப் பெரிய அவமானம் என்றுள்ளது.

### சிட்னி டெய்லி டெலிகிராப்

'சிட்னி டெய்லி டெலிகிராப்' நாளேடு, 'சிமித்தின் செயல் என்பது அந்த நேரத்தில் எடுத்த பைத்தியக்கார முடிவு அல்ல. திட்டமிட்டு எடுக்கப்பட்ட முட்டாள்தன முடிவு. வெற்றி பெற வேண்டும் என்பதற்காக ஒழுக்க நெறிகளை மீறி நடந்த சம்பவத்தால், கிரிக்கெட் உலகத்தின்முன் ஆஸ்திரேலியா தலைகுனிந்து நிற்கிறது. ஆஸ்திரேலிய அணியின் கண்ணியம், மரியாதையும் ஒருபோதும் நீண்டகாலத்துக்கு மீளப்போவதில்லை' என்று குறிப்பிட்டுள்ளது.

### சிட்னி ஹெரால்டு

'சிட்னி ஹெரால்டு' நாளேடு, ஆஸ்திரேலிய அணியின் தலைவர் சிமித், சதிக்குள் விழுந்துவிட்டார். அந்த சதிக்குள் விழுந்ததற்கு தகுந்த விலையை இப்போது கொடுத்திருக்கிறார். ஆஸ்திரேலியாவுக்கு இந்த சுற்றுப் பயணம் மிகவும் மோசமானதாக அவப்பெயர் பெற்றுத்தரக்கூடியதாக அமைந்துள்ளது. ஒரு வீரரின் செயற்பாடு ஒட்டுமொத்த அணியின் மதிப்பையும் கெடுத்துவிட்டது. இதனால், ஆஸ்திரேலிய அணியின் மதிப்பு எப்போதும் இல்லாத அளவுக்கு தாழ்ந்துவிட்டது. இதை மீட்டெடுக்க நீண்ட காலம் தேவைப்படும்' எனத் தெரிவித்துள்ளது. (ம)



# இங்கிலாந்தை வீழ்த்தி நியூசிலாந்து வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்னிங்ஸாலும் 49 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது நியூசிலாந்து அணி.
இரண்டு ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலாவது ஆட்டம் கடந்த 22ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமானது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி வெறும் 58 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. ரூட், ஸ்ரோக்ஸ், பரிஸ்ரெளவ், மொயின் அலி, புரோட் ஐவரும் ஓட்டமெதையும் பெறாமல் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில் போல்ட் 6 இலக்குகளையும், சவுத்தி 4 இலக்குகளையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 8 இலக்குகளை இழந்து 427 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது, நிக்கொல்ஸ் ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்களையும், வில்லி யம்சன் 102 ஓட்டங்களையும், வற்லிங் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அன்டர்சன், புரோட் இருவரும் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து நேற்றுமுன்தின நான்காம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மேலதிகமாக 7 இலக்குகள் கைவசம் இருந்தன. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 237 ஓட்டங்களை இங்கிலாந்து அணி மேலதிகமாகப் பெறவேண்டிய கட்டாயம் இருந்தது.
நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 320 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்ததை அடுத்து, இன்னிங்ஸாலும் 49 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றது நியூசிலாந்து அணி. (ம)

# நல்லூர் பிரதேச செயலக அணி மேசைப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாண மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான ஆண்களுக்கான குழு மேசைப்பந்தாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.



வை.எம்.ஏச்.ஏ. உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில், நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மோதியது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

(ம-422)



# நல்லூர் செயலகம் கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 27
யாழ்ப்பாண மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான பூப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி சம்பியனானது.
அரியாலை சரஸ்வதி உள்ளக விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை எதிர்த்துப் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி மோதியது. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)

# இன்றைய மோதல்கள்

## யங்கம்பன்ஸின் கால்பந்தாட்டம்

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவகுமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

## கொலின்ஸ் வி.கழக கால்பந்தாட்டம்

குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். பீற்றர்ஸ் அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் அணியும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சிறி அம்பாள் அணியை எதிர்த்து சென். தோமஸ் அணியும் மோதவுள்ளன.

(ம-422)

# தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடர் மேர்கன்ரைல் அணி சம்பியனானது






யாழ்ப்பாணம், மார்ச் 27

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய பெண்களுக்கான தேசியமட்ட வலைப்பந்தாட்டத்தில் கொழும்பு மேர்கன்ரைல் அணி சம்பியனானது.

யாழப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட வலைப்பந்தாட்ட சங்க 'ஏ' அணியை எதிர்த்து கொழும்பு மேர்கன்ரைல் அணி மோதியது. நான்கு கால்பகுதிகள் கொண்ட ஆட்டத்தில் முறையே 15:4, 31:9, 43:13 என ஆதிக்கம் செலுத்தி ஆட்ட நேர முடிவில் 53:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது மேர்கன்ரைல் அணி.

(ம- 23-422)

# இரட்டையர் மேசைப்பந்தாட்டத்தில் யாழ். பிரதேச செயலகம் சம்பியன்



யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாண மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவினரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டத்தில் ஆண்கள் இரட்டையர் பிரிவில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணி சம்பியனானது.

வை.எம்.ஏச்.ஏ. உள்ளக விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்துவம் செய்த சியாம்ராஜ், மேஸ்க் ஆகியோரை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை பிரதிநிதித்துவம் செய்த துஷ்யந்தன், ஹரிப்பிரகாஷ் ஆகியோர் மோதினர்.

இதில் முதலாவது செற்றில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியினர் 13:11 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றனர். ஆனால் அடுத்த இரண்டு செற்களிலும் ஆதிக்கம் செலுத்திய யாழ் பிரதேச செயலக அணி 11:7, 11:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தனர்.

(ம-422)

# நல்லூர் செயலகம் கிண்ணம் வென்றது



யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவின ரால் நடத்தப்பட்ட பிரதேச செயலக அணிகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டத்தில் ஆண்களுக்கான தனிநபர் பிரிவில் நல்லூர் பிரதேச செயலக அணி கிண்ணம் வென்றது.

வை.எம்.ஏச்.ஏ. உள்ளக விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியை பிரதிநிதித்துவம் செய்த டனுஸை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்துவம் செய்த கிருசிகன் மோதினார்.

இந்த ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணியைப் பிரதிநிதித்துவம் செய்த டனுஸ் 11:8, 11:7, 12:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தார்.

(ம-422)



# தேசிய வலைப்பந்தாட்டத்தில் ஸ்ரேட் சேவிஸ் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

இலங்கை வலைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடரில், ஸ்ரேற் சேவிஸ் அணி வெண்கலப்பதக்கம் வென்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட 'பி' அணியை எதிர்த்து ஸ்ரேற் சேவிஸ் அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய ஸ்ரேற் சேவிஸ் அணி, நான்கு கால் பாதிகளிலும் முறையே 13:3, 21:10, 32:16, 42:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தது.

(ம-422)

# பீற்றர்ஸ், நியூஸ்ரார் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், மார்ச் 27

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். பீற்றர்ஸ், நியூ ஸ்ரார் அணிகள் வெற்றிபெற்றன. யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் பொற்பதி சென். பீற்றர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் சென். பீற்றர்ஸ் அணி வெற்றிபெற்றது. மாலை 4.30 மணிக்கு இடம் பெற்ற ஆட்டத்தில் வரணி நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் நியூ ஸ்ரார் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# அமெரிக்கத் தொடருக்காக முழுத் தகுதியுடன் நடால்



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற பகிரங்கத் தொடர்களில் ஒன்றான, அமெரிக்கத் தொடர் இன்னும் சில தினங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தத் தொடரில் முழு உடற்தகுதியுடன் களமிறங்குவேன் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார் நடால்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் காயமடைந்திருந்த நடால், அண்மைக்காலமாக சில தொடர்களைத் தவறவிட்டிருந்தார். குறிப்பாக அமெரிக்கப் பகிரங்கத் தொடருக்கான ஆயத்தத் தொடர்களாகக் கருதப்படும் மியாமி, இன்டியன் வேல்ஸ் தொடர்களில் நடால் விளையாடவில்லை. இதனால் அவர், அமெரிக்கப் பகிரங்கத் தொடர்களில் களமிறங்குவதற்கான சந்தர்ப்பம் குறைவு என்று கருதப்பட்டது. இந்த நிலையில், தான் முழு உடற்தகுதியுடன் உள்ளதாக நடால் தெரிவித்தார்.

"பன்னாட்டு ரென்னிஸ் அரங்குக்குத் திரும்பும் காலம் வெகு தொலைவில் இல்லை. அமெரிக்கத் தொடருக்கு முன்பாக மீண்டும் காயம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே மியாமி, இன்டியன் வேல்ஸ் தொடர்களில் இருந்து விலகியிருந்தேன். ஆதலால் அமெரிக்கத் தொடரில் களமிறங்குவேன்" என்று நடால் மேலும் தெரிவித்தார். (ம)



## ஐ.பி.எல். தொடர் முடிவடைந்ததும் இங்கிலாந்து செல்கிறார் கோக்லி

இங்கிலாந்துக் கழகங்களுக்காக விராட் கோக்லி, விளையாடவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவர் ஐ.பி.எல். தொடர் முடிவடைந்த தும் அங்கு செல்லவுள்ளார் என்று தகவல் வந்துள்ளது.

இங்கிலாந்தில் அடுத்த வருடம் உலகக்கிண்ணத்தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இந்திய அணி சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டுமாயின் அந்த அணியின் வீரர்கள் இந்த வருடம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள கழகங்களுக்கு இடையிலான தொடரில் விளையாட வேண்டும் என்று பரவலாகத் தெரிவிக்கப்பட்டது. ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல், இவ்வாறான கருத்தை அடிக்கடி வெளிப்படுத்தி வந்தார். இந்த நிலையில், இங்கிலாந்துத் தொடரில் களமிறங்கவுள்ளார் இந்திய அணித்தலைவர் கோக்லி. இந்தியாவின் வேகப்பந்து வீச்சு அயல் நாட்டு ஆடுகளங்களில் பலப்பட்டுள்ள நிலையில், துடுப்பாட்ட வரிசையைப் பலப்படுத்த கோக்லி அங்கு செல்கிறார். இதன்படி அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ள ஐ.பி.எல். தொடர் முடிவடைந்ததும் கோக்லி இங்கிலாந்துக்குச் செல்வார் என்று தற்போது தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே இசாந் சர்மா, புஜாரா ஆகியோர் இங்கிலாந்து ஆடுகளங்களில் விளையாடி வந்தாலும் அவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான அணிகளில் இல்லை. கோக்லி பெரும்பாலும் சர்ரே அணிக்காகவே விளையாடுவார் என்று கருதப்படுகிறது. (ம)

## முழுமையான கால்பந்தாட்ட வீரராக இன்னும் உருவாகவில்லை போல்ட்



8 ஒலிம்பிக் தங்கப்பதக்கங்கள் வென்று உலகசாதனை நாயகனாகத் திகழும் ஜமைக்காவின் உசைன் போல்ட், ஓட்டத்திலிருந்து ஓய்வு பெற்றாலும் தனது ஓட்டத்தை கால்பந்தாட்டத்தில் காட்ட முயற்சி செய்து வருகிறார். கிரிக்கெட் ஆட்டம் மீதும் உசைன் போல்ட்டுக்கு பெரிய ஆர்வம் உண்டு என்பதை அவரே பல முறை கூறியுள்ளார். இந்த நிலையில் உயர்மட்ட கால்பந்தாட்டத்துக்கு உசைன் போல்ட் இன்னும் முழுமையாகத் தயாராகவில்லை என்று பொருஸ்ஸியா டொர்ட்மன்ட் தலைமைப் பயிற்சியாளர் பீற்றர் தெரிவித்தார்.

"அது வழிமுறையையும் நகர்தலையும் பொறுத்தது. அனைத்தையும் விட அவர் உற்சாகமாக பயிற்சி செய்து வருகிறார். இது முக்கியம். அவர் திறமைசாலி தான். ஆனால் உயர்மட்ட கால்பந்தாட்டத்தில் களமிறங்க இன்னும் கொஞ்சம் அவர் பணியாற்ற வேண்டியுள்ளது" என பீற்றர் மெலும் தெரிவித்தார். (ம)

## உலகக்கிண்ணம் வெல்ல இதுவே இறுதி வாய்ப்பு என்கிறார் மெஸ்ஸி

ரஷ்யாவில் இந்த வருடம் இடம்பெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத்தை ஆர்ஜென்ரீனா வெல்லாவிட்டால், உலகக் கிண்ணத்தைவெல்ல தனக்குஇன்னுமொருவாய்ப்பு கிடைக்காது என்று தெரிவித்தார் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவர் மெஸ்ஸி.



பிரேசிலில் 2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற உலகக்கிண்ணம், இரண்டு கோப்பா அமெரிக்கா தொடர் என மூன்று முக்கிய தொடர்களின் இறுதி ஆட்டங்களில் கடந்த மூன்றாண்டுகளில் ஆர்ஜென்ரீனா தோற்றுள்ளது. இதையடுத்தே இவ்வாறான கருத்து மெஸ்ஸியிடம் இருந்து வந்துள்ளது.

"மூன்று இறுதியாட்டங்களுக்கு நாம் தகுதி பெற்றிருந்த போதிலும் சம்பியனாக முடியவில்லை. வீரர்கள் மனதளவில் மிகவும் காயப்பட்டு தற்போது புத்துணர்ச்சி பெற்றுள்ளனர். எங்கள் மீது நியாயமற்ற விமர்சனங் கள் வைக்கப்படுகின்றன. நாங்கள் உலகக்கிண்ணத் தொடரைக் கைப்பற்றாவிட்டால் எம் மீது விமர்சனக் கணைகள் இன்னும் அதிகமாகத் தொடுக்கப்படும். அத்துடன் உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றுவதற்கு எனக்கு இருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவென்றே கருதுகிறேன். எனவே இந்தத் தொடரில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவது அவசியம்" என மெஸ்ஸி மேலும் தெரிவித்தார். (ம)



நடப்பு வருட ஐ.பி.எல். தொடர் ஆரம்பமாவதற்கு இன் னும் சில தினங்களே எஞ்சியுள்ளன. இந்தத் தொடருக்கான பயிற்சி முகாம்களை ஒவ்வொரு அணியும் தற்போது மிகத் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன. இரண்டு வருடத் தடைக்குப் பின்னர் களமிறங்கியுள்ள சென்னை அணி, கடும் பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. (ம)

## புதுக்குடியிருப்பு மத்திய அணி புளூ போய்ஸை தோற்கடித்தது

இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரில், 190 ஓட்டங்களால் வெற்றிபெற்றது புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழக அணி.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழக அணியை எதிர்த்து முள்ளிய வளை புளூ போய்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற புதுக்குடியிருப்பு மத்திய சமுதாயக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 3 இலக்குகளை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக லக்கீரன் ஆட்டமிழக்காமல் 109 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முள்ளியவளை புளூ போய்ஸ் அணி, 17.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 82 ஓட்டங்களை மட்டும் பெற்றது. (ம)


## மரண அறிவித்தல்



தோற்றம் 16.03.1948 மறைவு 25.03.2018

### திருமதி தவமணிதேவி சந்திரசேகரர்

(கிளியக்கா)

பண்டத்தரிப்பு செட்டிக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும், செட்டியார்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தற்போது வட்டுக்கோட்டையில் வசித்து வந்தவருமாகிய திருமதி தவமணிதேவி சந்திரசேகரர் (25.03.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் செட்டிக்குறிச்சியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா பார்வதி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் பொன்னம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சந்திரசேகரரின் அன்புமனைவியும் கிருஷ்ணவேணி (கணக்காளர், சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம்), ஹரண் (கனடா) றஜினி (றமணி, கொழும்பு) ஹீரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கோபாலகிருஷ்ணன், மதுரா, சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் மாதங்கி, பிரியங்கி, விஷ்னுபிரியன், விருஷ்ணி, அஹரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ராஜேந்திரன், ஜெயரஞ்சி, வசந்தகுமாரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடலானது அவரின் விருப்பத்திற்கு அமைவாக யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவபீடத்திற்கு (25.03.2018) மாலை 6 மணியளவில் கையளிக்கப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அத்தியடி பிள்ளையார் கோயிலடி,
வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை,
077 9451289, 077 150 9268

தகவல்:
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.